

# நந்திபுரம்

குடவாயில் பாலசுப்ரமணியன்

INTACH PUBLICATIONS

# நந்திபுரம்

ஆசிரியர்

குடவாயில் பாலசுப்ரமண்யம், எம்.ஏ.

பதிப்பாசிரியர்

வித்யாவாசஸ்பதி, சிலைமீட்ட செல்வர்

டாக்டர் இரா. நாகசாமி, எம்.ஏ., பி.எச்.டி.

இன்டாக் நிறுவளப் பதிப்பு

சென்னை

1992

இன்டாக் வெளியீடு
முதற்பதிப்பு : 1992

**(The Indian National Trust
for Art and Cultural Heritage)**

ஆசிரியர் : **குடவாயில் பாலசுப்ரமண்யம்**

© ஆசிரியருக்கே

விலை : ரூ.

பதிப்பாசிரியர் : வித்யாவாசஸ்பதி, சிலை மீட்ட செல்வர்
டாக்டர் இரா. நாகசாமி,
இன்டாக் தென்னிந்திய ஆலோசகர்.

கிடைக்குமிடம் : **Adviser, INTACH**
**22, 22rd Cross Street,**
**Besant Nagar, Madras-90**
**Phone :4916005**

அச்சகம் : சர்மாஸ் சானடோரியம் ப்ரஸ்
புதுக்கோட்டை 622 001
போன் : 2659

# பதிப்பாசிரியர் முன்னுரை

இந்தியக்கலை பண்பாடுகளைப் பராமரிக்கவும் அதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கவும் நிறுவப்பட்ட ஒரு தேசிய நிறுவனம் INTACH. இது இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பன்முகத் தாலும் நம் பாரம்பர்யத்தைக் காக்க, சுற்றுப்புறச் சூழல் களைப் பேணிக்காக்க ஆவன செய்து வருகிறது. மத்திய மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு பல பாதுகாப்புத் திட்டங்களைச் செவ்வனே செய்துவருகிறது. இதன் முயற்சியால் காசியிலுள்ள கங்கைப் பேராற்றங்கரை தூய்மைப்படுத்தப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளது. இதுபோன்ற பணிகளில் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அரசுக்கு ஆக்க பூர்வமாகக் குரல் கொடுக்கவும், பணி புரிந்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதற்குக் கிளைகள் ஏற்ப்டுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஒரு கிளை திருமதி டெபி தியாகராஜனைக் கன்வீனராகக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றது. இது தொன்மையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்கள் அல்லது பகுதி களைத் தொன்மை மாறாது பாதுகாக்க ஆய்வுத் திட்டங்கள் மேற் கொண்டு அரசுக்குப் பரிந்துரைகள் வழங்குகிறது. மாமல்லபுரத்தை இவ்வாறு கலைத்தொன்மை மாறாது காக்க ஆய்வுத்திட்டம் தயாரித்து அரசுக்கு அளித்துள்ளது. இதன் பரிந்துரைகள் இப் பொழுது செயலாக்கப்பட்டு வருகின்றன. அதுபோலப் பண்டைய மயிலாப்பூரையும் ஆய்வு மேற்கொண்டுள்ளது. சென்னையில் உள்ள ராஜாஜி ஹால் முதலிய பண்டைய கட்டிடங்களையும் ஆய்வு செய்து வருகின்றது.

ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா ஆகிய தென்னிந்தியா முழுவதும் இன்டாக் நிறுவனம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஆலோசகராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். கோயில்களில் உள்ள பண்டைய ஓவியங்களைத் தூய்மை செய்து ரசாயன முறையில் பாதுகாக்கத் திட்டம் மேற்கொண்டு, தில்லை சிவகாமியன்னை கோயில் மண்டபத்தில் விதான ஓவியங்களைப் பாதுகாத்துள்ளேன். காஞ்சி வரதராஜர் கோயிலில் சுண்ணக் கலவையால் நூறு ஆண்டுகளுக்கு மேலாக மறைந்து கிடந்த ஓவியங் களை வெளிக் கொணர்ந்துள்ளேன். தில்லைச் சிற்றம்பலவன் கோயிலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளப் பள்ளி கல்லூரி மாணவர் களைக் கொண்டு தூய்மையாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கலைப் பாரம்பர்யத்தைப் பாதுகாக்க வேண்டுமெனில் மக்கள் அவற்றின் வரலாற்றுச் சிறப்பை அறிய நூல்கள் தேவை. அவ்வப்பகுதி மொழிகளில் நூல்கள் வரவேண்டும் என நான் பரிந்துரை செய்ததை இன்டாக் நிறுவனச் செயலர் திரு மார்த்தாண்டசிங்கும், திரு. B.K. தாபா அவர்களும் ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழப் பேரரசர்கள் தஞ்சாவூரைக் கைப்பற்றி அதை ஒரு பெருந்தலைநகராக்கி, சோழ சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கும் முன்னர், இப்பகுதியில் பெரும் தலைநகராகத் திகழ்ந்தது நந்திபுரம் என்னும் நகர். சோழப் பேரரசு நிறுவிய பிறகு கூட இரண்டு மூன்று நூற்றாண்டுகள் மிகச் சிறந்த நகராகத் திகழ்ந்தது இவ்வூர். பின்னர் அது இருந்த இடமே தெரியாமல் மறைந்து போயிற்று. ஆதலின் ஆராய்ச்சியாளர்கள் தலைநகராகத் திகழ்ந்த நந்திபுரம் எது, எங்கிருக்கிறது என்று ஆய்வு செய்து பழையாறைக்கு அருகில் இப்பொழுது நாதன் கோயில் என்று அழைக்கப்பெறும் ஊர்தான் நந்திபுரம் என்று முடிவுக்கு வந்தனர். அதையே எல்லோரும் இதுகாறும் ஏற்று வந்துள்ளனர்.

பல்லவர் கலைக்கும், சோழர் கலைக்கும் என்ன தொடர்பு என்பது ஓர் ஆராய்ச்சிக்குரிய பொருள். சிலர், பல்லவர் கலைக்கும் சோழர் கலைக்கும் தொடர்பு இல்லை, சோழர் கலை தனித்ததொரு கலை என வாதாடுகின்றனர். பல்லவர் கலைதான் சோழர் கலைக்கு வித்திட்டது என்பது மாற்றுக் கருத்து. அண்மையில் தஞ்சைக்கருகில் பல்லவர்கலை எந்த அளவுக்குச் சோழர்காலத் தொடக்கத்தில் நிறைந்திருந்தது என்று காட்ட, நண்பர் குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்களைக் கண்டியூர் கோயிலுக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள கல்வெட்டுகளில் நிருபதுங்க பல்லவனின் கல்வெட்டைக் காண்பித்தேன். அதோடு கீண்டியூரைப் பற்றி விரிவாக ஆராயச் சொன்னேன். அவரோ அத்துடன் அருகில் உள்ள ஊர்களுக்கும் சென்று, கள ஆய்வு நடத்தி அரிய பல செய்திகளை வெளிக் கொணர்ந்திருக்கிறார். பல கல்வெட்டுகளையும் ஆய்ந்திருக்கிறார். கலைச்செல்வங்களையெல்லாம் நம் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இந்த ஆய்வின் பயனாகப் பண்டைய நந்திபுரம் அரண்மனை இருந்த நந்திபுரம், ஆயிரத்தளி என்று பெயர்பெற்றது, இப்பொழுது கண்டியூருக்கு அருகில் உள்ள வீரசிங்கம்பேட்டை என்றும், செங்கமேடு என்றும் அழைக்கப்படும் பகுதிதான் என நிறுவியுள்ளார். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆய்வு. பண்டைய தலைநகராய்த் திகழ்ந்த நந்திபுரம் இது

தான் என ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். இது போன்ற கள ஆய்வுகள்தான் நமக்கு ஏராளமானவை தேவை. பிராந்திய வரலாறுகளைச் செவ்வனே வகுக்கவும், அறிந்து கொள்ளவும் இவை மிகவும் பயனுள்ளவை. குடவாயில் பாலு மிகவும் உற்சாகம் நிறைந்த இளைஞர். வரலாற்றில் இயல்பான ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். 'குடவாயிற் கோட்டம்', "கருணாகரத் தொண்டைமான்", "சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்", "திருவாரூர் திருக்கோயில்" போன்ற பல நூல்களை இயற்றியிருக்கிறார். மேலும் பல நூல்களை உருவாக்கி வருகிறார். இவை அனைத்திலும் சம்பந்தப்பட்ட ஊர்களுக்கும், சுற்றுப்புற இடங்களுக்கும், பலமுறை சென்று பல அரிய செய்திகளை வெளிக் கொணர்கிறார். பல அரிய கண்டுபிடிப்புகளை நம் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இவர் போன்ற ஒருவரைச் சீடனாகக் கொள்வது பெருமைக்குரியது அன்றோ.

இவரது நந்திபுரம் என்ற இந்நூலை 'இன்டாக்' நிறுவனத்தின் சார்பில் வெளிக் கொணர்வதில் பெருமையடைகிறேன். பாலுவின் ஆய்வு மேலும் மேலும் வளர எனது ஆசிகள்.

**இரா. நாகசாமி,**
இன்டாக் தென்னிந்திய ஆலோசகர்

சேக்கிழார் அடிப்பொடி
**தி.ந. இராமச்சந்திரன், பி.காம்., பி.எல்.**

செல்வம் நகர்
தஞ்சாவூர்

## அணிந்துரை

"மண்ணுலகம் காவல்பூண்ட உரிமையாற் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கம் செய்யும் பெருமையார் புலியூர்"–என்பது நம்பியாரூரரின் அருள்வாக்கு. மண்ணுலகத்தின் ஒருபகுதியான சோழநாட்டைத் திறம்பட ஆண்டுவந்த பல்லவரின் அருட்கொடையாம் ஆயிரத்தளி பற்றிய உண்மைச் செய்திகளை முதன்முதலில் வெளியிடும் வாய்ப்பைப் பெற்றமைக்கு நந்தியாம் பரமேஸ்வரனுக்கு நன்றி சொல்கிறேன்.

நந்திபுரம் என்பது சிவபுரமே. "நந்தி நாமம் நமச்சிவாயவே" என்பதே ஞானசம்பந்தவேதமாம். வாகீசராம் அப்பர் அடிகள் காலத்திற்குப் பின்பு பல்லவர்கள் சைவத்திற்கு ஆற்றிய தொண்டு நனிசால மிகப்பெரிதாம். பல்லவம் என்ற சொல் "இலை, தளிர்"– என்று பொருள்படும். சிவார்ச்சனையில் இடம் பெறும் இவற்றின் பெயரையே தம் பெயராகக் கொண்ட அரசவம்சம் பல்லவ வம்சமாகும்.

பழையாறைக்கு அண்மையில் உள்ள நாதன்கோயிலே நந்திபுரம் என்று திருவாளர்கள் எஸ்.கே. அய்யங்கார், ஆர். கோபாலன், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, மா. இராசமாணிக்கனார், தி.வை. சதாசிவ பண்டாரத்தார், மீனாட்சி அம்மையார் ஆகியோர் முடிந்த முடிவாகக் கூறிவிட்டபடியால் அதையே ஆய்வாளர்கள் மேற்கொண்டு தேக்க நிலையில் அமிழ்ந்துவிட நேர்ந்தது.

எட்டாம் நூற்றாண்டில் சோழநாட்டில் தோன்றிய பல்லவர்தம் கடிநகரம் (பல்லவர்களாலும்) பின்னாளில் சோழப் பெருமன்னர்களாலும், 400 ஆண்டுகளுக்கு மேலாகப் போற்றப் பெற்று, பாண்டியர்களாலும் போற்றப்பட்டுச் சீர்த்தியோடு விளங்கியமை, இப்போது அன்பர் குடவாயில் பாலு அவர்களால் நமக்குத் துல்லியமாக அசைக்கமுடியா ஆதரங்களோடு இந்நூலில் நிறுவப்பட்டுள்ளது. நூல்நுதலும் நுட்பமான உண்மை, பொதுவாக அனைவருக்கும், சிறப்பாகத் தஞ்சைமாவட்டத்தார்க்கும் ஓர் அருட் கிளுகிளுப்பைத் தரும், யான் பயின்ற பள்ளியிலிருந்து மூன்று கல் தொலைவில் துலங்கிய நந்திபுரம் பற்றி எனக்கு அறிவு கொளுத்திய அன்பர் பாலுவிற்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

நால்வகை நெறிகள் காட்டி சதுர்வித புருஷார்த்தங்களை அருளவல்லவன் நான்கு தலைச் சிவனாரே என்ற செய்தியை இந்நூலுள் நுட்பமாய்க் காணலாம். இந்நூலாசிரியர் "பழையாறு" "பழையாறை" என்ற சொற்களுக்கு வேர் முதல் நாடி, அனைவருக்கும் ஏற்கும் உண்மைப் பொருளை வழங்கியிருப்பதை ஞானதாகம் கொண்டோர் வியந்தும் நயந்தும் என்றென்றும் பாராட்டுவர்.

நடுவு நிலைமையோடு, எப்பக்கமும் சாயாது, இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, கள ஆய்வு, சிற்ப ஆய்வு என்றுள்ள இவற்றையே சார்ந்து நல்லதொரு முடிவு கண்ட இந்நூலாசிரியர் நித்தவிநோதராய் வளத்தோடு, அறிவுசிவணிய கிழமையோடு கூற்று எதிர்ந்தபோதும் அஞ்சாது, தொடர்ந்து இவ்வகையான பணிகளில் ஈடுபடல் வேண்டும் என்பது எம்மனோரின் பெருவிழைவாகும்.

ஓரிலக்கம் (1,00,000) இலிங்கங்களைத் தன்னகத்தே வைத்துத் திகழ்வது தேவார வைப்புத் தலமாம் காசி. காசியாம் சிவ பூமியில் பாசுபத மதத்தைப் பரவிய பல்லோர் பெருமையோடு வாழ்ந்தனர். பாசுபதமே பின்னாளில் காபாலிகம், பைரவம், களானனம், மாவிரதம், காலானனம் போன்ற பல்வகைச் சைவத்திற்கு வழி வகுத்தது என்பர் ஆய்வாளர். உத்திரதேசத்துச் சைவம் தெட்சிண தேசத்திலும் வேரூன்றி நின்றதைத் தேவாரத் திருமுறைகள் சிறப்பாக எடுத்து ஓதுகின்றன. விராட் புருஷரான விஸ்வேஸ்வரருக்கு வழிபாடு செய்தற்கு ஆயிரம் இலிங்கங்கள் கொண்ட பெருந்தளி அமைத்தல் வேண்டும் என்ற நெறியை வடதேசத்துச் சைவர் அனுசரித்து வந்தனர் என்றும், அச்சைவரோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பல்லவர் கள், திசையனைத்தையும் வெல்லும் தென் திசையிலும் அத்தகு பெருந்தளிகளை உருவாக்கி, ஊனினை உருகவைத்தும் உள்ளொளி பெருகவைத்தும், பீடுசால் வாழ்வினை வகுத்தனர் என்பதும் இந்நூல் மூலம் நான் அறிகிறேன்.

இந்நூலின் முழுப் பயனைப்பெற விரும்புவோர் இதனை மீட்டும் மீட்டும் பயின்று தெளிதல் வேண்டும். உலகப் புகழ் பெறுவதற் குள்ள தகுதி பெற்ற இந்நூலைத் தமிழில் தந்த இளமுருகனார்க்கு என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

**தி.ந. இராமச்சந்திரன்**

# முகவுரை

சோழப் பெரு மன்னர்களின் தலைநகராய்த் திகழ்ந்த தஞ்சையிலிருந்து திருவையாறு நோக்கி வடக்காகச் செல்லும் சாலையில் 10. கி.மீ. தொலைவில் கண்டியூர் என்றோர் ஊர் உள்ளது. அட்டவீரட்டங்களுள் இதுவும் ஒன்று. இதே நெடுஞ்சாலையில் கண்டியூர் வீரட்டமாம் திருக்கோவிலை ஒட்டிக் கிழக்காக ஒரு கிளைச்சாலை பிரிகிறது. இது திருச்சோற்றுத்துறை மாத்தூர் வழியாகப் புள்ளமங்கைவரை நீண்டு தஞ்சை, கும்பகோணம், சென்னை நெடுஞ்சாலையோடு இணைகிறது. தஞ்சை திருவையாறு நெடுஞ்சாலையில் கண்டியூருக்குக் கிழக்காகவும், கண்டியூர்–புள்ளமங்கை கிளைச் சாலையின் தென்புறமாகவும், குடமுருட்டி யாற்றின் தென்கரையிலும் அமைந்துள்ள ஒரு பெருநிலப்பரப்பே இந்நூலின் ஆய்வுத்தளமாகும்.

இப்பரந்த வெளியினுள் கண்டியூரின் கிழக்குப்பகுதி, இரட்டைக்கோயில், ஆவிக்கரை, செங்கமேடு, வீரசிங்கம்பேட்டை என்ற சிற்றூர்கள் உள்ளன. பதிவுத்துறை மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவு எண் 69/1, கண்டியூர், 81/1, ஆவிக்கரை, 81 கல்யாணபுரம் இரண்டாம்சேத்தி எனப் பிரித்து, பதிவு செய்து ள்ளனர். இதில் கண்டியூரின் பிடாகையாக (Hamlet) இரட்டைக் கோயிலும், கல்யாணபுரம் இரண்டாம் சேத்தி எனும் பெயரில் செங்கமேடு, வீரசிங்கம்பேட்டை ஆகிய இரண்டு சிற்றூர்களும் உள்ளன.

வீரசிங்கம் பேட்டையை மையமாகக் கொண்டு நான்கு திக்கிலும், 1 1/2 கி.மீ. தொலைவில் கண்டியூர் வீரட்டம், திருச் சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருப்பழனம் ஆகிய தேவாரத்தலங்கள் திகழ்வது பெரும் சிறப்பாகும். பல்லவர் சோழர் காலங்களில் கண்டியூர் நித்த விநோத வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்திலும், நந்திபுரமாம் ஆயிரத்தளி நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்திலும் இருந்தன. நந்திபுரத்தில் பல்லவர்காலந்தொட்டு அரண் மனையும், ஆயிரத்தளி எனும் (சகஸ்ரலிங்கேஸ்வரம்) கோயிலும் இருந்தன.

பல்லவர் வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் பார்வையில் இவ்வூர் இதுகாறும் படாமையால் நந்திபுரம் எனும் ஆயிரத்தளியைத் தவறாகக் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊராகக் குறித்தனர். 1982 ஆம் ஆண்டு குடந்தை சேதுராமன் அவர்கள் எனக்கு எழுதிய

கடிதத்தில் நியமத்து ஆயிரத்தளியும் நந்திபுரத்து ஆயிரத்தளியும் எங்கிருந்தன என்பதை ஆராயுமாறு குறிப்பிட்டிருந்தார். சில ஆண்டுகள் முயன்றேன். தடயங்கள் கிடைக்காததால் சோர்வுற்றேன். இருப்பினும் ஆழ்மனத்தில் எப்படியும் கண்டுபிடிப்பது என்ற உறுதி இழையோடியது. 1986ஆம் ஆண்டு என் ஆசிரியப் பெருமானார் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கண்டியூர் கோயில்பற்றி நூல் எழுதுமாறு பணித்தார். வாகீசசிவ மூர்த்தம் பற்றி போதித்தார். சேக்கிழார் அடிப்பொடி திரு.டி.என். இராமச்சந்திரன் அவர்களின் தேவாரப்பாடமும் சமயஇலக்கியப் போதனைகளும் எனக்குத் தூண்டுகோல்களாக அமைந்தன. தொடர்ந்து ஆய்வுப் பணியை மேற்கொண்டேன். பல கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் தெளிவான பாதையைக் காட்டின. எண்ணிலாச் சிற்பங்களும், பழைமையின் எச்சங்களும் நந்திபுரத்தைக் கண் முன்னே கொணர்ந்தன. அனைத் தையும் தொகுத்து இங்கு நூலாகத் தந்துள்ளேன். தொடர்புடைய புதிய செய்திகள் இருப்பின் உதவிடுக. வரலாறு மேலும் தெளிவு பெறும். குறைகள் இருப்பின் சுட்டுக. மறுபதிப்பில் திருத்த முயல்கிறேன்.

"நந்திபுர மரியாதை" என்று பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கூறும் சொற்றொடரைப் பழுவூர் மற்றும் தூசிபுரம் சாசனங்கள் மூலம் நோக்கும்போது "நந்திபுர மற்றாதியே" என்று தான் குறிப்பிடப் பெற்றுள்ளதைக்காணலாம். மன்று ஆதியே என்பதுதான் இவ்வாறுள்ளது. தண்டங்குற்றம் போன்ற நீதிமன்ற நடவடிக்கைகள் முன்பு நந்திபுரத்தில் எவ்வாறு மேற்கொள்ளப் பெற்றதோ அவ்வாறே புதியநகரங்களில் மேற்கொள்ள சுந்தர சோழன் அனுமதித்ததை இந்நூலுள் காணமுடிகின்றது. மேலும் அண்மையில் என் நண்பர் இல.தியாகராஜன் அவர்கள், கி.பி. 1218_ல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் படையினருக்கும், சோழனின் தளபதிகளுக்கும் கண்டியூருக்கு அருகில் உள்ள திருப்பழனத்தில் நிகழ்ந்த மோதலைப் பெரம்பலூர் வட்டம் வரகுபாடிக் கல்வெட்டொன்று மூலம் உறுதி செய்துள்ளார். இது நந்திபுரம் பற்றிய ஆய்விற்கு மேலும் வலுவூட்டும் சான்றாகும்.

இவ்வாய்விற்கு மிகவும் துணைபுரிந்த சுந்தரபாண்டியனின் ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டின் படி கொடுத்து உதவிய குடந்தை என். சேதுராமன் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.

கண்டியூர் வீரட்டத்து சிவாச்சாரியார்க்கும் செங்கமேடு திரிசங்கு வன்னியருக்கும் யான் நன்றி கடப்பாடுடையேம். செய்தி மற்றும் பத்திரிகைத்துறை நண்பர்களான திரு. கணபதி, திரு.

இராஜன், திரு. தஞ்சை ஜெயபாலன், தொல்லியல்துறை சார்ந்த திரு. S. இராமச்சந்திரன் ஆகியோரின் தகவல்கள் இந்நூல் வடிவம் பெற உதவின. பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்தியக் கழகத்தைச சார்ந்த லெர்னோ அவர்களின் உதவிகளும், ஊக்குவித்த பண்பும் நெஞ்சம் விட்டகலாதவை.

இவ்வாறு நந்திபுர வரலாறு மலர உதவிய பெரியவர்களுக்கும், நண்பர்களுக்கும் அச்சுப்படியினைச் செப்பமுறத் திருத்தித்தந்த நண்பர் திரு ய. மணிகண்டன் அவர்களுக்கும், நூலினை அச்சிட்ட புதுக்கோட்டை சர்மா சானடோரியம் அச்சகத்தார்க்கும் எமது கனிந்த கை கூப்புகள்.

தமிழகத்தின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியை ஒளிபெறச் செய்ய "நந்திபுரம்" எனும் இந்நூலினை வெளியிடும் 'INTACH நிறுவனத்தார்க்கும், அதன் தென்னிந்திய ஆலோசகர் டாக்டர் இரா. நர்கசாமி அவர்களுக்கும் எனது நன்றி என்றும் உரியதாகும்.

தஞ்சாவூர்

அன்பன்

**குடவாயில் பாலசுப்ரமண்யம்**

# பொருளடக்கம்

## பகுதி ஒன்று


| | | |
|---|---|---|
| 1. | வரலாற்றில் நந்திபுரம் | 1 |
| 2. | நந்திபுர முற்றுகை | 10 |
| 3. | நந்திபுர விண்ணகரம் | 13 |
| 4. | நந்திபுரமும் ஆயிரத்தளியும் | 16 |
| 5. | ஆயிரத்தளியில் இருந்த கோயில்கள் | 23 |
| 6. | பண்டை நந்திபுர மரியாதை | 31 |
| 7. | ஆயிரத்தளி அரண்மனை | 34 |
| 8. | நந்திபுரத்தின் பேரழிவு | 46 |


## பகுதி இரண்டு


| | | |
|---|---|---|
| 1. | கள ஆய்வில் நந்திபுரம் | 58 |
| 2. | ஆயிரத்தளி - சகஸ்ரலிங்கேஸ்வரம் | 71 |
| 3. | வாகீஸ்வரர் வழிபாடு | 72 |
| 4. | லகுளீச பாசுபதம் - தமிழக மையம் | 83 |
| 5. | வீரசிங்கம் பேட்டை - பெயர் மாற்றம் | 85 |

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 18 | விபரங்களுக்கு | விவரங்களுக்கு |
| 6 | 2 | நந்திகோயிலில் | நாதன்கோயிலில் |
| 39 | 34 | பாண்டியர்கள் | பாண்டியர்களை |
| 46 | 21 | குறிப்பிட்டுள்ளது | குறிப்பிட்டுள்ளான் |
| 47 | 5 | அழந்தது | அழிந்தது |
| 48 | 2 | இராராஜன் | இராஜராஜன் |
| 52 | 22 | Epigraphica | Epigraphia |
| 54 | 8 | | |
| 55 | 12 | | |
| 56 | 26 | Pandayas | Pandyas |
| 87 | 5 | Epigraphiea | Epigraphia |
| 88 | 26 | Pandiyas | Pandyas |

# வரலாற்றில்-நந்திபுரம்

பல்லவர்களின் ஆளுகையின் கீழ் இருந்த சோழ மண்டலத்தில் பல்லவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற கடிநகரமே நந்திபுரம் என்பதாகும். பல்லவமல்லன் என்றழைக்கப்பெற்ற இரண்டாம் நந்திவர்ம பல்லவன் தன்பெயரால் இந்நகரைத் தோற்றுவித்து இருத்தல் கூடும் எனக் கருதப்போதிய சான்றுகள் உள்ளன. சங்ககாலச் சோழர்களது வரலாறு பேசும் இலக்கியங்களிலோ, மற்றப்பிற சாசனங்களிலோ "நந்திபுரம்" எனும் ஊர் பற்றிய குறிப்புக்கள் இல்லை. முற்காலப் பல்லவர்களின் சாசனங்களில் கூட இப்படி ஒரு நகரின் பெயர் காணப்படவில்லை. இரண்டாம் நந்திவர்மன் காலம் தொடங்கி (கி.பி. 730) சோழர்கள், பின்பு பாண்டியர்கள் காலம் வரை சோழநாட்டுச் சாசனங்களிலும், இலக்கியங்களிலும் ஒரு பெரு நகரமாக, மன்னனது கோயிலாம் அரண்மனை இருந்த கடிநகரமாக நந்திபுரம் எனும் ஆயிரத்தளி பேசப்படுகின்றது.

இவ்வூருக்குக் காலங்காலமாக வேறு பெயர்களும் நந்திபுரம் அல்லது ஆயிரத்தளி என்ற பெயரோடு இணைந்து வழங்கி வந்துள்ளன. பண்டு வரலாற்றுச் சிறப்புடையதாய்த் திகழ்ந்த இந்நகரம் தற்போது சோழநாட்டில் எங்குள்ளது எனப் பல பேரறிஞர்கள் ஆய்வுசெய்து முடிவும் கண்டிருக்கின்றனர். அவர்களது கருத்துப்படி சோழநாட்டில் கும்பகோணத்திற்குத் தென்மேற்காகச் சிலகல் தொலைவில் உள்ள நாதன் கோயில் நந்திபுரம், எனும் சிற்றூர் ஆகும். அண்மையில் கண்டியூர்த் திருக் கோயிலையும், சோழமண்டலத்தில் உள்ள பல்லவர்களது வரலாற்றுத் தடயங்களையும் ஆராய முனைந்த போது நந்திபுரத்து ஆயிரத்தளி பற்றிய புதிய சான்றுகளைக் காணமுடிந்தது. இப்புதிய சான்றுகளோடு சோழர், பாண்டியர் கல்வெட்டுச் செய்திகளையும் இணைத்து நோக்கும் போது, நந்திபுரமாம் ஆயிரத்தளி நகர் எது என்பதைத் திட்டவட்டமாக

நிறுவமுடிந்தது. இது முன்னைய அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து மாறுபட்ட புதிய கோணப் பார்வையாகும். முதலில் நந்திபுர நகரம் பற்றி இதுவரை அறிஞர்கள் கண்ட முடிவையும், பின்பு இப்புதிய ஆய்வையும் விரிவாகக் காண்போம்.

## நந்திபுரம் பற்றிப்பேசும் முதல் செப்பேடு

கி.பி. 1850 ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுகாவில் வாணியம்பாடிக்கு அருகில் உள்ள உதயேந்திரம் எனும் சிற்றூரில் "உதயேந்திரம் செப்பேடுகள்" என்று கூறப்பெறும் ஐந்து ஏடுகள் உள்ள தொகுதி ஒன்று கிடைத்தது. கிரந்த எழுத்துக்களில் சமஸ்கிருதமொழியில் எழுதப்பெற்ற இவ்வேடுகள், பல்லவ மல்லன் எனும் இரண்டாம் நந்திவர்மனின் தானைத் தலைவனான உதயசந்திரனின் விண்ணப்பத்திற் கிணங்க, அவ்வூர் உதயசந்திரமங்கலம் என பெயரிடப்பெறறு அந்தணர்களுக்கு அளிக்கப்பெற்றதை விவரிக்கின்றது

வரலாற்று சிறப்புடைய இச்செப்பேட்டுச் சாசனம் பற்றி முழுவிபரங்களுக்கு இந்தியன் ஆன்டிகுயரி (Indian Anti-Quary) எட்டாம் தொகுதியிலும், தென்இந்திய சாசனங்கள் (South Indian Inscriptions) இரண்டாம் தொகுதி மூன்றாம் பாகத்திலும், பல்லவர்கள் செப்பேடு முப்பது எனும் நூலிலும் வெளிவந்துள்ளன.

இச்செப்பேட்டுத் தொகுதியின் மூன்றாம் ஏட்டில்,

"பில்வலா பீதாணஸ்ய நகரஸ்யாதிபதி :
பல்லவ குல பரம்பராகதே பூசான்குலே
ப்ரஸூதஃ த்ரமின நரபதிபிஃ உபருத்தம்
பல்லவ மல்லம் நந்திபுரே த்ருஷட்வா தத்
அசஷமலா குவலயதலத்யுதிநா நிஸிதேன க்ருபானேன
பல்லவமல்ல சத்ருபந்த....."

என்று நந்திபுரம் பற்றிக் கூறப் பெறறுள்ளது.

உதயேந்திரம் செப்பேடு



மூன்றாம் ஏடு–நந்திபுரம பற்றிக் குறிப்பு உள்ளது.

தமிழாக்கம்

"பூசான் குலத்தில் பிறந்த உதயசந்திரன் தமிழ் மன்னர்களால் **நந்திபுரத்திலே**, பல்லவமல்லன் முற்றுகைக்கு ஆளாகித் தடுக்கப்பட்டதைக் கண்டு, வெகுண்டு, பல்லவமல்லனின் எதிரிகளான சித்திரமாய பல்லவராஜன் முதலியவர்களைக் கொன்று, பேரரசு முழுவதையும், தன் அரசனுக்கே உரிமையாகும்படி செய்தான்" என்பதே அச்செப்பேட்டுப் பகுதியின் தமிழாக்கமாகும்.

இப்பல்லவ மல்லனின் சமகாலத்தவரான திருமங்கை ஆழ்வார் தம்பாசுரம் ஒன்றில்,

"நந்திபணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே"

–என்று நந்திபுர நகரம் பற்றிப் பாடுகிறார். மேலும், இதே பல்லவமல்லன் காஞ்சிபுரத்தில் தோற்றுவித்த வைகுந்தநாதர் ஆலயத்துச் சிற்பங்களில் நந்திபுர முற்றுகையின் போது உதயசந்திரன் பெற்ற பெருவெற்றி, சிற்பத்தொகுதியாகச் சித்திரிக்கப்பெற்றுள்ளதை டாக்டர் சி. மீனாட்சி அவர்கள் தம் (The Historical Sculptures of the Vaikuntha Permal Temple, Kanchi). எனும் நூலில் குறித்துள்ளார்கள். இதுவரை நமக்கு நந்திபுரநகரம் பற்றிக் கிடைத்துள்ள பல்லவர் காலத்துச்

சான்றுகள் இவைதாம். இவை மூன்றும் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தியவையே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்லவர் வரலாற்றை விளக்கமுற எழுதிய பேரறிஞர்கள் நந்திபுரம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

1. **HISTORY OF PALLAVAS OF SOUTH INDIA**

(By -R. Gopalan)
(Editor S.K. Iyangar) Madras University

Nandipura which is idintical with Nandipura Vinnagaram of Tirumangai Alvar is situated not far from the modern town of Kumbakonam. (page 124)

2. **A HISTORY OF SOUTH INDIA, From the prehistoric Times to the fall of Vijayanagar.**

(By.- K.A. Nilakanta Sastri, Oxford, University Press)

Early in the regin Rajasimha formed an alliance with Chalukya Vikramaditya II, espoused, the cause of Citramaya and after inflicting a number of defeats on Nandivarman Pallavamalla besieged him in a place called Nandigrama ie **Nandipuram near Kumbakonam**. The able pallava general Udayachandra who encountered, the Pandya forces in many battles raised the seige of Nandigrama behead Chitramaya and thus made the pallava throne secure for his monarch (page 155)

3. **பல்லவர் வரலாறு**

மா. இராசமாணிக்கனார், (கழகப் பதிப்பு)

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள **நாதன் கோவில்** என்னும் இடம் பழையகாலத்தில் பல்லவர் தென்புறக் கோட்டையாக இருந்தது. இதற்கு நந்திபுரம் என்பது பெயர். அங்குப் பெருமாள் கோயில் உண்டு. அதனைத் திருமங்கை

ஆழ்வார் பாடியுள்ளார். அந்த நந்திபுரக்கோட்டைக்குள் பல்லவன் தங்கியிருந்த சமயம் பார்த்துப் பாண்டியன் தன் துணைவரான சிற்றரசர் பலருடனும், பெருஞ் சேனையுடனும் சென்று நந்திபுரத்தை முற்றுகை இட்டான். பாவம்...! பாண்டியன் படை எடுப்பை எதிர்பாராத நந்திவர்மன் கோட்டைக்குள் அகப்பட்டுக் கொண்டான். (பக்கம் 176)

## 4. பிற்காலச் சோழர் வரலாறு

*தி.வை. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.*

"இனி, வீரசோழிய உரையிற் காணப்படும் அப்பழைய பாடல்கள் இவனை (சுந்தரசோழனை) 'மேதகு நந்திபுர மன்னர் சுந்தரச் சோழர்' என்றும், 'பழையாறை நகர்ச் சுந்தர சோழர்' என்றும் கூறுகின்றமையின் இவன் பழையாறை நகரிலிருந்து ஆட்சி புரிந்திருத்தல் வேண்டுமென்பது நன்கறியக் கிடக்கின்றது. அந்நகர் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே மூன்று மைல் தூரத்தில் பழையாறை என்னும் பெயருடன் இந்நாளில் ஒரு சிற்றூராக உள்ளது...".

"...நாதன் கோயில் என்று வழங்கப்படும் நந்திபுர விண்ணகரம் ஆகிய ஊர்களையும் தன்னகத்தே கொண்டு முற்காலத்தில் பெரிய நகரமாக அஃது அமைந்தது......"

"அது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பழையாறை நகர் எனவும் எட்டாம் நூற்றாண்டில் நந்திபுரம் எனவும், ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் பழையாறை நந்திபுரம் எனவும் பதினொன்றாம் நூற்றாண்டில் முடிகொண்ட சோழபுரம் எனவும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் இராசராசபுரம் எனவும் வழங்கப்பெற்றது" (பக்கம் 81, 82)

"இராசராசன் தன் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் பழையாறையிலிருந்த ஆயிரத்தளி அரண்மனையில் நோய் வாய்ப்பட்டு, துன்புற்ற நிலையில் இருந்தனன்". (பக் 373)

இவ்வறிஞர் பெருமக்கள் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நாதன்கோயில் தான் நந்திபுரம் எனக் கருதச் சான்றாய் அமைந்தவை இரண்டாகும். ஒன்று திருமங்கை ஆழ்வார் பேசும்

"நந்திபுர விண்ணகரம்," எனும் சோழநாட்டுத் திருப்பதியாக நந்திகோயிலில் உள்ள வைணவ ஆலயத்தினை வைணவர்கள் போற்றுவதாகும். "பல்லவர் செப்பேடு முப்பது" எனும் நூலினை எழுதிய தி.நா. சுப்பிரமணியம் அவர்கள் மேற்குறித்த நாதன் கோயில் எனும் ஊருக்குக் கிழக்காகத் தற்போது நந்திவனம் என அழைக்கப்பெறும் ஊரினைக் குறிப்பிட்டு நந்திபுரநகரம் பற்றிய தமது கருத்துக்களையும் கூறி "உதயேந்திரம் செப்பேடு குறிப்பிடும் நந்திபுரம் எது என்பதை நிச்சயிக்கப் போதுமான ஆதாரங்கள் தற்போது இல்லை" என்றும் கூறுகின்றார் (பக். 111).

இரண்டாவதாக பண்டைய சோழப்பெருநகராம் பழையாறைக்கு அருகில் உள்ள நாதன் கோயில்தான் நந்திபுரம் எனக்கொள்ள அவர்கள் கண்ட சான்று திருக்கோடிக்காவல் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருக்கோடிக்கா (திருக்கோடிக்காவல்) திருக்கோடீஸ்வரர் திருக்கோயில் கருவறையின் தென்புறம் உள்ளதாகும்[1]. சோழர் காலத்திலேயே கோயில் புதுக்கப் பெற்ற போது பழைய கல்வெட்டுக்களின் படிகளை மீண்டும் பொறித்துள்ளனர்.

அக் கல்வெட்டில்

> "ஸ்வஸ்தி ஸ்ரீ இதுவும் ஒரு பழங்கல்படி கோவிராஜகேசரி பன்மர்க்கு யாண்டு பதின் அஞ்சாவது பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமாரன் கணவதி திருக்கோடிக்காவில் மஹாதேவர்க்கு திருவிளக்கினுக்கும் திருவமிதினுக்கும் குடுத்தபொன் எழுபதின் கழஞ்சு இப்பொன் கொண்டு இப்பொன்னின் பலிசையால் நொந்தாவிளக்குக்கு நிசதம் உழக்குநெய்யும் திருவமிதினுக்கு நிசதம் இருநாழி அரிசியும் சந்திராதித்தவல் அட்டுவோமானோம் திருக்கோடிக் காவான கண்ணமங்கலத்து சபையோம்"

என்று குறிக்கப்பெற்றுள்ளது.

## பழையாற்று நந்திபுரம்

இங்குப் பழையாற்று நந்திபுரத்து வியாபாரி குமாரன் கணவதி திருக்கோடிக்கா மஹாதேவர்க்குத் திருவிளக்கிற்கும்,

திருவமுதுக்கும் அளித்த பொற்கொடை பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது. **பழையாற்று நந்திபுரம்** என்று குறிக்கப் பெற்றுள்ள இச் சொற்றொடரை ஆழ்ந்து நோக்குவோமாயின் பல நந்திபுரங்கள் இருக்கும் போது குமாரன் கணவதி வசித்த நந்திபுரம் எவ்வூர் என்பதைத் தெளிவுபடுத்தவே பழையாற்று நந்திபுரம் எனக் குறிப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளதை அறியலாம்.

சோழநாட்டில் சீர்காழிக்கு அருகில் ஒரு பழையாறும், நன்னிலம் வட்டத்தில் ஒரு பழையாறும் உண்டு. சோழர்களின் மாளிகையைக் கொண்ட தலைநகரான முடிகொண்ட சோழபுரம் எனும் ஊருக்கும் பழம்பெயர் பழையாறை என்பதாகும். இதனைப் பழசை, பழசைமாநகர் பழையாறு என்றெல்லாம் அழைப்பர். இவ்வூருக்கு அடுத்துள்ள ஊர்கள் நாதன் கோயிலும், நந்திவனமும் ஆகும். இதே நந்திவனம் என்ற பெயரில் திருநாகேஸ்வரத்திற்குத் தென்கிழக்காக அமண்குடி சாலையில் ஓர் ஊர் இன்றும் உள்ளது. செங்கை மாவட்டத்தில் நந்திவனம் என்ற பெயரில் ஓர் ஊர் உண்டு. இங்குள்ள வினாயகர் கோயில் கல்வெட்டில் இவ்வூர் நந்திபுரம் என்றே குறிப்பிடப்பெற்றுள்ளது[2]. தஞ்சாவூர் மாவட்டம் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் மண்டபத்துத் தூண் ஒன்றில் பாரந்தக சோழனின் 25 ஆம் ஆண்டுக் (கி.பி. 931–32) கல்வெட்டொன் றுள்ளது[3]. அக்கல்வெட்டு நந்திபுரம் பற்றிப் பேசுகின்றது.

உம்பளநாட்டு நந்திபுரம்

வேதாரண்யம் கல்வெட்டு

> ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பற்மற்க்கு யாண்டு 25 ஆவது இவ்வாண்டு உம்பள –நாட்டுப் பெருந்தேவதானம் திருமறைக்காட்டு மகாதேவர்க்கு இந்நாட்டு நந்திபுரத்தில் நக்கி நொந்தா விளக்கினுக்கு வச்சஆடு தொன்னுறு இவ்வாடு தொன்னூற்றுங் கொண்டு திருமறைக்காடனா........ .....

என்று பொறிக்கப்பெற்றுள்ளது.

சோழநாட்டில் நந்திபுரங்கள்



இதனால் சோழநாட்டில் உம்பள நாட்டிலும் (வேதாரண்யம் பகுதியில்) நந்திபுரம் எனும் ஊர் முதற்பராந்தக சோழன் காலத்திலேயே திகழ்ந்தது என்பதை அறிகிறோம்.

## கிழார் கூற்றத்து நந்திபுரம்

சோழ மண்டலத்து வளநாடுகளுள் ஒன்று நித்த விநோதவளநாடு.இது இராஜராஜன் காலத்தில் ஏற்பட்ட நாட்டுப்பிரிவு. இதில் ஆவூர் கூற்றம், கிழார் கூற்றம், வெண்ணிக்கூற்றம், பாம்புணிக்கூற்றம், நல்லூர் நாடு, கரம்பை நாடு, முடிச்சோணாடு என்ற உட்பிரிவுகள் அடங்கியிருந்தன[4] நித்தவிநோதவளநாடு பிரிக்கப்படுவதற்கு முன்பு பராந்தக சோழன் காலத்தில் கூட கிழார் கூற்றம் என்ற நாட்டுப் பிரிவு இருந்தது என்பதனைப் பராந்தகன் காலத்துச் சாசனங்கள்[5] மூலம் அறியலாம். இந்த நித்தவிநோத வளநாட்டு கிழார்கூற்றத்தில் நந்திபுரம் என்றும்[6], ஆயிரத்தளியான நந்திபுரம்[7] என்றும், ஆயிரத்தளி[8] என்றும் ஆயிரத்தளியான ஆகவமல்லகுலகாலபுரம்[9] என்றும், ஆயிரத்தளியான மீன வனை வெண்கண்ட சோழபுரம் என்றும்,[10] ஆயிரத்தளியான அமராவதி[11] என்றும் பல்வேறு பெயர்களைப் பல்வேறு காலங்களில் பெற்றுத்திகழ்ந்த ஓர் ஊர் பல்லவர், சோழர், பாண்டியர் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளது. "கிழார் கூற்றத்து நந்திபுரம்" 'கிழார் கூற்றத்து நந்திபுரமான ஆயிரத்தளி " என்ற சொற்றொடர்களே இவ்வாய்வின் முக்கிய அங்கமாய்த் திகழ்பவை. ஆனால் பழையாறை நகரமும் (முடிகொண்ட சோழபுரம்) நாதன் கோயிலும் (நந்திவனம்) சோழர் காலம் முழுவதும், பின்பும் உய்யகொண்டார் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுப் பகுதிக்குள்தான் திகழ்ந்தன[12] என்பதை முக்கியமாக நோக்குதல் வேண்டும். இதேபோன்று ஆர்க்காட்டுக் கூற்றத்து நியமத்து ஆயிரத்தளியும்[13] நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து நந்திபுரமான ஆயிரத்தளியும் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் குறிக்கப்பட்டுள்ளனவே அன்றி உய்யகொண்டார் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுப் பழையாறைப் (முடிகொண்ட சோழபுரம்) பகுதியில் இருந்ததாக இதுவரை ஒரு சாசனச் சான்று கூடக் கிடைக்கவில்லை. பல வரலாற்று நூல்களில் பழையாறையில் ஒரு ஆயிரத்தளி இருந்ததாக எந்த ஒரு சாசன மேற்கோளும் இன்றிக் குறிக்கப்பெற்று இருப்பது வியப்பிற்குரியதே.

இதுவரை கிடைத்துள்ள அனைத்துச் சான்றுகளையும் கால அடிப்படையில் தொகுத்து நோக்கும்போது கிழார் கூற்றத்து நந்திபுரமான ஆயிரத்தளி தஞ்சை திருவையாறு நெடுஞ்சாலையில் கண்டியூரை ஒட்டித் திகழும் செங்கமேடு, இரட்டைக் கோயில் ஆவிக்கரை, நாலுசாமிமேடு, வீரசிங்கம் பேட்டை ஆகிய பகுதிகள் இணைந்த ஒரு பெருநகரம் என்பதை அறிய இயன்றது. இதனை மெய்ப்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அனைத்தையும் இனிக் காண்போம்.

## நந்திபுர முற்றுகை

அத்தியந்தகாமன் எனும் இராஜசிம்ம பல்லவனின் காலம் (கி.பி. 690–728) பல்லவ ஆட்சியில் ஒரு பொற்காலம் என்றே கூறலாம். அப்பெரு மன்னனின் மறைவிற்குப் பின்பு அவன் மகன் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் அரியணை ஏறினான். அவனது ஆட்சி மூன்றாண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. இவனது மறைவிற்குப் பிறகு பல்லவ நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. தாயத்தார் சண்டைகள் மிகுந்தன. சிங்காதனம் ஏறத்தகுந்தவர் உபயகுல பரிசுத்தராக யாரும் இல்லை என்று மஹாசாமந்தரும் நாட்டின் பிரமுகர்களும் இளைய பரம்பரையைச் சேர்ந்த ஹிரண்யவர்மனை அடைந்து அவன் மகன் பன்னிரண்டு வயது கொண்ட பரமேச்வரனை அழைத்துவந்து நந்திவர்மன் என்று நாமம் சூட்டி முடி புனைந்ததாகக் காஞ்சிபுரத்து வைகுந்தர் ஆலயக் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளது[14]. மேலும் காஞ்சியிலேயே பல்லவராஜன் என்ற ஒருவன் இருந்தான் என்பதும், அவன் பல்லவ மல்லனுடன் (நந்திவர்மனுடன்) போரிட்டு மரித்தான் என்றும் அவை உரைக்கின்றன.

பன்னிரண்டு வயதில் பல்லவ அரியணை ஏறிய நந்திவர்மன் தாயத்தாரின் எதிர்ப்புகளுக்கு இளம் வயதிலேயே ஈடுகொடுக்க வேண்டியிருந்தது. மேலும் வாதாபி சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிபுரத்தைத் தாக்கி அந்நகரினைக் கைப்பற்றினான், என்பதையும் பல்லவ அரசன் காஞ்சியை விட்டு வெளியேறினான் என்பதையும் காஞ்சி கயிலாயநாதர் ஆலயக் கல்வெட்டுக்களாலும்,

சாளுக்கிய நாட்டு சாசனங்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது[15]. சாளுக்கிய விக்கிரமாதித்தனால் காஞ்சி நகரம் கைப்பற்றப்பட்டதும் இளைஞனான நந்திவர்மன் தனக்குப் பாதுகாப்புமிக்க சோழநாட்டில் தங்கவேண்டியிருந்தது. அப்போது பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சோழநாட்டில் தோற்றுவிக்கப்பட்ட கடிநகரமே நந்திபுரமாகும்.

இவ்வாறு நந்திபுரத்தில் தங்கியிருந்த நந்திவர்மனைச் சித்திரமாயப் பல்லவராஜனும், தமிழ் அரசர்களும் (பாண்டியனோடு பிற மன்னர்களும்) முற்றுகையிட்டுச் சிறைப்படுத்தினர். இச்செய்தியினை அறிந்த வில்வலம் எனும் நகரத்தின் தலைவனும், பல்லவமல்லனைத் தன் பேரரசனாக ஏற்றுக் கொண்டவனும், பூசான் குலத்தில் பிறந்தவனுமான உதயசந்திரன் தம்பெரும் படையோடு நந்திபுரம் வந்து, பகைவர்களுடன் போரிட்டு, சித்திரமாயப் பல்லவராஜனைக் கொன்று, தம்பேரரசனான நந்திவர்மனை மீட்டான். பகைவர்களோடு அவன் சண்டையிட்ட போர்க்களங்களாக நிம்பவனம், சூதவனம், சங்கிரகிராமம் போன்ற ஊர்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றை முறையே வேப்பங்காடு, மாங்காடு, திருவுசாத்தானம் என்ற சோழ பாண்டி மண்டலத்து எல்லைப்புற ஊர்களாக ஆராய்ச்சியாளர் கூறுவர்[16]. இவ்வூர்கள் அனைத்தும் தஞ்சைக்குத் தெற்காக, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்ட ஊர்களாகும். எனவே நந்திபுர மீட்சிக்குப் பிறகு தமிழ் மன்னர்களுடன் குறிப்பாகப் பாண்டிய மன்னனுடன் பல்லவப்படை அடைந்த பெருவெற்றி உதயேந்திரம் செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ளது[17]. நந்திபுர முற்றுகையின் போது சித்திரமாயனுக்கு உதவியாக வந்த பாண்டியன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்[18]

உதயசந்திரன் நந்திபுரத்தினை மீட்டதற்குப் பின்பு பல்லவமல்லனான இரண்டாம் நந்திவர்மனின் பலம் மிகவும் ஓங்கியது. பாண்டிய மன்னனுடன் போரிட்டு அவன் வெற்றிபெற்றதைத் திருமங்கை ஆழ்வார் பரமேச்சுர விண்ணகரப் பாசுரத்தில்,

"தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத்
திசைப்பச் செருமேல்வியந் தன்று சென்ற

பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே"

(பெரியதிருமொழி 2:9:5)

"நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர்வேல்
நெடுவாயல் உகச்செரு வில் முன நாள்
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே."

(பெரியதிருமொழி 2:9:3)

என்றும் பாடுகிறார்.

இப்பதிகத்தில் குறிக்கப்படும் மண்ணை எனும் ஊர் தஞ்சாவூர் மாவட்டம் மணக்குடி என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது சாளுக்கிய விக்கிரமாதித்தியனின் தாக்குதலால் காஞ்சியை விடுத்துச் சோழநாட்டு நந்திபுரத்தில் தங்கிய நந்திவர்மன், சித்திரமாய பல்லவராஜனால் அல்லலுற்றதையும், பின்பு உதயசந்திரனின் ஆற்றலால் அவனைக் கொன்றதோடு, பாண்டிநாடுவரை சென்று பெரு வெற்றியும் பெற்று வலிமையுடன் திகழ்ந்ததையும். நாம் அறிய முடிகின்றது. அதனால் தான் 65 ஆண்டுகள் இவனது ஆட்சி தொடரமுடிந்தது.அப்பல்லவனின் வரலாற்றில் நந்திபுர நகரம் மிகச் சிறந்த இடத்தினைப் பெற்றது.

## கச்சிப்பேட்டில் நந்திபுரக்காட்சி

காஞ்சி மாநகரில் உள்ள பல்லவர்காலத்து ஆலயங் களுள் குறிப்பிடத்தக்கது வைகுந்தநாதப்பெருமாள் கோயில் எனும் வைணவ ஆலயமாகும். இரண்டாம் நந்திவர்ம பல்லவன் எடுப்பித்த சிறப்புடையது. திருமங்கை ஆழ்வார் "பரமேச்சுர விண்ணகரம்" என்று மங்களாசாசனம் செய்த திருப்பதி இது. இவ்வாலயத்தின் கருவறையைச் சுற்றியுள்ள மண்டபத்தின் உட்புறச்சுவர் முழுவதும் பல்லவர் வரலாற்றைச் சித்ரிக்கும் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. காட்சித் தொகுப்பகளுக்குக் கீழாகப் பல்லவ கிரந்தத்தில் கல்வெட்டுப் பொறிப்புகளும் உள்ளன. இவை குறிப்பிட்ட ஒவ்வொரு காட்சி பற்றிய

விளக்கங்களாகும். இதனை முழுமையாக ஆராய்ந்த டாக்டர் சி. மீனாட்சி அவர்கள் (The historical Sculptures of the Vaikuntaperumal Temple, Kanchi) என்ற நூலில்[19] இக்காட்சிகள் பற்றிய படங்களோடு பல்லவர் வரலாற்றைச் சிறப்புற எழுதியுள்ளார்கள். இந்நூலில் நந்திபுர முற்றுகையிலிருந்து உதயசந்திரன் மீட்பதும், பல்லவ மல்லனான நந்திவர்மன் நந்திபுரக்கோட்டையில் அமர்ந்துள்ளதுமான பல காட்சிகளை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இவ்வாலயத்துத் திருச்சுற்று மண்டபத்தின் தென்புறச் சுவரில் நந்திவர்ம பல்லவன் அமர்ந்திருத்தல், உதயசந்திரன் குதிரை மீது அமர்ந்த வண்ணம் தன் வீரர்களுடன் சித்திர மாயனின் படையை நோக்கிச் செல்லுதல், சித்திரமாய பல்லவனைத் தாக்கிக் கொல்லுதல், வெற்றிச் செய்தியினை வீரர்கள் பல்லவ மல்லனுக்குக் கூறுதல், மனமகிழ்வோடு நந்திவர்மன் வீற்றிருத்தல், பின்னர் உதயசந்திரன் பலவெற்றிகளைத் தழுவுதல் ஆகிய காட்சிகள் தொடர்சிற்பங்களாக உள்ளன.

உதயேந்திரம் செப்பேடு கூறும் நந்திபுர முற்றுகையும் மீட்புமான செய்திகள் இங்குக் காட்சிச் சிற்பங்களாக அமைந்து பல்லவன் கண்ட நந்திபுரத்தை நம் முன் நிறுத்துகின்றன.

## நந்திபுர விண்ணகரம்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவராகப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வாரைக்குறிப்பர். இவர் பெரிய திருமொழியில் தீதறு எனத்தொடங்கும் பாசுரமொன்றினைப் பாடியுள்ளார். பத்துப் பாடல்களிலும் "நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று நந்திபுரத்தில் திகழ்ந்த வைணவ ஆலயத்தைக் குறிக்கின்றார். இப்பதிகத்தின் ஏழாம் பாடலில்

தந்தைமன முந்து துயர் நந்த, இருள் வந்தவிறல்
 நந்தன் மதலை
எந்தையிவன் என்றமரர் கந்தமலர் கொண்டுதொழ
 நின்ற நகர் தான்

**மந்தமுழ வோசைமழை யாகவெழு கார்மயில்கள்**
**ஆடு பொழில்சூழ்**
**நந்திபணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம்**
**நண்ணு, மனமே.**

(பெரியதிருமொழி 5:10:7)

என்றும் குறிப்பிடுகின்றார்.

இப்பாடலில் காணப்படும் **நந்திபணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்** எனும் வரிகளால் நந்திபுர நகரம், நந்திவர்ம பல்லவனால் வளமையுற்றது என்பதும், அங்கு அவன் பெயரால் வைணவ ஆலயம் ஒன்று திகழ்ந்தது என்பதும் அறியப்பெறுகின்றது.

தற்போது கும்பகோணத்திற்கு அருகில், பழை யாறையை அடுத்த நாதன் கோயில் எனும் சிற்றூரில் திகழும் வைணவ ஆலயத்தினைத் திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனம் செய்த பதியான நந்திபுர விண்ணகரமாக வைணவர்கள் போற்றுகின்றனர். எனவே இச்சான்றையும். நாம் முன்னர்க் கண்ட திருக்கோடிக்கா கல்வெட்டு[20] கூறும் "பழையாற்று நந்திபுரம்" எனும் சான்றையும் கொண்டு நந்திவர்மன் முற்றுகைக்கு ஆளான நந்திபுரத்து அரண்மனை இருந்த இடம் இதுதான் என அறிஞர்கள் கணித்தனர்[21] மேலும் இவ்வூருக்கு அருகில் உள்ள நந்திவனம் எனும் ஊர்ப் பெயர் இன்றும் மக்கள் வழக்கில் இருப்பதும் இக் கருத்துக்கு மேலும் வலுவூட்டியது.

நாதன்கோயில் வைணவ ஆலயத்தில் திருமால் செப்புத்திருமேனி ஒன்று வழிபாட்டில் உள்ளது. இது பிற்காலப் பல்லவர்களின் கலைப்பாணியுடன் திகழ்கிறது. கலை அமைப்பால் கி.பி. எட்டாம் நூற்றாண்டு நந்திவர்ம பல்லவன் காலத்துச் செப்புத் திருமேனியாக இதனைக் கொள்ளலாம். இத்திருக்கோயிலில் இத் திருமேனி தவிர மற்ற எந்த ஒரு சான்றும் பல்லவர் அல்லது சோழர் காலத்தியதாக இல்லை. தற்போதைய திருக்கோயிலும் மற்ற அமைப்புகளும் தஞ்சை நாயக்கமன்னர்களால் திருப்பணிசெய்யப்பெற்ற திருக்கோயில் என்பதை மெய்ப்பிக்கின்றன. இதுதான் நந்திபுர விண்ணகரம் எனக் கூறத்தெளிவான சாசனச் சான்றுகள் ஏதும் இல்லை.



விஷ்ணு செப்புத்திருமேனி
நாதன் கோயில்

பழையாறு என்ற பெயரில் பல ஊர்கள் இருந்தது போலவே நந்திபுரம் என்ற பெயரிலும் நந்திவனம் என்ற பெயரிலும் பல ஊர்கள் இருப்பதைக் கண்டோம். சோழநாட்டைப் பொறுத்த வரை முற்காலச் சோழர்களின் கல்வெட்டுக்களில் அதிலும் குறிப்பாகப் பராந்தக சோழனின் காலத்துச் சாசனங்களில் குறிக்கப்படும் நந்திபுரங்கள் மூன்று. ஒன்று கிழார் கூற்றத்து ஆயிரத்தளியான நந்திபுரம், மற்றவை உம்பள நாட்டு நந்திபுரமும் பழையாற்று நந்திபுரமுமாகும்.

திருமங்கை ஆழ்வார் குறிப்பிடும் விண்ணகரம் இருந்த நந்திபுரம் இவை மூன்றில் எங்கும் இருந்திருக்கலாம். தேவாரத்தலமான திருநெற்குன்றம் எனும் ஊர் இது வரை பல ஊர்களாகப் பலரால் குறிக்கப்பெற்றது. அண்மையில் திரு. இல. தியாகராஜன் தெளிவான கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு லால்குடிக்கு அருகில் உள்ள திண்ணக்குளம் சிவாலயமே திருநெற்குன்றம் என்று நிறுவியுள்ளார்[22]. இது போன்று நாதன் கோயில் தான் நந்திபுரம் என மெய்ப்பிக்கத் தெளிவான கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் சான்றுகள் இல்லை. தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள சமஸ்கிருத ஏட்டுச்சுவடி ஒன்று "நந்திபுரமாகாத்மியம்" என்ற பெயரில் (B.No. 11328, D.No. 10028) உள்ளது. இதில் நந்திபுரம்–நந்திநாதபுரம் என்று குறிக்கப்பெற்றுள்ளது. பின்பு இதுவே நாதன்கோயில் என மருவியும் உள்ளது. வைணவ மரபு வழி போற்றப்பெறும் திருப்பதி என்பதாலும், அங்குப் பல்லவ மல்லன் காலத்தியது எனக் கலை வல்லோர் ஏற்கக் கூடிய விஷ்ணு திருமேனி வழிபாட்டில் இருப்பதாலும், நாதன் கோயிலை நந்திபுர விண்ணகரமாக நாம் ஏற்றுக் கொண்டாலும் நாதன் கோயில்–நந்திபுரம் என்ற பெயர் வழக்கிற்கான சான்றுகள் மிக பிற்காலத்தியவையே. ஆயினும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததும், பல்லவ மல்லன் வாழ்ந்த அரண்மனை இருந்ததுமான நந்திபுரம் செங்கமேடு–வீரசிங்கம் பேட்டை என்று ஊர்களாகத் திகழும் கிழார் கூற்றத்து நந்திபுரம்

தான

# நந்திபுரமும் ஆயிரத்தளியும்

நாம் முன்னர்த் திருக்கோடிக்காவில் கண்ட பழையாற்று நந்திபுரம் எனும் பராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டு மேலும் அதே காலத்தில் உம்பளநாட்டு நந்திபுரம் எனப் பேசும் திருமறைக்காட்டுக் கல்வெட்டு ஆகியவை தவிர நந்திபுரம் பற்றிப்பேசும் பிற கல்வெட்டுக்களை இனிக் காண்போம். முதற் பராந்தக சோழன் காலம் தொடங்கிப் பின்வந்த சோழர்கள், பாண்டியர்கள் காலம் வரை நந்திபுரம் அல்லது அவ்வூரின் மற்றொருபெயரான ஆயிரத்தளி என்ற பெயரில் இவை குறிக்கப் பெற்றுள்ளன.,

திருப்பழனம் ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் கருவறையின் வடபுறச் சுவரில் முதலாம் பராந்தக சோழனின் எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு உள்ளது[23]. அதில்,

> ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு அ ஆவது விறைக் கூற்றத்து தேவதானந் திருப்பழனத்து மகாதேவர்க்கு கிழ (ார் கூற்றத்து) தேவதான நந்திபுரமான ஆயிரத்தளித் திருவடி ஆயிரவன் சந்திராதித்தவல் இரவும் பகலும் ஒரு நொந்தாவிளக்கு உழக்குநெய் எண்ணையால் எரிவதற்குவைத்த சாவாமூவாப் பேராடு தொண்ணூறு இவ்வாடு கன்றாகொண்டு விளக்கெரிப்போமானோம் திருப்பழனத்து தேவ கன்மிகளோம் இவை பன்மாஹேஸ்வர இரக்ஷை

என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

திருச்சோற்றுத்துறை ஓதவனேஸ்வரர் திருக்கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ள பராந்தக சோழனின் பதினொன்றாம் ஆண்டுக் கல்வெட்டில்[24]

> ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மார்க்கு யாண்டு யக ஆவது கிழார்க்கூற்றத்து தேவதானம் திருச்சோற்றுத்துறை மகாதேவர்க்கு நந்திபுரமான ஆயிரத்தளி வியாபாரி மழபாடந் மழபாடி இரவும் பகலும் நிசதி உழக்கு நெய்யால் ஒரு நொ.................. தாதித்தவல் இது எரியவைத்த நிலைவிளக்கு க இவரே வீதி விடங்கர்க்கு தேவியாராக அட்டுவித்து குடுத்த

*................ இது பதிபால மூலத்தாரும் பந்மாகேஸ்வரரும் ரக்ஷை ...*

என்று காணப்படுகிறது.

திருப்பழனம் கோயிலில் உள்ள முதலாம் பராந்தக சோழனின் முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[25] கிழார் கூற்றத்து ஆயிரத்தளியைச் சேர்ந்த காரி ஆச்சனும் வியாபாரிகளும் திருப்பழனத்து இறைவனுக்குத் திருவிளக்கிட வைத்த பொன்பற்றி விவரிக்கின்றது.

இம் மூன்று கல்வெட்டுக்களும் கிழார் கூற்றத்தில் நந்திபுரம் எனும் ஊர் இருந்ததையும் அவ்வூருக்கு ஆயிரத்தளி என்ற மற்றொரு பெயர் இருந்ததையும் தெளிவாக அறிவிக்கின்றன.

கும்பகோணம் நாகேசுவரசுவாமி திருக்கோயிலில் உள்ள முதற்பராந்தக சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்[26]

*''வடகரை பாம்பூர்நாட்டுத் தேவதானம் திருக்குடமூக்கில் திருக் கீழ்கோட்டத்து ஒரு போது உண்ண நந்திபுரத்து வியாபாரி யெழுவன் மகாதேவன்வைத்த நிலம்....''*

என்று குறிக்கப்பெற்றுள்ளது

திருக்களாவூர் மதுவனேஸ்வரர் கோயிலில் உள்ள இதே மன்னனின் பதினான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில், இதேபோன்று திருக்குடமூக்கில் உள்ள கருகாவூர் மகாதேவர்க்கு நந்திபுரத்து வியாபாரி சாமுண்டன்மூர்த்தி நிலம் அளித்த செய்த கூறப்பெற்றுள்ளது. அக்கல்வெட்டுக் குறிப்பு[27].

*''ஸ்வஸ்திஸ்ரீ மதுரை கொண்டகோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு யசு ஆவது வடகரைபாம்பூர் நாட்டு தேவதானந் திருக்குடமூக்கீல்பால்க் கருகாவூர் மகாதேவர்க்கு சந்திராதித்தவற் ஒரு நொந்தா விளக்கினுக்கு நந்திபுரத்து வியாபாரி சாமுண்டன் மூர்த்தி கருகாவூர் நிலம் நான் விலைகொண்டு...''*

என்பதாகும்.

திருப்பழனம் திருக்கோயிலில் உள்ள முதற் பராந்தக சோழனின் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில்[28] பராந்தகன் மானாபரனாரின் தேவியான கிழவன் தேசப்புகழ் என்பாள் திருப்பழனத்து மகாதேவர் முன்பு திருவிளக்கிட 30 கழஞ்சுப்பொன் அளித்ததை **ஆயிரத்தளியைச்** சேர்ந்த பதிபாத மூலத்தார் பெற்றுக் கொண்டு செய்து கொடுத்த ஒப்பந்தம் சாசனமாகப் பொறிக்கப் பெற்றுள்ளது.

பரகேசரிவர்மனான முதற் பராந்தக சோழனின் திருச்சோற்றுத்துறைக் கல்வெட்டில்[29] (5ஆம் ஆட்சியாண்டு) **ஆயிரத்தளி** தேவனார் மகள் கலங்காசுடர் திருச்சோற்றுத் துறை இறைவர்க்கு அளித்த அறக்கொடைபற்றியும், இதே திருக்கோயிலில் உள்ள இம் மன்னனின் மற்றொரு கல்வெட்டில்[30] **ஆயிரத்தளி** வியாபாரி பழையாறன் சோழிய வரையன் திருவிளக்கிட வைத்த பொன் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இதே திருச்சோற்றுத்துறை மகாதேவர்க்குத் திரு விளக்கிட **ஆயிரத்தளி** பரமன் ஆதிச்சபிடாரி வைத்த பதின் கழஞ்சுப் பொன் பற்றிக் கூறும் பரகேசரிவர்மனின் காலத்துக் கல்வெட்டொன்றும்,[31] **ஆயிரத்தளி** மத்யஸ்தன் சோமாசி சேந்தனான சோழ பெருங்காவிதி என்பான் நிவேதனத்துக்கு அளித்த பொன் பற்றிக் கூறும் இராஜகேசரிவர்மனின் கல்வெட்டொன்றும்[32] விரிவாகக் காணப்படுகின்றன.

சுந்தரசோழன் காலத்துப் பழுவூர் கல்வெட்டுக்கள் மூன்றிலும்[33] திருச்செங்கோட்டுச் செப்பேடு[34] ஒன்றிலும் **நந்திபுரம்** பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளன. முதலாம் இராராஜனின் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுக்களில்[35] இந்த **ஆயிரத்தளி** பற்றிப் பதினெட்டு இடங்களில் குறிப்புகள் உள்ளன. கடாரம் கொண்ட பெருவேந்தன் முதலாம் இராஜேந்திரனின் கண்டியூர்க் கல்வெட்டுக்கள் இரண்டில்[36] **நித்தவிநோத வளநாட்டு ஆயிரத்தளி** குறிக்கப்பெற் றுள்ளன.

முதலாம் குலோத்துங்கனின் சிறிய ஆனை மங்கலச் செப்பேடுகள்[37] (Smaller Laiden grants) **ஆயிரத்தளியான ஆகவமல்ல குலகாலபுரத்திலிருந்து** வெளியிடப் பெற்ற

மன்னனது ஆணையாகக் குறிக்கப் பெற்றுள்ளன. இம் மன்னனின் திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்) கல்வெட்டு[38] (நித்யேஸ்வரர் கோயில்) **ஆயிரத்தளியான மீனவனை வெண்கண்ட சோழபுரம்** என்ற மற்றொரு பெயரினையும் குறிப்பிட்டு மன்னனது கோயில் பற்றியும் குறிப்பிடுகின்றது.

விக்கிரம சோழனின் 14 ஆம் ஆண்டுக் கல்வெட்டான திருச்சோற்றுத்துறை சாசனம்[39] **ஆயிரத்தளியான மீனவனை வெண்கண்ட சோழபுரத்து** விக்கிரம சோழப் பெருந் தெருவில் வசிக்கும் நகரத்தார் அளித்த கொடைபற்றிக் குறிப் பிடுகின்றது. இவன் தந்தையின் காலத்தில் திருச்சோற்றுத் துறையில் வெட்டுவிக்கப் பெற்ற கல்வெட்டு[40] **ஆயிரத்தளி எனும் ஆகவமல்ல குலகாலபுரத்து** நகரத்தார்கள் திருச் சோற்றுத்துறை மகாதேவர்க்குப் பார்த்திவேந்திர நல்லூரில் அளித்த நிலங்கள் பற்றி விவரிக்கின்றது.

இரண்டாம் இராஜராஜனின் பதின்மூன்றாம் ஆட்சி யாண்டில் இலவானாசூரில் வெட்டப் பெற்ற கல்வெட்டில்[41] **ஆயிரத்தளி கோயில்** பற்றியும் (அரண்மனை) அங்கிருந்த பல்லவராயன் மண்டபம் பற்றியும் செய்திகள் உள்ளன.

வரலாற்றுச் சிறப்புடைய பல்லவராயன் பேட்டை சாசனத்தில் [42] இரண்டாம் இராஜராஜன் துஞ்சிய இடமாக வும், பின்னர் அரசு குடும்பத்தினரும் உடன் கூட்டத்தாரும் தங்கியிருந்த இடமாகவும் ஆயிரத்தளி படை வீடு குறிக்கப்படுகின்றது. இதனை அச்சாசனம் "பெரிய தேவர் துஞ்சி அருளி பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநகக்ஷத்திரமாகையால் **ஆயிரத்தளிப் படை வீடும்** விட்டுப் போத வேண்டிப் போதுகிற இடத்து....." என்று பேசுகின்றது.

சோழர்களுக்குப் பின் வந்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், தான் கிழார் கூற்றத்து **ஆயிரத்தளி** அரண்மனையில் வீராபிஷேகம் செய்து கொண்டதாகத் தன் கல்வெட்டுக்களில்[43] கூறிக் கொள்கிறான்.

இவ்வாறு காலங்காலமாகப் பல்வேறு பெயர்களைச் சுமந்து, வரலாற்றில் பல முக்கிய நிகழ்வுகளுக்குக் காரணமாய்த் திகழ்ந்த நகரம் நந்திபுரத்து ஆயிரத்தளி என்பதனை இக்கல்வெட்டுக்கள் நமக்கு உணர்த்துகின்றன. இது

நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து ஊர்தான் என்பதும் தெளிவாகின்றது. மேலும் நந்திபுரம்–ஆயிரத்தளி பற்றிப் பேசும் பல கல்வெட்டுக்கள் உள்ள திருச்சோற்றுத் துறையும், திருப்பழனமும் இந்த ஆயிரத்தளியிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவுக்குள் உள்ள ஊர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழக வரலாற்றில் இரண்டு ஆயிரத்தளிகள்

தமிழக வரலாற்றில் "ஆயிரத்தளி" என்ற பெயரில் குறிக்கப்படும் ஊர்கள் இரண்டு தான்.

1. பாண்டிய குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து **நியமத்து ஆயிரத்தளி**[44].

2. நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து **நந்திபுரமான ஆயிரத்தளி**[45].

இவை இரண்டும் சோழ மண்டலத்து ஊர்களே. சிலர் பழையாற்று ஆயிரத்தளி என்றும், முடிகொண்ட சோழபுரத்து ஆயிரத்தளி என்றும் தம் நூல்களில் சான்றுகள் இன்றித் தவறாகக் குறித்தமையினால் பல குழப்பங்கள் ஏற்பட்டன.

சோழர்களது கல்வெட்டுக்கள், தேவாரப் பாடல்கள், மற்ற தமிழ் நூல்கள் ஆகியவற்றைத் தொகுத்து நோக்கும் போது பழையாறை நகரில் பல திருக்கோயில்கள் இருந்ததற்கான சான்றுகள் புலப்படுகின்றன. அவற்றை நோக்கும் போது பத்தொன்பது திருக்கோயில்கள் பற்றி அறிகிறோம்[46].

| அமைவிடம் | | பழைய பெயர் | இன்றைய பெயர் |
|---|---|---|---|
| 01. | பழையார் | ஆறை<br>பழையாறு<br>பழையாறை<br>பழசை | கீழப்பழையார்<br>சோமநாதர் ஆலயம் |
| 02. | முழையூர் | பழையாறை வடதளி | தருமபுரீசுவர் திருக்கோயில் |
| 03. | தென்தளி | சுவடழிந்த கோயில் | |
| 04. | திருமத்தடி | மேற்றளி | திருமத்தடி சிவன் கோயில் |
| 05. | பட்டீச்வரம் | பட்டிசரம் | தேனுபுரீஸ்வர் கோயில் |
| 06. | பட்டீச்வரம் | திருச்சத்திமுற்றம் | சிவக்கொழுந்தீஸ்வரர்கோயில் |

| | | | |
|---|---|---|---|
| 07. | | அரைஎருமான்தளி | சுவடழிந்த கோயில் |
| 08. | | முள்ளூர் நக்கன்தளி | சுவடழிந்த கோயில் |
| 09. | | சங்கீச்வரம் | சுவடழிந்த கோயில் |
| 10. | | நந்திகேச்வரம் | நந்திவனம்? |
| 11. | | அருமொழிதேவீச்சரம் | சுவடழிந்த கோயில் |
| 12. | அரிபுரம் | அரிச்சந்திரபுரம் | அரிபுரம் |
| 13. | அரிபுரம் | பாற்குளம் | பாற்குளம் |
| 14. | முழையூர் | முழையூர் | சுவடழிந்த கோயில் |
| 15. | பட்டீச்வரம் | பஞ்சவன் மாதேவிச்சரம் (பள்ளிப்படை) | இராமநாதன் கோயில் |
| 16. | தாராசுரம் | இராஜராஜேச்சரம் | ஐராவதேஸ்வரர் கோயில் |
| 17. | நாதன்கோயில் | நந்திபுர விண்ணகரம்? | விஷ்ணு ஆலயம் |
| 18. | கோணப் பெருமாள்கோயில் | கோபிநாதப் பெருமாள் கோயில் | கோணப் பெருமாள் |
| 19. | | இராஜ கம்பீரீச்வரம் | சுவடழிந்த கோயில் |

*இவ்வாறு தற்போது உள்ளனவும், மறைந்தனவுமான பல கோயில்கள் பற்றி அறிகிறோம். ஆனால் பழையாறையில் ஓர் ஆயிரத்தளி இருந்தது என்பது கற்பனையே.*

*தளி என்பது திருக்கோயிலைக் குறிப்பிடும் சொல் லாகும். செங்கற் கோயிலை மண் தளி என்றும். கருங்கற் கோயிலைக் கற்றளி என்றும் கூறுவர். தேவாரப் பதிகங்களும், தமிழகக் கல்வெட்டுக்களும் 'தளி' என்ற சொல்லால் பல திருக்கோயில்களைக் குறிப்பிடுகின்றன. இங்கு 'ஆயிரத்தளி' என்பது ஆயிரம் சிவலிங்கங்கள் உள்ள ஒரு சிவாலயத்தைக் குறிப்பிடும் சொல்லாகும். ஆயிரம், நூறு இலிங்கங்களை வழிபடும் நெறிகள் தோன்றியபோது நியமத்திலும், நந்திபுரத்திலும் ஆயிரத்தளிகள் தோன்றின.*

*பின்னாளில் 1000 இலிங்கங்கள் உள்ள சிவாலயம் என்பது வழிபாட்டிற்குக் கடினம் என்பதைக் கருதி ஆயிரம் சிவலிங்க உருவங்களை ஒரு பாணத்திலேயே அமைத்து ஒரே இலிங்கமாக வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இத்தகைய இலிங்கங்கள் திருவாரூர்த் திருக்கோயில் போன்ற திருக்கோயில்களில் இன்றும் வழிபாட்டில் உள்ளன. தஞ்சைக்கு அருகில் உள்ள பாபநாசத்தில் (திருஅரபுரம்)*

நூற்றெட்டுச் சிவாலயம் இன்றும் உள்ளது. இவ்வாறு நியமத்திலும், கிழார் கூற்றத்து நந்திபுரத்திலும் ஆயிரம் லிங்கங்கள் வழிபாட்டில் இருந்தன என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவைபற்றிப் பிற்பகுதியில் காண்போம்.

ஆயிரத்தளி என்பது திருக்கோயில் தான் என்பதைச் செந்தலை மற்றும் தஞ்சைக் கல்வெட்டுக்கள் வாயிலாக நிச்சயமாக உறுதிசெய்ய முடிகின்றது. செந்தலைக் கல்வெட்டில் "நியமத்து சகஸ்ரலிங்கேஸ்வரம்"[47] என்று குறிக்கப்பெற்றுள்ளதால், நியமத்து ஆயிரத்தளி என்பது ஆயிரம் சிவலிங்கங்கள் உள்ள திருக்கோயில் தான் என்பது உறுதி பெறுகின்றது. தஞ்சை இராஜராஜேச்சரத்துக் கல்வெட்டுக்கள் இம்மாமன்னன் சோழமண்டலத்தின் பலதளிகளிலிருந்து 435 ஆடல்மகளிரைத் தஞ்சைக் கோயிலுக்கு ஏற்றினமையை விவரிக்கின்றன. நியமத்து ஆயிரத்தளியில் இருந்து பல பெண்களும், கிழார் கூற்றத்து ஆயிரத்தளியிலிருந்து 19 பெண்களும் இவ்வாறு தஞ்சைக்கு வந்த செய்தியும் இக்கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளது.[48]

'கோயிற்பெயராலேயே சில ஊர்களும் அழைக்கப் பெற்றன. திருநாகேச்சரம் எனும் கோயிலால் அவ்வூர் திருநாகேசுவரமாயிற்று. ரங்கமன்னார் உறையும் கோயில் மன்னார் கோயிலாகிப் பின்பு கோயில் என்ற சொல் தெலுங்கில் "குடி" என்றழைக்கப்பெறுவதால் நாயக்கர்களால் மன்னார் குடியாக ஊர்ப் பெயரும் மாறிற்று. இதுபோலவே ஆயிரத்தளி இருந்த ஊர் ஆன நந்திபுரம் பின்னாளில் "ஆயிரத்தளி" என்ற ஊர்ப் பெயராகவே ஆயிற்று. அதுவும் காலப் போக்கில் பல மன்னர் விருதுப் பெயர்களோடு இணைந்து பின்பு முற்றிலுமாக வழக்கொழிந்தும் விட்டது. நந்திபுரம் ஆயிரத்தளியாகிப் பின்பு அதுவும் மறைந்து தற்போது வீரசிங்கம்பேட்டை (கண்டியூர்) என்று மருவியது தான் வரலாற்று உண்மை.

## ஆரூர் ஓவியத்தில் ஆயிரம் இலிங்கங்கள்

திருவாரூர் தியாகேசர் திருக்கோயில் இரண்டாம் திருச்சுற்றில் அரநெறி என்ற பாடல் பெற்ற திருக்கோயில் உள்ளது. இதன் முன்மண்டபத்து விதானத்தில் 19 ஆம்

நூற்றாண்டு ஓவியத் தொகுப்புகள் உள்ளன. இதில் ஆயிரம் லிங்கங்கள் உள்ள ஓவியமொன்றும் இடம் பெற்றுள்ளது. ஒரு பெரிய கட்டத்தை ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகட்டங் களாகப் பிரித்து அதில் லிங்க உருவம் காட்டப் பெற்றுள்ளது. இதனை ஓதுவார் ஒருவர் தீட்டியுள்ளார். ஆயிரம் லிங்கங்கள் அமைக்கும் முறைக்கு இது ஓர் அபூர்வ எடுத்துக்காட்டாகும்[49]

# ஆயிரத்தளியில் இருந்த கோயில்கள்

தஞ்சை இராஜராஜேச்சரத்துக் கல்வெட்டுக்கள், கண்டியூர் விரட்டானத்து அம்மன் கோயில் கல்வெட்டுக்கள் ஆகியவற்றை நோக்கும் போது கிழார்க் கூற்றத்து ஆயிரத்தளியில் இருந்த சில கோயில்கள், அங்கு ஆடற்பணி புரிந்த பெண்களின் பெயர்கள், இசைக் கலைஞர்கள் பற்றிய குறிப்புகள், மாமன்னன் இராஜேந்திர சோழனே நேரடியாக அளித்த அறக்கொடைகள், பாசுபத நெறிபோற்றிய பண்டிதர்களுக்கு அளித்த ஆசார்ய போகம் ஆகியவை பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது.

**மல்லீச்வரம்**

தஞ்சாவூர் இராஜராஜேஸ்வரத்தில் பணிபுரிந்த தளிச்சேரிப் பெண்களின் பட்டியலில் தெற்குத் தளிச்சேரியில் வடசிறகில் தொண்ணூறாம் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் மதனவல்லிக்காகவும், வடக்குத் தளிச்சேரியில் தென்சிறகில் முப்பதாம் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் பாக்கரிக்காவும், வடக்குத் தளிச்சேரி வடசிறகில் முப்பத்தொன்றாம் வீடு ஆயிரத்தளி மல்லீச்வரத்து நக்கன் பொற்செய்யாளுக்கும் அளிக்கப்பட்டமையைத் தஞ்சைக் கல்வெட்டுக்கள் விவரிக்கின்றன[50] எனவே மாமன்னன் முதலாம் இராஜராஜன் காலத்தில் ஆயிரத்தளியாம் நந்திபுரத்தில் மல்லீச்வரம் என்ற ஆலயம் இருந்தது என்பது தெளிவாகின்றது.

ஆயிரத்தளி மல்லீச்சரத்திலிருந்து தஞ்சைக்குச் சென்ற மூன்று தளிச்சேரிப் பெண்டிர் தவிர மேலும் பதினைந்து ஆடல்

மகளிர் ஆயிரத்தளியிலிருந்து தஞ்சைக்கு அனுப்பப் பெற்றனர். அவர்கள் பற்றிக்கூறும் பட்டியலைக் காண்போம்.

01. நாற்பத்தொன்றாம் வீடு ஆயிரத்தளி நக்கன் ஐயாற்றுக்குப் பங்கு ஒன்று

02. பதினொன்றாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அனவரத சுந்தரிக்குப் பங்கு ஒன்று.

03. பதினாலாம் வீடு ஆயிரத்தளி நக்கன் பட்டத்துக்குப் பங்கு ஒன்று.

04. பதினைந்தாம் வீடு இவ்வூர் நக்கன் இளங்காவுக்குப் பங்கு ஒன்று.

05. இருபத்தாறாம் வீடு ஆயிரத்தளி நக்கன் பிச்சிக்குப் பங்கு ஒன்று.

06. முப்பத்தஞ்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் தேவிக்குப் பங்கு ஒன்று.

07. முப்பத்தாறாம் வீடு இவ்வூர் நக்கன் திருவடிகளுக்குப் பங்கு ஒன்று.

08. முப்பத்தேழாம் வீடு இவ்வூர் கரியநக்கன் திருவடிக்குப் பங்கு ஒன்று.

09. பன்னிரெண்டாம் வீடு ஆயிரத்தளி நக்கன் வெண்காட்டுக்குப் பங்கு ஒன்று.

10. பதின் மூன்றாம் வீடு இவ்வூர் நக்கன் பொற்கோயில் தில்லை அழகிக்குப் பங்கு ஒன்றும்.

11. பதினைந்தாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அசங்கிக்குப் பங்கு ஒன்றும்.

12. முப்பத்தைஞ்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் ஒற்றியூர்க்குப் பங்கு ஒன்றும்.

13. முப்பத்தாறாம் வீடு இவ்வூர் நக்கன் ஆடல் அழகிக்குப் பங்கு ஒன்றும்.

14. முப்பத்தேழாம் வீடு இவ்வூர் நக்கன் குமாரடிக்குப் பங்கு ஒன்றும்.

15. அச்சாம் வீடு ஆயிரத்தளி நக்கன் அந்தனப் பொன்னுக்குப் பங்கு ஒன்றும்.

என்பதே அப்பட்டியலாகும்.

தஞ்சை இராஜராஜேச்சரத்து இக்கல்வெட்டுப் பட்டியலால் "மல்லீச்சரம்" என குறிப்பிடப் பெறும் கோயில்



ஓவியத்தில் ஆயிரம் இலிங்கங்கள்—
திருவாரூர் அரநெறி விதானம்.

வேறு, ஆயிரத்தளி எனும் திருக்கோயில் வேறு என்பதை அறிகிறோம். இவ்வூரில் நிலையாகப் பணிபுரிந்த தளிச்சேரிப் பெண்டிர் தவிரப் பதினெட்டு நங்கையர் தஞ்சைக்குச் சென்றமையைக் கல்வெட்டு சுட்டுவதால் ஆயிரத்தளியாம் நந்திபுரம் ஆடற்கலை தழைத்த பேரூர் என்பதும் தெளிவாகின்றது.

## ஸ்ரீபராந்தக தேவீஸ்வரம்

கண்டியூர் வீரட்டத்து மங்களாம்பிகை கோயிற் சுவரில் முதலாம் இராஜேந்திர சோழனின் இரண்டு கல்வெட்டுக்கள் [51] உள்ளன. அதில் ஒரு கல்வெட்டில்

> *"ஸ்வஸ்திஸ்ரீ ராஜத் ராஜான்ய மகுடஸ்ரேணி ரத்னேஷு சாசனம் ஏதத்ராஜேந்திர சோழஸ்ய பரகேசரி வர்மன :"*

எனத் தொடங்கும். இராஜேந்திர சோழனின் ஆணையான சாசனம் எனக் குறிப்பிட்டு, திருமன்னிவளர என்ற மெய்க்கீர்த்தியோடு;

> *" கோப்பரகேசரி வன்மரான ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு ஆறாவது நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து ஆயிரத்தளிபால் ஸ்ரீபராந்தக தேவீஸ்வரத்து நட்டவக் காணியும், மெய்மட்டுக்காணியும், மோர்வியக் காணியும், முன்பு காணி உடைய நித்தவிடங்கன் மல்லையன் செத்தமயில் இவன் முன்பு அனுபவித்த வண்ணம் இவன் மைத்துனன் நங்காதேவன் அரையன் ராஜராஜனான முடிகொண்ட சோழ வாச்சியமாராயனுக்கும் இவன் வம்சத்தார்க்கும் நட்டவமும், மெய்மட்டும், மோர்வியமும் காணியாகக் குடுத்தோம். கல்லில் வெட்டிக் குடுக்கவென்று இக்கோயில் மடமுடைய பிரம்ஹ சோம பண்டிதர்க்கும் ஸ்ரீகார்யஞ் செய்வார்களுக்கும் இத்தேவர் பதிபாதமூலப் பட்டுடை பஞ்சாச்சர்ய தேவகன்மிகளுக்கு திருமந்திரவோலை அயலூரடி கங்கை கொண்ட சோழன் எழுத்தினால் யாண்டு 26 வது 472 நாள் திருமுகம் பிரசாதஞ் செய்தருளிவர கல்வெட்டியது"*

என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

வரலாற்றுச் சிறப்புடைய இக்கல்வெட்டினால் கிழார் கூற்றத்து ஆயிரத்தளியில் (நந்திபுரத்தில்) ஸ்ரீ பராந்தக தேவீஸ்சரம் என்ற திருக்கோயில் இருந்தமை புலனாகின்றது. இக்கல்வெட்டு, நட்டவம் (ஆடற்கலை ஆசான் ஜதி கூறல்) மெய்மட்டு (நட்டுவத்துக்காக இசைக்கப்படுகின்ற மிருதங்கம்), மோர்வியம் (முகவீனை) ஆகிய பணிகள் புரிந்த நித்தவிடங்கன் மல்லையன் இறந்தமையால் அவன் மைத்துனனான நங்காதேவன் அரையன் ராஜராஜன் எனும் முடிகொண்ட சோழ வாத்திய மாராயனுக்கு இப்பெருவேந்தனே காணி கொடுத்துச் சிறப்பித்தமையைப் பேசுகின்றது. ஆடலும் இசையும் இத்திருக்கோயிலில் எவ்வளவு உயர்ந்த நிலையில் கடாரம் கொண்ட பெருவேந்தனின் நேரடியான ஆக்கத்தில் வளர்ந்தது என்பதையும், இந்தப் பராந்தக தேவீஸ்வரம் எவ்வாறு போற்றப் பெற்றது என்பதையும் இக் கல்வெட்டால் உலகு அறிகின்றது.

வானவன் மாதேவீச்சரம்

கண்டியூர் வீரட்டத்துக் கல்வெட்டுக்களில் மற்றொரு கல்வெட்டும் முதலாம் இராஜேந்திர சோழனின் நேரடி ஆணையாகவே உள்ளது. இராஜேந்திர சோழனின் சாசனம் எனக்கூறும் சமஸ்கிருத சுலோகத்தோடு இம்மன்னனின் மெய்க்கீர்த்தி கூறி

"கோப்பரகேசரி வன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ஆறாவது னித்த விநோத வளநாட்டுக் கிழார்கூற்றத்து ஆயிரத்தளிபாற் ஸ்ரீவானவன் மாதேவீஸ் வரமுடையார் தேவதானம் இன்னாட்டு முடிச் சோனாட்டு பட்டகள், கடம்பூர் உள்ளிறங்கல் நிலம் அஞ்சே முக்காலே னான்கு மாவின் கீழ் முக்காலினால் காணிக்கடன் ராஜேகேசரியால் ஆண்டுவரை நெல்லு ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்று+ அய்ங்கலனே பதக்கு னானாழி இன்னி வந்தஞ் செய்து கல்லில் வெட்டுவிக்கவென்று உய்ய கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு பிரமதேயம் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து இராமன் அருமொழியான உத்தமசோழ பிரமராயன் சொல்ல உடையார் இராஜேந்திர சோழ தேவர் ................................ நன்தேவன் கற்றியனும், சங்கரன்

*சாத்தனும் கண்காணியாக இருந்து கல்லில் வெட்டு வித்தபடி............*

எனத் தொடர்கின்றது.

இத்திருக்கோயில் இறைவனின் அமுதுபடிகளுக்காவும், சந்திவிளக்கு, சங்கராந்தி, ஐப்பசிவிஷு சித்திரை விஷு, உத்தரியப்புடவை, பரிசாரகன் சிவப்பிராமணர் மாணி திருமெழுக்கிடுதல் போன்ற பணிகளுக்காகவும் அளிக்கப்பெற்ற அறக்கொடைகள் பற்றியும் இக்கல்வெட்டில் கூறப்படுகின்றது. இக்கல்வெட்டில் குறிப்பிடத்தக்க அம்சமாக மடமுடைய லகுளீஸ்வர பண்டிதர்க்கு ஆசார்ய போகம் அளிக்கப் பெற்றதும் குறிக்கப்பெற்றுள்ளது.

கங்கைகொண்ட இப்பெருவேந்தன் காலத்தில் இங்கு ஸ்ரீபராந்தக தேவீஸ்வரம், வானவன் மாதேவீஸ்வரம் என்ற திருக்கோயில்கள் இருந்ததோடு பிரம்ஹசோம பண்டிதர், லகுளீஸ்வர பண்டிதர் போன்றவர்களின் மடங்களும் இங்கு இருந்தன என அறிகிறோம். இம்மடங்கள் ஆசார்ய போகம் பெற்றுச் சிறப்புடன் திகழ்ந்தன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## பள்ளிப்படைக் கோயில்களா?

இங்கு நாம் கண்ட ஸ்ரீபராந்தக தேவீச்சரம், வானவன் மாதேவீச்சரம் என்ற இரண்டு கோயில்களும் இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தரசோழனுக்காகவும் அவர் தேவியான வானவன் மாதேவியார்க்காகவும் எடுக்கப்பெற்ற பள்ளிப் படைக் கோயில்களே எனக் கொள்ளப் பல சான்றுகள் துணை நிற்கின்றன.

பள்ளிப்படை, அதீதகிருஹம் என்றெல்லாம் அழைக் கப்படும் கோயில்கள் இறந்தவர்களை எரியூட்டிப் பின்பு அவர்களது எலும்புக்குடங்கள் (அஸ்திக்கலசங்கள்) வைத்து அதன்மீது எடுக்கப்பெறும் ஆலயங்களே ஆகும். இவ்வாறு எடுக்கப்பெற்ற பல பள்ளிப்படைக் கோயில்கள் பற்றிக் கல்வெட்டுக்கள் பேசுகின்றன. சோழ அரச குடும்பத்தினர்க்காக எடுக்கப்பெற்ற சில பள்ளிப்படைக் கோயில்கள் இன்று எஞ்சி நிற்பதை நேரடியாக அறிய முடிவதோடு பல கோயில்கள்

பற்றிய குறிப்புகளைக் கல்வெட்டுக்கள் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

பல்லவர் காலத்துப் பள்ளிப்படைக்கோயில் பற்றி ஒரே ஒரு குறிப்புமட்டும் கிடைக்கின்றது[52] சோழர் காலத்துப் பள்ளிப்படைகள் மிகவும் பழமையானது தொண்டைமான் ஆற்றூரில் உள்ள பள்ளிப்படை வாகீஸ்வர பண்டிதபடாரர் ஸ்ரீ கோதண்டராமீஸ்வரமாகிய ஆதித்தேசுவரமாகும்[53] இதனைத் தொண்டைமான் ஆற்றூரில் துஞ்சிய முதலாம் ஆதித்த சோழனின் பள்ளிப்படை எனக்கூறுவர்[54]. ஆனால் இது ஆதித்தன் மற்றும் பராந்தகனால் மிகவும் போற்றப்பெற்ற ராஜகுருவான வாகீஸ்வர பண்டிதர் என்பவருக்காக எடுக்கப்பெற்ற பள்ளிப்படைக் கோயிலாக இருக்கலாம். இப்பள்ளிப்படை பற்றிப் பேசும் கல்வெட்டில் மாவிரதிகள் பற்றிய குறிப்பும் காணப்பெறுகின்றது.

## ஜம்பை ஆதீத கிருஹம்

தென் ஆர்க்காடு மாவட்டம ஜம்பையில் கண்டராதித்த சோழருக்காக எடுக்கப்பெற்ற பள்ளிப்படைக் கோயில் இருந்தது பற்றிய கல்வெட்டுக் குறிப்புக்கள்[55] உள்ளன. இதே ஊரில் உள்ள மற்றொரு கல்வெட்டு[56] இராஜேந்திர சோழனின் மகனான வீரராஜேந்திரனின் 6 ஆம் ஆட்சியாண்டில் மகாவிரதியான லகுளீஸ்வரபண்டிதர் கோயில் மேற்பார்வை யாளராக இருந்தமையைச் சுட்டுகின்றது.

## பள்ளிப்படை அரிஞ்சிகை ஈஸ்வரம்

அரிஞ்சிய சோழனின் பள்ளிப் படையாக வட ஆர்க்காடு மாவட்டம் மேல்பாடியில் அரிஞ்சிகை ஈஸ்வரம் என்ற பெயரில் மாமன்னன் இராஜராஜன் ஒரு கோயில் எடுத்ததை அக்கோயிலில் உள்ள கல்வெட்டு[57] கூறுகின்றது. இதனை அக்கல்வெட்டு "ஆற்றூர் துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக ஸ்ரீராஜராஜதேவர் எடுப்பித்தருளின திரு அரிஞ்சிகை ஈஸ்வரம்" என்று குறிப்பிடுகின்றது. இக்கோயில் இன்றும் உள்ளது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இப்பள்ளிப்படை நிர்வாகம் லகுளீச பண்டிதரால் மேற்கொள் ளப்பெற்றதாக இங்குள்ள மற்றொரு கல்வெட்டு[58] கூறுகின்றது.

### பள்ளிப்படை பஞ்சவன்மாதேவீஸ்வரம்

சோழநாட்டுப் பழையாறையில் (பட்டீச்சரம்) தற்போது ஒரு பள்ளிப்படைக் கோயில் நல்ல நிலையில் உள்ளது. இதனை முதலாம் இராஜேந்திர சோழன் எடுப்பித்தான். இது இராஜராஜனின் தேவியருள் ஒருவரான பஞ்சவன் மாதேவி இறந்த பின்பு எடுக்கப்பெற்ற கற்றளியாகும். இப்பள்ளிப் படைக்கோயில் சத்திரிய சிகாமணி வளநாட்டுச் செற்றூர் கூற்றத்து மருதூரினன் வெண்காடன் கோவந்தை என்பான் துணையோடு லகுளீஸ்வர பண்டிதரால் நிர்வகிக்கப்பெற்றது. என்பதை முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டு[59] கூறுகின்றது.

### சிவபாதசேகரமங்கலத்து ஸ்ரீசிவபாதசேகரர் திருமாளிகை

தஞ்சாவூர் மாவட்டம் உடையாளூர் தூண் கல்வெட்டால்[60] இராஜராஜனுக்குச் சிவபாதசேகர மங்கலத்தில் (பழையாறை- உடையாளூர்) ஒரு நினைவாலயம் இருந்தமையை அறிய முடிகின்றது. இதே போன்று தாராசுரம் கல்வெட்டால்[61] இரண்டாம் இராஜராஜனுக்கும் அவனது தேவியர்க்கும் பள்ளிப்படைகள் எடுக்கப்பெற்றதை அறியலாம். அவை முறையே

1. பள்ளிப்படை ராஜ கம்பீரீச்சரம்
2. பள்ளிப்படை புவன முழுதுடையாள் ஈச்சரம்
3. பள்ளிப் படை ஏழ் உலகுமுடையாள் ஈச்சரம்
4. பள்ளிப்படை திரிபுவன முழுதுடையாள் ஈச்சரம்
5. பள்ளிப்படை உலகுடை முக்கோக்கிழானடிகள் ஈச்சரம்

என்பவையாகும்.

கங்கை கொண்ட இராஜேந்திர சோழன் காலத்தும் அவனது மைந்தனான வீரராஜேந்திரன் காலத்திலும் மேல்பாடி, ஜம்பை, பழையாறை போன்ற இடங்களில் இருந்த பள்ளிப்படை கோயில்கள் மகாவிரதியான லகுளீஸ்வர பண்டிதரின் மேற்பார்வையில் இருந்தமையைக் கண்டோம். அதே லகுளீஸ்வர பண்டிதரின் மேற்பார்வையில் நித்த விநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து ஆயிரத்தளி வானவன் மாதேவீச்சரம் இருந்ததோடு, அவருக்கு ராஜேந்திர சோழனே ஆசார்ய போகம் அளித்த செய்தியையும் கண்டோம். இதே

போன்று இந்த ஊரில் இதே காலத்தில் இருந்த ஸ்ரீபராந்ததேவ ஈச்சரத்திற்கு பிரம்ஹசோம பண்டிதர் மடாதிபதியாக இருந்தமையையும், அவரிடம் சில அறக்கொடைகளை ராஜேந்திரசோழனே திருமுகம் அனுப்பி அளித்தமையையும் கண்டோம். இரண்டு மடமுடைய கோயில்களும் இரண்டாம் பராந்தகன் மற்றும் அவனது தேவியான வானவன் மாதேவியார்க்காகவும் எடுக்கப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்களே என்பதை மேற்கண்ட சான்றுகள் வலியுறுத்துகின்றன.

பராந்தகன் எனும் சுந்தரசோழர் காஞ்சிபுரத்துப் பொன் மாளிகையில் இருந்த போது இறந்தார். இவரைப் பொன் மாளிகை துஞ்சின தேவர் என்று கல்வெட்டுக்கள் குறிக்கும்[62]. இவரது உடல் எரியூட்டப்பெற்ற போது இவரது தேவியான வானவன் மாதேவியார் எரியுட்பாய்ந்து உயிர்நீத்தார். இந்நிகழ்ச்சியைத் திருக்கோவலூர் கல்வெட்டுப் பாடல்[63]

" இந்திரசமானன் இராஜ சர்வக்ஞன் என்னும்
புலியைப் பயந்த பெண் மான்
கலியைக் கரந்து கரவாக் காரிகை சுரந்த
முலை மகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகன் பிரியாத் தையல்
நிலைபெறுந் தூண்டா விளக்கு"

என்று கூறுகின்றது.

சுந்தரசோழனின் ஈமச்சிதையில் பாய்ந்து சாம்பலான வானவன் மாதேவி மற்றும் சுந்தர சோழனின் யாக்கை எச்சங்களான அஸ்திகள் மீது காஞ்சியில் அல்லவா பள்ளிப்படை எடுத்திருக்க வேண்டும்? காஞ்சியில் துஞ்சியவர்களுக்கு ஆயிரத்தளியில் எப்படி பள்ளிப்படை இருக்க முடியும் என்ற வினாக்கள் எழலாம். துஞ்சிய இடத்தில் தான் பள்ளிப்படை இருக்கவேண்டும் என்பது நியதி அன்று. பல பள்ளிப்படைகள் துஞ்சிய இடத்தில் இல்லாமல் வேறு இடங்களிலேயே எடுக்கப்பெற்றுள்ளன.

அனைத்துச் செய்திகளையும் தொகுத்து நோக்கும் போது மேற்குறித்த இரண்டு கோயில்களும் பள்ளிப் படையாகவோ அல்லது அவர்கள் பெயரில் நினைவாக

எடுக்கப்பெற்ற ஆலயங்களாகவோ இருக்கலாம். என்பது புலனாகின்றது.இவ்வாலயங்கள் பற்றி விரிவாகப் பிற்பகுதியில் காண்போம்.

## "பண்டை நந்திபுர மரியாதை...."

சோழ மண்டலத்தில் பண்டு முதல் நந்திபுரம் பெருநகரமாய்த் திகழ்ந்ததனால், புதியநகரங்கள் தோன்றும் போது அவற்றின் நிர்மாண அமைப்பு, நிர்வாக முறைகள், வரியிடுதல், அறங்கூர் அவயங்களில் தண்டம் பெறும் முறைகள் போன்றவை நந்திபுரத்தில் முன்னர் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே மேற்கொள்ளப்பட்டன. சோழப் பேரரசின் கீழ் சிற்றரசர்களாய்த் திகழ்ந்த பழுவேட்டரையர்களும், கொல்லி மழவர்களும் தம்தம் நகரங்களுக்குப் பண்டை நந்திபுர மற்றாதியே மன்றுபாடு, தண்டங்குற்றம் போன்றவற்றை விதித்தனர். சுந்தர சோழனின் ஆட்சியின் கீழ்த் திகழ்ந்த பழுவேட்டரையரின் கல்வெட்டுக்களும், கொல்லி மழவரின் செப்பேடும் நந்திபுரத்து நிர்வாக முறையைப் பின்பற்றியது பற்றி விவரிக்கின்றன.

திருச்சி மாவட்டம் அரியலூருக்கு அருகே உள்ள மேலபழுவூர் பழுவேட்டரையர்களின் தலைநகரமாகும். இது அக்காலத்தில் மன்னு பெரும் பழுவூர், அவனிகந்தர்வபுரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன், சோழப் பேரரசனாகத் திகழ்ந்தபோது பழுவேட்டரையர் மறவன் கண்டனார் (கி.பி. (962–980) இங்கு ஆட்சிபுரிந்தார். இவரது ஆணையாகத் திகழும் மூன்று கல்வெட்டுக்கள் மேலப்பழுவூர் அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் கருவறையில் உள்ளன. அவை மூன்றும் நந்திபுரம் பற்றிப் பின்வருமாறு பேசுகின்றன.

1. கருவரை வடபுறச்சுவரில் உள்ள கல்வெட்டு[64]

"ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி பந்மர்க்கு யாண்டு 10 ஆவது பழுவேட்டரையர் மறவன் கண்டனார் அவநிகந்தர்வபுரத்து மன்றுபாடு எப்பேர்பட்டது பண்டை நந்திபுர மற்றாதியே கொள்க என்று அருளிச் செய்ய கல்லின்

மேல் வெட்டிக் கொள்ளப்பெற்றார் அவநிகந்தர் வபுரத்து+ நகரத்தார்''

2. கருவறை வடபுறச் சுவரில் உள்ள மற்றொரு கல்வெட்டு[65]

''ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி பந்மர்க்கு யாண்டு 11 ஆவது அடிகள் பழுவேட்டரையர் மறவன் கண்டநார்க்கு கரம்பியன் பிராந்தகனான கருவிடைப் பேரரையன் விண்ணப்பம் எம்பெருமாள் பழுவூர் இரண்டு தளிப்பதியும் பாதமூலமும் இரண்டு நகரமும் பன்னிரண்டு கலனையும் மற்றும் எப்பேர் பட்டாரையும் கீழ்பகல்பட்ட மன்றுபாடும் மேல் மன்றுவளவும் மற்றும் எப்பேர் பட்டனவும் பண்டை நந்திபுர மற்றாதியே கொண்டு தருவது என்று விண்ணப்பம் செய்ய நாமும் பண்டை நந்திபுர மற்றாதியே கொள்க வென்று தத்தனூர் கிழவன் வேளான் சின்தாமணிக்கு ஸ்ரீமுக வர சந்திராதித்தவல் நிற்க கல்லின் மேல் வெட்டிக் கொண்டோம் இரண்டு தளிப்பதியும் பாதமூலத்தோம்

3. அகஸ்தீஸ்வரர் கருவறையின் முன்புறம் உள்ள மண்டபத்தின் கீழ்ப்புறச்சுவரில் உள்ள கல்வெட்டு[66]

''ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி ........கு.....ச..... டிகன் பழுவேட்டரையர் மறவன் கண்டந்........ னாவன் அரையன் நான கண்ட செட்டி விண்ணப்ப........ தோதபத்திக்காறச்செட்டி கன்னையும் இவர்கள் பணி........ எம் பெருமான் பண்டை நந்திபுர மற்றாதியே கொ......... ..........றன் கண்டண்ணி........ப் பெ......... ........மற் சந்தனை கொள்க வென்று.........ச்ச யநூதத்தனூர் கிழவன் வேளான் 'சின்தாமணிக்கு ஸ்ரீமுகம்வர நகரமும் காடன் பரமேஸ்வரன் ஏவலால் சந்திராதித்தவல் கல்லிலே வெட்டிவித்து கொண்டோம் தோதபத்திக்காறரோம்''

பழுவூர்க் கல்வெட்டுக்களில் நந்திபுரம் குறிப்பிடப் பட்டிருப்பது போன்றே கொல்விமழவன் ஒற்றியூரன் பிரதிகண்டவர்மனின் திருச்செங்கோட்டுச் செப்பேடு[67] பின்வருமாறு குறிக்கின்றது.

''ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜ கேசரி பன்மற்க்கு யாண்டு 10 வது மழவரையன் சுந்தர சோழனேன் தூசியூர் நகரத்தாரை நாங்கொள்ளு மிறை முழுமனை காலும் அரைமனை

அரைக்காலும் நின்ற இறை ஆகக் கொள்வதாகவும் தண்டங்குற்றமுள்ளது நந்திபுர மற்றாதி கொள்வதாகவும் இதன் நென்றான் ஸிகிதசந்தானம் துப்பனவறுவான இது இரக்ஷித்தானடி என் தலை மேலது"

இக் கல்வெட்டுகளும், செப்பேடும், பண்டு நந்திபுரம் வரலாற்றில் எவ்வளவு சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தது என்பதனை மெய்ப்பிக்கின்றன.

திருச்செங்கோட்டுச் செப்பேடு

i a



i b.



# ஆயிரத்தளி அரண்மனை

**பல்லவர் காலத்தில்.....**

பல்லவ மல்லன் நந்திவர்மன் நந்திபுரத்து அரண்மனையில் தங்கியிருந்தபோது சித்திரமாய பல்லவராஜன் மற்றும் தமிழக மன்னர்களால் முற்றுகை இடப் பெற்றதையும், பின்பு உதயசந்திரனால் முற்றுகை தவிர்க்கப்பெற்று பல்லவர் படை பெருவெற்றி எய்தியதையும் கண்டோம். இந்நிகழ்ச்சி, நந்திபுர அரண்மனை, வரலாற்றில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது என்பதனை நமக்குக் காட்டும் முதற் சான்றாகும். இதன் பிறகு பல்லவமல்லனின் புதல்வனான தந்திவர்மன் அவன் மகன் மூன்றாம் நந்திவர்மன் பின்வந்த நிருபதுங்கன் காலம் வரை நந்திபுரம் இவர்களது அரண்மனை இருந்த இடமாகத்தான் திகழ்ந்திருக்கிறது. இதனை நேராகக் கூறும் கல்வெட்டு, செப்பேடு போன்ற சான்றுகள் இதுகாறும் கிடைக்கவில்லையாயினும் இப்பகுதி இவர்களது ஆதிக்கத்தில் தான் இருந்தது என்பதனைக் காட்டப் பல சான்றுகள் உள்ளன.

இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் தண்டந்தோட்டம் செப்பேட்டின் வாயிலாக, இப்பெரு வேந்தனின் ஆளுகையின் கீழ் தஞ்சை மாவட்டம் திகழ்ந்தது என்பது உறுதி பெறுகின்றது. மேலும் உதயேந்திரம் செப்பேட்டில் மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கர கிராமம் எனும் ஊர்கள் நந்திபுரத்திலிருந்து சென்ற உதயசந்திரனின் படைகளால் வெற்றி கொள்ளப்பெற்றது எனக் குறிக்கப்பெற்றுள்ளதைக் கொண்டு, அவ்வூர்கள் முறையே மணக்குடி, வேப்பங்காடு திருவுசாத்தானம் எனும் கோவிலூர், சங்கரனார் குடிக்காடு என வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர்[68]. இவ்வூர்கள் யாவும் நந்திபுரமாம் ஆயிரத்தளிக்கு அண்மையில் உள்ள ஊர்கள் என்பதும் சோழபாண்டி நாடுகளின் எல்லையில் உள்ளவை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் மகனான தந்திவர்மனின் ஆட்சி இப்பகுதியில் இருந்தது என்பதற்குத் தஞ்சாவூர்[69], மலையடிப்பட்டி[70], குன்னாண்டார் கோயில்[71], திருவெள்ளறை[72] கல்வெட்டுக்கள் சான்று கூறுகின்றன.

இவற்றுள் குறிப்பிடத்தக்கதும், அண்மையில் டாக்டர் இரா. நாகசாமி அவர்களோடு யாமும் இணைந்து கண்டுபிடித்த தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ள தந்திவர்ம பல்லவனின் கல்வெட்டே நந்திபுர ஆய்வில் மேலும் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது. கி.பி. 985இல் முடிசூடிய இராஜராஜசோழன் புதிதாகத் தோற்றுவித்த இராஜராஜேச்சரம் எனும் கற்றளியில் பல்லவன் கல்வெட்டா?....வியப்பளிக்கலாம், ஆனாலும் உண்மை...இராஜராஜன் தஞ்சைப் பெருங்கோயிலுக்காக 430க்கும் மேற்பட்ட தளிச்சேரிப் பெண்டிரை நியமித்த நீண்ட பட்டியல் பெருங்கோயில் வடபுற மதிலில் கல்வெட்டாகத்[73] திகழ்கின்றது. அதில்,

> "தஞ்சாவூர் பிரம்மகுட்டத்து நக்கன் தூதுவிக்கு பங்கு ஒன்றும்"
>
> "தஞ்சாவூர் பிரம்மகுட்டத்து நக்கன் நல்லூர்க்கு பங்கு ஒன்றும்"
>
> "தஞ்சாவூர் பிரம்மகுட்டத்து நக்கன் பெற்றமைக்கு பங்கு ஒன்றும்"
>
> "தஞ்சாவூர் பிரம்மகுட்டத்து உவைச்சன் ஐயாறன் கண்டராச்சனுக்குப் பங்கு ஒன்றும்"

என்ற குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. மூன்று ஆடல் மகளிரும் ஒரு உவைச்சனும் தஞ்சாவூரில் இருந்த பிரம்ம குட்டம் எனும் கோயிலில் பணிபுரிந்தவர்கள் என்பது தெரியவருகின்றது. மேலும் பெருங்கோயில் எடுக்கப் பெற்றபோது பிரம்ம குட்டமும் வழிபாட்டில் இருந்த கோயில் என்பதும் உறுதிபெறுகின்றது.

சோழர்கள் ஆட்சிக்குப் பின்பு தஞ்சைப் பெருங் கோயிலின் மகாமண்டபம் இடிபாடுற்றது. பின்பு கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் பச்சியப்பநாயக்கர் என்பவர் அம்மண்டபத் தினைக் கற்பணி செய்து புதுப்பித்தார். இதுபற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் இரண்டு இம் மகா மண்டபத்தில் இரண்டு இடங்களில் இன்றும் உள்ளன.

பச்சியப்ப நாயக்கர் திருப்பணி செய்தபோது மகாமண்டபத்தின் நடுவில் குறுக்குச் சுவர் ஒன்றினை எடுப்பித்தார். இதற்காகத் தஞ்சாவூரில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இடிபாடுற்றுக் கிடந்த ஒரு கற்கோயிலின் கற்களை அப்படியே எடுத்து வந்து புதுப்பித்தார்.

அக்கோயிலில் இடம் பெற்றிருந்த பல கல்வெட்டுக்கள் இன்று பெருங்கோயிலில் காணப்படுகின்றன. இவ்வாறாக 30 க்கும் மேற்பட்ட துண்டுக் கல்வெட்டுக்கள் பிரம்ம குட்டத்துக் கோயில் பற்றிய குறிப்புகளோடு இச்சுவரில் உள்ளன. அவற்றுள் ஒன்றே தந்திவர்ம பல்லவனின் கல்வெட்டாகும்.

ஸ்ரீதந்தி என்ற பல்லவனின் பெயரோடு காணப்படும் இக்கல்வெட்டுத் தவிரப் பராந்தகசோழன் சுந்தரசோழன் குந்தவை, இராஜராஜன் ஆகியவர்களது கல்வெட்டுக்களும், "பிரம்மகுட்டம்" கோயில் பற்றிய செய்திகளும் குறிக்கப் பெற்றுள்ளன. இக் கல்வெட்டுக்களில் கி.பி. 795 லிருந்து 850 வரை ஆட்சிபுரிந்த தந்திவர்மனின் ஆளுகையின் கீழ் தஞ்சை திகழ்ந்த போது எடுக்கப் பெற்ற கோயில் பிரம்ம குட்டம் என்பது உறுதி பெறுகின்றது. மேலும் பல்லவர் கலைப் பாணிஉடைய சிம்மத்தூண் ஒன்றும் இச்சுவரருகில் உள்ளது. இது பல்லவர் கற்றளியின் எச்சமே.

தந்திவர்மனின் புதல்வனான மூன்றாம் நந்திவர்மன் "தெள்ளாறெறிந்த நந்திவர்மன்" என அழைக்கப்பெறுவான். இப்பெருவேந்தன் சிறப்புரைக்கும் நந்திக்கலம்பகம் இவனை

"காவிரி வளநாடா" (பாடல் எண் 17)
"காவிரி வளநாடன்" (28)
"காவிரி நன்னாடா" (57)
"பொன்னி நன்னாட்டு மன்னன்" (58)
"காவேரி வளநாடு ஆள்வோனே" (86)

என்று பலவாறு புகழ்கின்றது.

கிழார் கூற்றத்து நந்திபுரத்திலிருந்து மூன்று கல் தொலைவில் உள்ள திருவையாற்று ஐயாறப்பர் திருக் கோயி வின் திருமூலட்டானத்துக் கல்வெட்டில்[74] இம்மன்னனின் இப்பகுதி ஆளுகை சிறக்கப் பேசப்படுகிறது. மேலும் நந்திபுரத்தைச் சுற்றியுள்ள செந்தலை[75], திருநெய்த்தானம்[76] திருச்சென்னம் பூண்டி[77] (திருக்கடைமுடி), பொன்விளைந் தான்பட்டி[78], திருவைகாவூர்[79], திருக்கோடிக்காவல்[80], சேங்கா லிபுரம்[81], லால்குடி[82] போன்ற இடங்களில் உள்ள கல் வெட்டுகள் அனைத்தும் இவனது ஆளுகையின் கீழ் சோழ மண்டலம் திகழ்ந்தமையை விவரிக்கின்றன.

நந்தியின் புதல்வனான் நிருபதுங்கனின் கண்டியூர்[83] திருக்கோடிக்காவல்[84] திருச்சென்னம் பூண்டி[85] லால்குடி[86] கல்வெட்டுக்கள் நந்திபுரம் உள்ளிட்ட சோழநாட்டுப் பகுதிகள் இப்பெருவேந்தனின் ஆளுகையின் கீழ் இருந்தமையை விவரிக்கின்றன. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது சோழப்பெருநாட்டின் சீர்மிகு பல்லவ ஆட்சி நந்திபுரத்தினைத் தலைமை இடமாகக் கொண்டு மன்னனின் கோயிலாம் அரண்மனையோடு திகழ்ந்தது என்பது உறுதி பெறுகின்றது.

### சோழர் காலத்தில்

விஜயாலயன் ஆதித்தன் போன்ற சோழ மன்னர்களின் காலத்தில் இவர்களது தலைநகரமான தஞ்சாவூருக்கு மிக அருகாமையிலுள்ள நந்திபுரத்து ஆயிரத்தளி சோழர்களின் முழுக்கட்டுப்பாட்டுக்கு உட்படாத பகுதி என்பதையும், நட்பு முறையிலேயே பல்லவர்களிடமிருந்து சோழர்கள் மீட்காத நிலப்பகுதியாக இது இருந்தது என்பதையும், முதலாம் ஆதித்தன் காலம் வரை உள்ள கல்வெட்டுக்கள், திருக் கோயில்கள் வாயிலாக அறியமுடிகின்றது. முதற் பராந்தக சோழன் காலத்தில் நந்திபுரம் சோழர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இதனால் தான் பராந்தக சோழனின் பல கல்வெட்டுக்கள் நந்திபுர நகரம் பற்றிப் பேசுகின்றன.

சுந்தர சோழனின் பழுவூர் கல்வெட்டுக்களும், திருச் செங்கோட்டுச் செப்பேடும், நந்திபுர நகரின் மிகு சிறப்பைக் கூறவதோடு, வீரசோழியம் எனும் நூலின் உரைப்பாயிரமும்

“ பவளச் செழுஞ்கடர் மரகதப்பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்திபுரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையு முலகிற் சிறந்து வாழ்கெனவே” .

என்றுரைக்கின்றது.

சோழமன்னர்கள் உறையூர். தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், காஞ்சி, பழையாறை, நந்திபுரம் போன்ற இடங்களில் அரண்மனைகள் கொண்டு அவரவர்களுக் கேற்ற இடங்களில் தங்கி அரசு செலுத்தினர். சுந்தரசோழர் நந்திபுரத்தையே முக்கிய அரண்மனையாகக் கொண்டார் என்பதை மேற்குறித்த சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

சுந்தர சோழனுக்குப் பின்பு முதலாம் குலோத்துங்கன் ஆயிரத்தளி அரண்மனையை விரும்பினான் என்பதை அவனது சாசனங்கள் வாயிலாக அறிகிறோம். கி.பி. 1090 ஆம் ஆண்டில் கடாரத்து அரசன், இராச வித்யாதரசாமந்தன், அபிமானதுங்க சாமந்தன் எனும் தூதர்களைச் சோழநாட்டுக்கு அனுப்பினான். அவர்கள் முதற்குலோத்துங்கனை ஆயிரத்தளியான ஆஹவமல்ல குலகாலபுரத்து அரண்மனையில் திருமஞ்சன சாலையில் காலிங்கராயன் எனும் கட்டிலில் இருந்தபோது சந்தித்தனர். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க சோழகுல வல்லிப்பட்டணம் எனும் நாகப்பட்டினத்திலிருந்த பௌத்த விகாரைகளுக்குப் பல ஊர்களைத் தானமாக அளித்தான். இதனை எடுத்துக் கூறுவதே சிறிய ஆனைமங்கலச் செப்பேடுகளாகும்[87] (சிறிய லெய்டன் செப்பேடுகள்)



ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து ஆணையிடப்பெற்ற முதலாம் குலோத்துங்கனின் சிறிய ஆனைமங்கலச்செப்பேட்டுத் தொகுதியின் முதல் ஏடு.

மூன்று ஏடுகள் உள்ள இத்தொகுதியின் முதலாம் ஏடு ஆயிரத்தளி அரண்மனை பற்றியும், அவ்வூருக்கு ஆஹவமல்ல குலகாலபுரம் என்ற பெயர் இருந்தமையையும் மன்னனது பள்ளிக் கட்டிலுக்குக் காலிங்கராயன் என்ற பெயர் இருந்ததையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

....''கோவிராஜ கேசரிவர்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபதாவது ஆயிரத்தளியான ஆகவமல்ல குலகாலபுரத்து கோயிலின் உள்ளால் திருமஞ்சனசாலையில் பள்ளிப் பீடம் காலிங்கராயனில் எழுந்தருளி இருக்க கிடாரத்தரையன்'' ...

இங்குக் கோயில் எனக் குறிப்பிடப்படுவது மன்னனது அரண்மனையையே. திருமஞ்சனசாலை என்பது மன்னனது அபிடேக மண்டபமாகும்.

தற்போது ஹாலந்து நாட்டில் லெய்டன் எனும் ஊரில் உள்ள அருங்காட்சியத்தில் இடம் பெற்றிருக்கும் இச்செப்பேட்டுச் சாசனம் ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து முதலாம் குலோத்துங்கனால் வெளியிடப்பெற்றது என்பது, நந்திபுரமாம் ஆயிரத்தளிக்குரிய தலையாய பெருமைகளுள் ஒன்றாகும்.

திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்) நித்தீஸ்வரர் கோயில் உண்ணாழி தென் சுவரில் '' புகழ்மாது விளங்க ஜெயமாது விரும்ப '' எனத் தொடரும் மெய்க் கீர்த்தியோடு உள்ள முதற்குலோத்துங்கனின் கல்வெட்டு[88]. ஆயிரத்தளியான மீனவனை மென்கண்ட சோழபுரத்துக் கோயிலில் உள்ள சேதிராஜன் எனும் அரியணையில் அமர்ந்த வண்ணம் திருமுட்டமுடைய மகாதேவர்க்குத் தேவதானமாக அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கின்றது.

இக்கல்வெட்டால் ஆயிரத்தளிக்கு மீனவனை மென் கண்ட சோழபுரம் என்ற பெயரும் இருந்திருக்கிறது. என்பது தெரிய வருகிறது. இப்பெயர் விக்கிரம சோழனின் திருச்சோற்றுத் துறைக் கல்வெட்டிலும்[89] உள்ளது. இம்மன்ன னின் முதற்போரான சாளுக்கிய நாட்டுப் போரில் வெற்றி பெற்றவுடன் அதன் காரணமாக ஆயிரத்தளிக்கு ஆகவமல்ல குலகாலபுரம் எனப் பெயரிட்டவன், மீண்டும் பாண்டியர்கள்

வென்றதால் மீனவனை மென்கண்ட சோழபுரம் என்று வேறு பெயரும் இட்டு அழைத்தான். இக்கல்வெட்டில் ஆயிரத்தளி அரண்மனையில் இருந்த அரியணைக்கு "சேதிராஜன்" என்ற பெயர் இருந்தது என்பதும் தெரியவருகின்றது. எனவே இப்பெருவேந்தனும் ஆயிரத்தளியில் உறைந்தவன் என்பது திண்ணம்.

முதற் குலோத்துங்கனின் கொள்ளுப் பேரனான இரண்டாம் இராஜராஜன் தம் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி.1159) இலவானாசூர் திருக்கோயில் இறைவனுக்கு நிவந்தங்கள் அளித்தான். இவ்வாணையை இராஜராஜன், ஆயிரத்தளி அரண்மனையில் இருந்த போது திருவாய் மொழிந்தருளினான். இது பற்றிக் கூறும் எலவானாசூர் கல்வெட்டு[90] பின்வருமாறு விவரிக்கின்றது.

> "ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜெயமாதும் நாமருவிய கலைமாதும் புகழ் மாதும் நயந்து புல்க அருமறை விதியிநெறியனைத்துந் தழைப்ப வருமுறை உரிமையில் மணிமுடி சூடி திங்கள் வெண்குடைத் திசைகளுறெட்டும் தங்கு தநிகூடம் தாநென விளங்கக் கருங்கலிபட்டியைச் செங்கோல் துரப்ப பொருங்கதிராழி புலி வளர்ந்துடன் வரவல்லவரிரட்ட. மீநவர் சிங்கணர் பல்லவ முதலியர் பார்த்திவர் பணிய எண்ணருங் கற்பம் மண்ணகம் புணர்ந்து செம்பொந் வீரஸிங்ஹாஸநந்து புவநமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 13 வது நாள் 184 நால் ஆயிரத்தளியிற் கோயிலில் உள்ளாலை ஆட்டத்து வெளியில் பல்லவராயன் மண்டபத்து எழுந்தருளியிருக்கக் கிளியூர் மலையமான் பெரிய உடையான் நிரேற்றானான ராஜராஜ மலையகுலராயன் திருவடித் தொழுது விண்ணப்பஞ்செய்யத் திருவாய் மொழிந் தருளினபடி......"

இறையாநரையூர் (எலவானாசூர் என்று தற்போது மருவி விட்டது) எனும் ஸ்ரீசோழகேரளச் சதுர்வேதி மங்கலத்து ஈசனான ஊர்பாகங்கொண்டருளிய மகாதேவர்க்கு நிவந்தம் அளித்தபோது இரண்டாம் ராஜராஜன் ஆயிரத்தளி அரண்மனையில் உள்ளாலை ஆட்டத்து வெளியில்

(கோட்டைக்குள் அமைந்த சுற்றிடத்தில்) இருந்த பல்லவராயன் மண்டபத்தில் அமர்ந்திருந்ததாகக் கூறுகிறது. இச்சாசனம்.

இக்கல்வெட்டு மட்டுமின்றி வரலாற்றுச் சிறப்புடையதும், வரலாற்று அறிஞர்களால் பல்வேறு கருத்துக்கள் கூறப்பெற்றதுமான பல்லவராயன் பேட்டைச் சாசனமும்[91] இரண்டாம் இராஜராஜன் துஞ்சிய இடமாகவே ஆயிரத்தளி அரண்மனையைக் குறிக்கின்றது. இக்கல்வெட்டில்,

> "....பெரியதேவர் துஞ்சியருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமாகையால் ஆயிரத்தளி படை வீடும் விட்டுப் போதவேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்புரமும்....ஆரங்களும் உள்ளிட்டன. எல்லாம் பரிகரித்துக் (கூட்டி)க் கொடுபோந்து ராஜராஜபுரத்திலே இருந்த இடத்துக்கு.........."

என்று கூறப்பெற்றிருப்பதால், இம்மன்னனின் ஓராண்டு, ஈராண்டு வயதுடைய இரண்டு பிள்ளைகளையும், அந்தப்புர மகளிரையும் மற்றவர்களையும் ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து இராஜராஜபுரத்து (தற்போதைய தாராசுரம் பழையாறை) அரண்மனைக்குப் பாதுகாப்பு நிமித்தம் பெருமாநம்பிப் பல்லவரையன் அழைத்து வந்த செய்திகளை அறிய முடிகிறது. மன்னரின இளஞ்சிறார்களை ஆயிரத்தளியிலிருந்து பழையாறைக்கு அழைத்து வந்ததோடு, குழப்பம் நிறைந்த சூழலில் இரண்டாம் இராஜாதிராஜனை அரியணை ஏற்றிய அரிய செய்தியும் இக்கல்வெட்டில் காணப்படுகிறது. எனவே இரண்டாம் ராஜராஜன் தான் விண்ணுலகு எய்தும் வரை வாழ்ந்தது ஆயிரத்தளி அரண்மனையிலே தான் என்பது இச்சான்றுகளால் உறுதி பெறுகின்றது. ஓராண்டு, ஈராண்டு, வயதுடைய குழந்தைகள் இவ்வரண்மனையை விட்டு அகன்றதற்குப் பின்பு சோழர் அரசியலில் இறுதிவரை ஆயிரத்தளி அரண்மனை பற்றிய செய்திகள் குறிக்கப்படவில்லை.

### பாண்டியர் காலத்தில்

சோழப்பெருமன்னர்களால் 200 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாண்டியநாடு அடிமைப்படுத்தப்பட்டிருந்தது. பாண்டியர்தம் சுந்தரமுடியும் இந்திர ஆரமும், ராஜேந்திர சோழன் ஈழத்திலிருந்து கவர்ந்து வந்தான். மூன்றாம் குலோத்துங்கனோ மதுரையம் பதியை வென்று பாண்டியர்

அரண்மனையைத் தரைமட்டமாக இடித்து அந்த இடத்தில் கழுதை கொண்டு உழுது கவடி (வரகு) விதைத்தான். அவனைப் புகழ்ந்து பாடிய பாணனுக்குப் " பாண்டியன்" எனப் பட்டமும் சூட்டினான். தம் குலத்திற்கு ஏற்பட்ட இழுக்கைத் துடைக்கப் பாண்டியர் வழியில் ஒரு விடி வெள்ளி தோன்றினான். பகைவர் தம் செருக்கழித்ததோடு தன் தலைநகருக்கு ஏற்பட்ட பேரழிவைத் தஞ்சைக்கும் உறந்தைக்கும் ஏற்படுத்தினான். மாறவர்மன் சுந்தர பாண்டியன் எனும் பாண்டியர் குலவிளக்கு. இவன் பட்டினப்பாலை எனும் அருந்தமிழ் நூல் பாடிய தற்காகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் பெரும் புலவருக்குக் கரிகாற்பெருவளத்தான் பரிசிலாகக் கொடுத்த பதினாறுகால் மண்டபத்திலுள்ள 16 தூண்களைத் தவிர மற்றச் சோழநாட்டு மண்டபங்கள் அனைத்தையுமே அழித்தான் என்பதை,

" வெறியார் தவளத் தொடைச் செய மாறன்
வெகுண்ட தொன் றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய் பட்டினப்
பாலைக் கன் று
நெறியால் விடுந்தூண் பதினா று மேயங்கு நின் றனவே'.

என்று திருவெள்ளறைக் கல்வெட்டுப் பாடல்[92] கூறுகின்றது. இவ்வாறு சோழநாட்டை அழித்துப் பெருவெற்றியைத் தழுவிய மாறவர்மன் சுந்தரபாண்டியன் பொன்மதில்களுடன் திகழ்ந்த ஆயிரத்தளி அரண்மனையில் சோழனது அரியணையில் அமர்ந்து வீராபிஷேகம் செய்து கொண்டதைத் திருப்பரங் குன்றம்[93], திருஆனைக்கா[94], திருவில்லிபுத்தூர்[95] கோயிற்கல் வெட்டுகள் மிக அழகாகக் குறிப்பிடுகின்றன.

## திருப்பரங்குன்றம்கல்வெட்டு

திருப்பரங்குன்றத்தின் தென்புறம் உள்ள உமை யாண்டான் கோயில் எனப்படும் குடைவரையில் காணப்படும் மிகநீண்ட கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதி பின்வருமாறு உள்ளது.

" ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமடந்தையும் புவி மடந்தையும் புயத்திருப்ப நாமருவிய கலை மடந்தையும்

ஜயமடந்தையும் நலஞ்சிறப்பக் கோளார்ந்த வினப்புலியும் கொடுஞ்சிலையும் குலைந்தொளிப்ப வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட இருங்கடல் வளையத்து இனிது அறம் பெருகக் கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப ஒரு குடை நிழலில் இருநிலஙகுளிர மூவகைத் தமிழும் முறைமையில் விளங்க நால்வகை வேதமும் நவின்றுடன் வளர ஐய்வகை வேழ்வியுஞ் செய்வினை இயற்ற அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ எண்டிசையளவுஞ் சக்கரம் செல்லக் கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளுவர், சிங்களர், தெலிங்கர், சீநர், குச்சரர், வில்லவர், மகதர், விக்கலர், செம்பியர், பல்லவர் முதலியர், பாத்திபர் எல்லாம் உறைவிடம் அருளென ஒருவர் முன் ஒருவர் முறை முறைகடவ தந்திறை குணந்திறைஞ்ச இலங்கொளி மணிமுடி இந்திரன் பூட்டிய புரைகதிர் ஆர மார்பினில் பொலியப் பனிமலர்த் தாமரைத் திசை முகன் படைத்த மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப் பொன்னிசூழ் நாட்டிற்புலி ஆணை போய் அகலக் கன்னிசூழ் நாட்டிற் கயல் ஆணை கைவளர வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித் தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக் காவியும் நீலமும் நின்று கவிநிழப்ப வாவியுமாறு மணிநீர் நலனழித்துக் கூடமும் மாமதிளுங் கோபுரமும் ஆடரங்கு மாடமும் மாளிகையும் மண்டபமும் பல இடித்துத் தொழுது வந்தடையார் நிருபதந்தோகையர் அழுத கண்ணீராறு பரப்பிக் கழுதைகொண்டு உழுது கவடி வித்திச் செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக வோட்டிப் பைம் பொன்முடி பறித்துப் பாணனுக்குக் குடுத்தருளிப் பாடருஞ் சிறப்பிற் பருதி வான்தோய் ஆடகப்புரிசை ஆயிரத்தளியில் சோழவளவன் அபிஷேக மண்டபத்து வீராபிஷேகம் செய்து.......... உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளிய ஸ்ரீகோமாறபன்மரான திருபுவனசக்கரவர்த்திகள் சோணாடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ஏழாவது" என்று கூறுகிறது.

## திருவாணைக்கா கல்வெட்டு

ஜம்புகேஸ்வரம் எனும் திருவானைக்காவுடையார் திருக்கோயில் கிழக்குக் கோபுரத்திலுள்ள சுந்தரபாண்

டியனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஆயிரத்தளியில் வீராபிஷேகம் செய்து கொண்டது விவரிக்கப் பெறுகின்றது.

## ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டு

*மாறவர்மன் சுந்தர பாண்டியனின் இரண்டாம் ஆண்டு 350 ஆம் நாளில் எழுதப்பெற்ற சாசனம் ஒன்று பூமருவிய என்ற மெய்க்கீர்த்தியோடு தொடங்குகிறது. ஆதிரயன் சங்கர நாராயணனான ஸ்ரீகண்டபட்டன் என்பான் பகவதி விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்காக நிலம் வாங்கியமை குறிக்கப்பெற்றுள்ளது. இதற்குரிய ஆணையைச் சுந்தரபாண்டியன் சோழ மண்டலத்தை வென்று, அம்மண்டலத்து நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து ஆயிரத்தளியாம் அமராவதி அரண்மனையில் "மழவராயன்" எனும் கட்டிலில் அமர்ந்திருந்தபோது வெளியிட்டதாகக் கூறுகிறது.*

இந்திய தொல்லியல் துறையின் 1926 ஆம் ஆண்டு பதிவுபெற்ற 549 ஆம் எண் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டான இச்சாசனம்தான் தமிழக வரலாற்றுக்குப் பல்லவன் தோற்றுவித்த நந்திபுரத்து அரண்மனையான ஆயிரத்தளி அரண்மனை நித்தவிநோத வளநாட்டு கிழார் கூற்றத்து ஆயிரத்தளியில் இருந்தது என்பதைத் தெள்ளத் தெளிவாக மெய்ப்பிக்கின்றது. சுந்தரபாண்டியன் காலத்தில் ஆயிரத்தளிக்கு அமராவதி என்ற பெயர் இருந்ததையும், மன்னனது அரியணைக் கட்டில் " மழவராயன்" என்ற பெயரால் அழைக்கப்பட்டதையும் அறிகிறோம்.

## கண்டியூர்க் கோயில்-பள்ளியறைக்கூடம்

மாறவர்மன் வீரபாண்டியன் சோழமண்டலத்து மன்னனாக கி.பி. 1334 இல் அரியணை ஏறியவன். இவன் கண்டியூர் கோயில் எனக் குறிப்பிடப்பெறும் ஆயிரத்தளி (நந்திபுரம்) அரண்மனையில் வாழ்ந்தவன். 1380 வரை இவனது ஆட்சி நீடித்தது என இவனது கல்வெட்டுக்களை ஆய்ந்த அறிஞர்கள் கணித்துள்ளனர்[96] சோழநாட்டு இராஜராஜபுரம் எனும் தாராசுரம் இவனது காலத்தில் இராராபுரம் எனவழங்கலாயிற்று. தாராசுரத்து ஐராவதீஸ்வரர் கோயிலில்

தென்புறத் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் இவனது மூன்றாவது ஆண்டுக் கல்வெட்டொன்றுள்ளது [97]. திருநரையூர்பற்றில் குருக்கை எனும் ஊரில் உள்ள பத்துவேலி நிலத்தினைத் தாராசுரம் கோயிலின் திருப்பணிகளுக்காக அளித்தான். இதற்குரிய ஆணையினை ஆயிரத்தளி அரண்மனையிலுள்ள தனது படுக்கை அறையில், படுக்கையில் அமர்ந்திருந்தபோது வெளியிட்டதாகக் கூறிக் கொள்கிறான். அக்கல்வெட்டை இனிக் காண்போம்.

## தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் கல்வெட்டு

(திருச்சுற்று தென்மேற்கு மூலையில் உள்ளது)

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ மாற பன்மர் திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு மூன்றாவது நாள் 292 நாள் பிரசாதம் செய்தருளின திருமுகப்படி சோழமண்டலத்து பாண்டிகுலபதி வளநாட்டுக் கண்டியூர் கோயில் பள்ளியறை கூடத்து பள்ளிப்பீடன் காளிங்கராயனில் எழுந்தருளி இருந்து செய்த நினைப்பின்படி.

2. குலோத்துங்க சோழவளநாட்டு மேல், கூற்று இராராபுரத்து இராராசஸ்வரமுடைய நாயனார் கோயில் திருப்பணிக்கு வேண்டுவனக் குடலாக இன்நாட்டு திருநறையூர் பற்றில் தென்குருக்கையான ராசநாராயண புரத்தில் (கார்) மறுவினையும் நிலத்தில் இருபதிற்று வேலி நிலம் மூன்றாவது பங்குனி மாத முதல்

3. முதலாதாங்க இறையிலியாகக் குடுத்து இந்நான் கெல்லையும் திருச் சூலக் கல்லும் நட்டுவித்து சந்திராதித்த வரையும், இம்முதல் கொண்டு திருப்பணியும் நடத்தி இப்படி கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்க என்று திருவாய் மொழிந்தருளின படிக்கு இவை இகுடி உடையான் எழுத்து இவை வில்ல.

4. வராயன் எழுத்து

இக்கல்வெட்டில், " பாண்டிகுலபதி வளநாட்டுக் கண்டியூர் கோயில் பள்ளியறை கூடத்து பள்ளிப் பீடன் காளிங்கராயன்" என்று கூறப்பெற்றுள்ளது. பிற்காலப்

பாண்டியர்கள் சோழநாட்டை வென்றபிறகு பல வளநாடு களின் பெயர்கள் மாற்றம் பெற்றன. பாண்டி குலாசனி வளநாடு என்ற பழம் பெயர் நீக்கப் பெற்றது. பாண்டிய குலபதி வளநாடு தோற்றம் பெற்றது. இவ்வளநாட்டில் கண்டியூர் இருந்தது. இச்சாசனத்தில் ஆயிரத்தளி கோயில் (அரண்மனை) என்று குறிக்கப் பெறாமல் கண்டியூர் கோயில் என்று குறிக்கப் பெற்றுள்ளதற்கு ஒரு வரலாற்றுக் காரணம் உண்டு. இக் கல்வெட்டின் காலம் கி.பி. 1337 ஆனால் 1311ல் மாலிக்காபூரின் தாக்குதலால் ஆயிரத்தளியின் கோயில்களும் அரண்மனைப் பகுதிகளும் தாக்கப்பெற்றது. ஆயிரம் லிங்கங்கள் உள்ள கோயில் முற்றிலுமாக அழிந்தது. அதனால் நான் பேரழிவிற்குப் பிறகு எஞ்சியிருந்த அரண்மனையில் இம்மன்னன் வாழ்ந்தான். ஆயிரத்தளியாம் கோயில் (இறைவனது கோயில்) இருந்த இடம் தற்போதைய வீரசிங்கம்பேட்டையின் வயிரங்காச்சித்தோப்பு என்பதும் மன்னனது அரண்மனை இருந்த இடம் தற்போதைய செங்கமேடு கிராமம் என்பதையும் களஆய்வின் போது கண்டோம். எனவே இச்சாசனம் ஆணையிடும் போது வீரபாண்டியன் ஆயிரத்தளி கோயில் எனக் குறிக்காமல் கண்டியூர்க் கோயில் (செங்கமேடு கண்டியூரின் பிடாகை யாகும்) எனறே குறிப்பிட்டுள்ளது. ஆயிரத்தளி அரண்மனை பற்றிப் பேசும் கடைசிக் கல்வெட்டும் இதுவே. இம்மன்னனின் இறுதி ஆண்டான கி.பி. 1380 வரை இந்த அரண்மனை நல்லநிலையில் இருந்திருக்க வேண்டும். இவனுக்குப் பிறகு இப்பகுதியில் பாண்டியர் ஆட்சியும் ஓய்ந்தது. அரண் மனையாம் கோயிலும் மறைந்தது.

## நந்திபுரத்தின் பேரழிவு

கி.பி. 750 இலிருந்து கி.பி. 1218இல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் வீராபிஷேகம் செய்து கொண்டதுவரை பல்லவர், சோழர், மற்றும் பாண்டியர் வரலாற்றில் மிகச் சிறந்தொரு பெருநகராக, மன்னனது அரண்மனை இருந்த இடமாக, திருக்கோயில்கள் பல இருந்த ஊராகத் திகழ்ந்த நந்திபுரம் ஆயிரத்தளி பாண்டியர்களின் ஆட்சிக் காலத்திலேயே பேரழிவிற்கு உட்பட்டு அழிந்தது. இதற்கு மூல

காரணமாய்த் திகழ்ந்தவன் பாண்டியர் மரபில் உதித்த ஒரு மன்னனே. பல்லவர் குடும்பத்தில் தாயத்தார் பூசல் ஏற்பட்ட குழப்ப நிலையில் உதயமான நந்திபுரநகரம் மீண்டும் பாண்டியர் குடும்பத்தில் ஏற்பட்ட தாயத்தார் பூசலால் அழிந்தது. இதனை அழித்தவனோ தில்லி சுல்தானின் தளபதியான மாலிக்காபூர் என்பவனாவான்.

மாலிக்காபூரின் தென்னாட்டுப் படைஎடுப்பை அமீர்குஸ்ரு,வசாப் போன்ற முகமதிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பெழுதி வைத்துள்ளனர். இவர்களது குறிப்புகள் உள்ள கையெழுத்து ஆவணங்கள், சென்ற நூற்றாண்டில் இலண்டன் மாநகரிலுள்ள ராயல் ஏசியாடிக் சொஸைட்டி, இண்டியா ஹவுஸ் என்ற ஆவணக்காப்பகங்களில் சேகரிக்கப் பெற்றிருந்தன. இவை அரபு மற்றும் பாரசீக மொழியில் எழுதப்பெற்றவையாகும். 1833 ஆம் ஆண்டு ஜெர்மானிய ஆய்வாளர் ஹெமர் பாக்ஸ்டால் (Hammer Purgstall) இவ்வாவணங்களின் ஜெர்மானிய மொழி பெயர்ப்பை வெளியிட்டார். 1871 இல் எலியட் மற்றும் டவ்ஸன் (Elliot & Dowson) இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து THE HISTORY OF INDIA எனும் தலைப்பில் ஏழு தொகுதிகளாக வெளியிட்டனர். இவற்றுள் மூன்றாம் தொகுதியில் மாலிக்காபூர் தமிழகத்தைத் தாக்கிய வரலாறு கூறப்பெற்றுள்ளது.

எலியட் மற்றும் டவ்ஸன் அமீர்குஸ்ரு பற்றிக் கூறும் போது "இந்துஸ்தான கிளி" என்றே இக்கவிஞனை, வரலாற்று எழுத்தாளனைக் குறிப்பிடுகின்றனர். 1253 இல் பிறந்து 1325 ல் இறந்ததாகவும், குஸ்ரு டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் அவைக்களப்புலவராய்த் திகழ்ந்ததாகவும் கூறுகின்றனர். அலாவுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக்காபூர் தென் னாட்டின் மீது படை எடுத்துக் கொள்ளையிட்ட இரு முறையும் அவனுடன் பயணித்துத் தான் கண்ணால் கண்ட காட்சிகளைக் குறிப்பெடுத்து எழுதியதே இவ்வாவணங்கள். 1309 இல் மாலிக் டெல்லியிலிருந்து புறப்பட்டுத் தேவகிரி வாரங்கல் வரை படைஎடுத்து 1310 இல் தில்லி திரும்பினான். இரண்டாம் முறை 18-11- 1310 இல் தில்லியிலிருந்து புறப்பட்டுத் தேவகிரி, பண்டிரி, துவாரசமுத்திரம், (கர்நாடகம்) மாபார் (தமிழகம்) வரை கொள்ளையிட்டு 18-10-1311 இல் தில்லி திரும்பியது இரண்டாம் நிகழ்வாகும்.

தமிழகத்திற்கு மாலிக்காபூர் வருவதற்குக் காரணமாய்த் திகழ்ந்தவன் பாண்டிய அரச குடும்பத்தைச் சேர்ந்த இராராஜன் சுந்தரபாண்டியன் எனபவனே. தாயத்தார்மீது பொறாமை யாலும், தான் நாடு பெற வேண்டிச் செய்த சூழ்ச்சியாலும், கொடியவன் மாலிக்காபூருடன் இணைந்தான். இதனால் தமிழகம் தனித்தன்மை கொண்ட தம் கலைச் செல்வங்களாம் கோயில்களை இழந்ததோடு நவநிதிச் செல்வங்களையும் இழந்தது.

துவாரசமுத்திரத்தினைப் பேரழிவின் விளிம்பிற்கு இட்டுச்சென்ற சுல்தானின் பெரும்படை 10–3–1311 இல் தமிழகத்திற்குள் நுழைந்தது. அன்று துவங்கி 25–4–1311 க்குச் சிலநாள்கள் பின்வரை தமிழகம் இவனது கொடுமையால் துகள் துகளாயிற்று. மாலிக்காபூர் தாக்கிய நகரங்களாக பிர்துல் (Birdhul), கண்டூர் (Kandur), ஜால்கோட்டா (Jalkota) பிரமஸ்புரி (Brahmastpuri) காம் (Kham) . மதுரா (Madura) போன்ற இடங்களைக் குறிப்பிடுகிறார். இதனை ஆராய்ந்த எலியட், பிர்துல் என்பது வீரதாவளம் (திருச்சிராப்பள்ளி) என்று குறிப்பிடுகினறார். குடந்தை N. சேதுராமன் கண்டூர் என்பது கண்டியூராக இருக்கலாம் எனக் கூறுகின்றார்[98] இவரே பிரமஸ்புரி என்பதனைப் பெரும்பற்ற புலியூர் அல்லது ஸ்ரீரங்கம் என்றும், ஜால்கோட்டா என்ப தனைக் கங்கைகொண்ட சோழபுரம் என்றும் குறிக்கின்றார்.

தமிழகத்துப் படை எடுப்பைப் பற்றி அமீர்குஸ்ரு கூறியுள்ளதைப் பின்வருமாறு எலியட் குறிப்பிடுகிறார்.

ஷாவால் மாதம் 18 ஆம் நாள் (10 மார்ச் 1311) மாலிக்காபூரின் படை முரசுகள் பேரிடியாய் ஒலிக்க, முன்பு கொள்ளையிட்ட பொருள்களை ஒட்டகங்கள் சுமக்க, மாபார் (தமிழக) படை எடுப்பு துவங்கிற்று. ஐந்து நாள்கள் கழித்து (15 மார்ச்சு 1311) துவார சமுத்திரத்தையும் மாபாரையும் பிரிக்கும் மலைத்தொடருக்கு வந்தார்கள். அங்கு இருவழிப்பாதை பிரிந்தன. ஒன்று சர்மலி (Sarmali) (சேர்வராயன் மலைத்தொடர்) க்கும் மற்றது தாபாருக்கும் (தகடூர்–தர்மபுரி) செல்லும் தடங்களாகும். அங்கிருந்து மீண்டும் பயணம் தொடர்ந்து ஓர் இராப்பொழுது கலோபரி (காவிரி) ஆற்றின்

கரையில் வந்து மணலில் முகாமிட்டனர். அங்கிருந்து பிர்துல் என்ற இடத்தைத் தாக்கி, படுகொலைகள் செய்து, சுற்றுப் புறத்தைப் பாழ்படுத்தினர். ராய்பீர் (அங்கிருந்த மன்னன்) அந்தத் தீவு நகரத்திலிருந்து தரைவழியாக, குறைந்த அளவு செல்வங்களை எடுத்துக் கொண்டு கண்டூர் நகரத்திற்குத் தப்பித்தான். அங்கும் அவனால் தங்கமுடியவில்லை. அங்கிருந்த காட்டிற்குள் மறைந்தான். அவ்வரசனைத் துரத்திச் சென்ற மாலிக்காபூரிடம், அந்த இந்து அரசனிடம் பணிபுரிந்த முகமதிய ஆட்கள் இனி அந்த இந்து அரசனுக்கு உதவப்போவதில்லை. என்று கூறி வந்து பணிந்தனர். அவர்கள் தம்பழக்க வழக்கங்களால் பாதி இந்துக்களே, அவர்கள் கொல்லபடுவதற்குத் தகுதி உள்ளவர்களே, அவர்கள் கலிமா சொல்வதால் மன்னித்துக் கொல்லாமல் விடுகிறேன்'' என்று கூறினான் மாலிக்காபூர்.

பிர்துவில் இருந்து தப்பிய அந்த மன்னனைக் கண்டூரில் மீண்டும் துரத்தினர். அவனது படையைச் சேர்ந்த நூற்றெட்டு யானைகளையும், அவனது நவநிதியம் சுமந்த யானையையும் கைப்பற்றினான். கண்டூரிலிருந்தும் அம்மன்னன் தப்பித்து ஜால்கோட்டா எனும் அவனது நகரத்திற்கு ஓடினான். இதனால் கோபமுற்ற மாலிக்காபூர் கண்டூர் நகர மக்களைப் படுகொலை செய்ய உத்தரவிட்டான். தப்பித்த இந்து மன்னனை மீண்டும் துரத்தி அவன் ஓடிய காட்டிற்குள் தேடினான். அங்குத்தடம் தெரியாததால் மீண்டும் கண்டூர் நகருக்கே திரும்பினான். அங்கு மேலும் யானைகள் கிடைக்குமா என்று தேடினான்.

கண்டூரில் இருக்கும் போது பிரமஸ்ட்புரியில் தங்கவிக்கிரகம் இருப்பதாகவும், அங்கு பல யானைகள் கட்டப்பட்டிருப்பதாகவும் அறிந்தான். அவ்விடத்தை அடைய இரவில் புறப்பட்டான். மறுநாள் காலை அங்குச் சென்று 250 க்கும் மேற்பட்ட யானைகளைக் கைப்பற்றினான். அங்கிருந்த கோயிலைத் தரைமட்டமாக இடிக்க மாலிக் உறுதியோடு இருந்தான். பின்னர் சொர்க்கபுரியாகத் திகழ்ந்த அந்தப் பொன்மயமான கோயிலையும் அங்கிருந்த வைரம் வைடூரியம் போன்ற நவமணிக் குவியல்களையும் கொள்ளையிட்டான். அக்கோயில் தரைமட்டமாக இடிக்கப்பட்டது. பின்னர் 710

ஆம் ஹிஜரா ஆண்டு ஜிலக்தா (Ziilkda) 13 ஆம் நாளில் (4–4–1311) பிர்துல் நகரம் முழுவதையும் அழித்துவிட்டு ஐந்து நாள்கள் கழித்து காம் நகரை அடைந்தான். அதன்பிறகு ஐந்து நாள்களில் மதுரை நகரை அடைந்தான். அங்கும் பேரழிவுகளும், பெருங்கொள்ளைகளும் நிகழ்ந்தன என்று மிகவிரிவாகக் குறிப்பிடுகிறார் அமீர்குஸ்ரு.

இங்கு அமீர் குஸ்ரு குறிப்பிடும் ஊர்கள் அனைத்தும் சோழநாட்டு ஊர்களாகவே அறிஞர்கள் கருதுகின்றனர். அவர் கூட்டும் கன்டூர் என்பது ஆயிரத்தளி (நந்திபுரம்) யின் ஒரு பகுதியாகத் திகழும் கண்டியூர் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மாலிக்காபூரின் இப்படை எடுப்பில் பெரும்பகுதி கண்டியூரில் நிகழ்ந்தவையாகும். யானைகளைக் கைப்பற்றியது, கோயில்களையும் கண்டியூர் மக்களையும் அழித்தது, இங்கிருந்த முகமதியர்களை மட்டும் மன்னித்துக் கொல்லாமல் விட்டது போன்ற பல நிகழ்வுகள் நிகழ்ந்தன.

இக்காரணங்களால் தான் இன்று நந்திபுர நகரம் இல்லை. ஆயிரத்தளி சகஸ்ரலிங்கக் கோயில் இல்லை. மல்லீச்சுரம் இல்லை. பராந்தக தேவீச்சுரம் இல்லை. வானவன் மாதேவீச்சரம் இல்லை. மன்னனது கோயிலோ, அபிஷேக மண்டபமோ, பல்லவராயன் மண்டபமோ, பள்ளியறைக் கூடமோ, காளிங்கராயன், சேதிராயன் போன்ற மன்னனது கட்டில்களோ இல்லை.

இப்படை எடுப்பால் நந்திபுரம் மட்டுமின்றித் தில்லை திருவரங்கம், கங்கைகொண்ட சோழபுரம், தஞ்சாவூர்ப் பெருங்கோயில் போன்றனவும் சிதைவுற்றன. தில்லையிலிருந்து மயிலாடுதுறை வழியாகத் திருவரங்கம் செல்லும் சாலையில் (காவிரிக்கரை வழி) தான் ஆயிரத்தளி–கண்டியூர் உள்ளது. இப்பகுதியில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களும் இத்தாக்குதலால் பேரழிவுக்கு உட்பட்டன. இதனை மெய்ப் பிக்கும் சான்றுகள் இரண்டு உண்டு.

தில்லையிலிருந்து திருவரங்கம் செல்லும் இவ்வழித் தடமெங்கும் பல இந்துக் கிராமங்கள் முகமதியப் பெருக்கம் பெற்றன. சில முற்றிலுமாக முகமதிய ஆதிக்கம் பெற்றன. உதாரணத்திற்கு இத்தடத்தில் உள்ள சோழர்கால ராஜகேசரி

சதுர்வேதிமங்கலம் ராஜகிரி என்று 100% முகமதிய ஊராக மாறியது. இதற்கு முக்கியமான காரணம் பல்லாயிரம் முகமதிய வீரர்கள் ஊர்களைச் சூறையாடும் போது அங்குள்ள பெண்களையும் சூறையாடினார்கள். இதன் பின்விளைவே இம் மாற்றங்களாகும். இதேபோன்று கண்டியூரைச் சுற்றியுள்ள ஊர்களான நடுக்கடை, திருப்பூந்துருத்தி, பசுபதிகோயில், அய்யம்பேட்டை பண்டாரவாடை, ராஜகிரி, பாபநாசம் போன்ற பலவூர்கள் முகமதிய கிராமங்களாக மாறியுள்ளதும் கண்டியூர் (நந்திபுரம்) நகர அழிவிற்குப் பின்னர் தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து இதே தடத்தில் பல திருக்கோயில்களில் சோழர்காலத் திருமேனிகள் இல்லாமல் இருப்பது வியப்பாக உள்ளது. அதே நேரத்தில் இத்தடத்தை ஒட்டி இருமருங்கும் சுமார் 15 கல் தொலைவில் உள்ள பல ஊர்களில் அடிக்கடி சோழர்காலச் செப்புத் திருமேனிகள் பல புதையுண்டு அண்மைக் காலங்களில் வெளிவருவதும், இப்படைஎடுப்பின் தாக்கமே என்பதை உய்த்துணரலாம்.

இவ்வளவு பேரழிவும், பெரும் மாற்றங்களும் 10–3–1311– லிருந்து 8– 4–1311–க்குள் நிகழ்ந்தது என்பதை அமீர் குஸ்ருவின் குறிப்புகளால் அறியமுடிகிறது. பெருமைமிகு நந்திபுரம் கி.பி. 1311–ல் அழிந்தது. எஞ்சிய அரண்மனையில் பின்புவந்த இரண்டாம் வீரபாண்டியன் ஆட்சிபுரிந்தான். இதனால் தான் தாராசுரம் கல்வெட்டில் தன்னுடைய அரண்மனையை "கண்டியூர் கோயில்" என்றே குறிப்பிட்டுக் கொள்கிறான். 1311–ல் பேரழிவுக்கு உட்பட்ட இந்நகரம் 1380–ல் வீரபாண்டியன் ஆட்சியோடு மறைந்து பெருமை இழந்து பல சிற்றூர்களாகப் பிரிந்தது.

# குறிப்புகள்

01. A.R.E. 30 of 1930-31

02. A.R.E. 255 of 1910

03. A.R.E. 452 of 1904
S.I.I. Vol XVII No. 483

04 Political Geography of Chola Mandalam
Y. Subarayalu
Tamil Nadu Archarological Department

05. 1. A.R.E 173 of 1931;
S.I.I. Vol XIX No. 294
2. A.R.E. 145 of 1927-28; S.I.I. Vol. XIX No. 213
A.R.E. 164 of 1927-28

06. A.R.E. 173 of 1931.

07. 1) A.R.E 145 of 1928;
S.I.I. Vol. XIX No. 213

08. 1) A.R.E. 164 of 1927-28
2) A.R.E. 147 of 1930 31
3) A.R.E. 23 of 1895
S.I.I. Vol V No. 579
4) A.R.E. 22 of 1895
S.I.I. Vol V No. 578
5) A.R.E. 163 of 1906

09. 1) Epigraphica Indica Vol XXII page 267
2) A.R.E 201 of 1930-31

10. 1) A.R.E. 194 of 1930-31
2) ஸ்ரீமுஷ்ணம் -நித்யேஸ்வரர் திருக்கோயில் கருவறை கல்வெட்டு

11. A.R.E 1926-27, page 91, para 43
A.R.E. 549 of 1926

12. Political Geography of Cholamandalam
Y. Subbarayalu Tamilnadu Archaeology Pubilcation.

13. S.I.I. Vol II No. 66
A.R.E. 318 of 1960-61

14. 'பல்லவர் செப்பேடு முப்பது' பக்

15. 1) Innovative Emperor and his personal Chapel,
Dr. R. Nagasamy, Marg Publication page 37

33. 1) S.I.I. Vol XIII No. 208
2) S.I.I. Vol. XIII No. 215
3) S.I.I. Vol. XIII No. 344

34. S.I.I. Vol, III Part III & IV No. 212.

35. S.I.I. Vol. II No. 66

36. 1) A.R.E. 22 of 1895, S.I.I. Vol. V No. 578
2) A.R.E. 23 of 1895, S.I.I. Vol. V No. 579

37. Epigraphica Indica Vol. XXII No. 35

38. A.R.E. 201 of 1930-31

39. ஸ்ரீமுஷ்ணம் நித்தியேஸ்வரர் கோயில் கருவறையில் உள்ள இக்கல்வெட்டுக் குறிப்புகள் நண்பர் திரு இராமச்சந்திரன், தமிழ்நாடு தொல்லியல்துறை, அவர்கள் மூலமாக கிடைத்தது.

40. A.R.E. 194 of 1930-31.

41. 1) A.R.E. 163 of 1906
2) வரலாற்று வடிவங்கள் பாகூர் குப்புசாமி,
சேகர் பதிப்பகம், கல்வெட்டு எண். 28

42 1) A.R.E. 433 of 1924
2) அருளுடையச் சோழமண்டலம், N. சேதுராமன்,
ராமன் & ராமன் கும்பகோணம், 1976, பக். 61-68.

43. 1) A.R.E. 1926 22, page 91, para 43, No. 549 of 1926
2) S.I.I. Vol IV No. 372,
A.R.E. 49 of 1890
3) Inscriptions, Pudukkottai State No. 256
4) A.R.E 47 of 1937-38
A.R.E. 38 of 1937-38

44. S.I.I. Vo. II No. 66

45. 1) A.R.E. 23 of 1895
2) A.R.E. 173 of 1931
3) A.R.E. 145 of 1927-28

46. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர், வே. மகாதேவன்,
அன்னபூர்ணா பதிப்பகம், 1980, பக். 34.

47. கல்வெட்டு கலைச்சொல் அகரமுதலி, சி. கோவிந்தராசனார்,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், 1987. பக் 41

48. S.I.I. Vol II No. 66

49. திருவாரூர் திருக்கோயில், குடவாயில் பாலசுப்பிரமணியன்,
ஸ்ரீதியாகராஜர் திருக்கோயில் வெளியீடு 1988.

50. S.I.I. Vol. II No. 66

51. 1) A.R.E. 22 of 1895, S.I.I. Vol. V. No. 578
    2) A.R.E. 23 of 1895, S.I.I. Vol. V. No. 579

52. சோழர் கலைப்பாணி, S.R. பாலசுப்ரமணியம்,
    பாரிநிலையம், சென்னை 1, பக்கம் 83.

53. S.I.I. Vol. VIII pp. 268 and 269.

54. பிற்காலச் சோழர் வரலாறு, தி.வை. சதாசிவபண்டாரத்தார் பக். 33.

55. த.அ. தொல்லியல்துறை கண்ட புதிய கல்வெட்டு.

56. K.A.N. Sastri, The Colas (1st.ed) I, 603; II 493, 494.

57. Early Chola Temples, S.R.B. Page 216

58. S.I.I. Vol. III No.15, 16, 17.

59. A.R.E. 1927.

60. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் உடையாளூர் பால்குளத்தம்மன்
    கோயிலில், பின்னாளில் இடம் பெற்ற தூண்கல்வெட்டு

61. Medieval Pandiyas, N. Sethuraman, 1980, page 25.

62. S.I.I. Vol. II No. 6
    S.I.I. Vol. V No. 723 and 980

63. S.I.I. Vol. II No. 6

64. S.I.I. Vol. XIII No.208

65. S.I.I. Vol. XIII No. 207

66. S.I.I. Vol. XIII No. 215

67. S.I.I. Vol. III Part III & IV No. 212.

68. செந்தமிழ் தொகுதி 22 பக். 10–11

69. தஞ்சை இராஜராஜேச்சரத்து மகாமண்டபத்து கல்வெட்டு புதிய கண்டுபிடிப்பு

70. Chronological list of Inscriptions of Pudukkottai State, p.2

71. 1) P.S.I. No. 17
    2) A.R.E. 348 of 1914

72. A.R.E. 541 of 1905; Epigraphica Indica Vol. XI P. 157
    திருவெள்ளறை, திரு. வேதாசலம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை.

73. S.I.I. Vol. II No. 66

74. திருவையாறு திரு S. இராஜகோபால் , தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

75. S.I.I. Vol. VI. No. 447,
    A.R.E. 11 of 1899.

76. A.R.E. 52 of 1895.

77. A.R.E. 283 of 1901

78. Master pieces of Early South Indian Bronzes, R. Nagasamy, page. 81

79. A.R.E. 48 of 1914; S.I.I. Vol. XII No. 58

80. A.R.E. 27 of 1930-31.

81. நன்னிலம் கல்வெட்டுக்கள் மூன்றாம் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கல்வெட்டு எண். 398/1978

82. A.R.E. 120 of 1929

83. A.R.E. 17 of 1895

84. A.R.E. 22 of 1930-31

85. A.R.E. 300, 301 of 1901.

86. A.R.E. 84 of 1892

87. Epigraphica Indica Vol. XXII No. 35.

88. ஸ்ரீமுஷ்ணம் நித்யேஸ்வரர் திருக்கோயில் கருவறை கல்வெட்டு, உதவி, திரு. S. இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை.

89. A.R.E. 201 of 1930-31.

90. 1) A.R.E. 163 of 1906
    2) வரலாற்று வடிவங்கள்—பாகூர் குப்புசாமி, சேகர் பதிப்பகம், க.எண். 28.

91. A.R.E. 433 of 1924
    அருளுடைச் சோழமண்டலம், N. சேதுராமன், பக். 64.

92. திருவெள்ளறை, திரு. வேதாசலம்
    தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, வெளியீடு

93. A.R.E. 49 of 1890, S.I.I. Vol. IV No. 372

94. A.R.E. 47 of 1937-38

95. 1) A.R.E. 1926-27, Page 91
    2) A.R.E. 549 of 1926

96. The Inperial Pandayas, N. Sethuraman, 1978, Page 201.

97. 1) A.R.E. 21 of 1908
    2) தென்னிந்திய கோயிற்சாசனங்கள், திரு. T.N. சுப்பிரமணியம் பகுதி II க.எண். 561.

98. The Imperial Pandyas
    N. Sethuraman, 1978. page. 179.


சோழநாட்டில்
நந்திபுரம்-ஆயிரத்தளி
அமைவிடம்
கொள்ளிடம்
காவிரி
திருவையாறு
குடமுருட்டி
← நந்திபுரம் - ஆயிரத்தளி
வெட்டாறு
தஞ்சாவூர்
வெண்ணாறு
வங்கக் கடல்
பாக் ஜலசந்தி

# களஆய்வில் நந்திபுரம்

1987 ஆம் ஆண்டு ஒருநாள் என் ஆசிரியர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கண்டியூர் கோயிலுக்கு என்னை அழைத்துச் சென்றார். கோயிலினுள் நுழைந்ததும் அங்குக் கருவறையில் உள்ள கல்வெட்டைச் சுட்டிக்காட்டி, அதனைப் படிக்குமாறு பணித்தார். அச்சாசனத்தின் தொடக்க வரிகளைப் படித்தேன்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய நிருபதுங்க விக்கிரம பருமற்கு யாண்டு 21 ஆவது. அவ்வாண்டு ஆர்காட்டுக் கூற்றத்து பிரமதேயம் திருக்கண்டியூர் சபையோம்"

– என்று தொடர்ந்தது. உடனே நான் இது பல்லவ மன்னன் நிருபதுங்கனின் கல்வெட்டு என்று ஆவலுடன் கூறினேன்.

இக்கல்வெட்டுக்கு அருகில், கோஷ்டத்திலுள்ள துர்கை திருவுருவத்தைக் காட்டி "இது சோழர் சிற்பமா"? எனக் கேட்டார். நான் இது அற்புதமான பல்லவர் சிற்பமாயிற்றே என்று கூறினேன். பின்பு கருவறைமுகமண்டபத்து வாயிலின் இருபுறமும் உள்ள இரண்டு சிற்பங்களைக் காட்டி அதே கேள்வியை மீண்டும் கேட்டார். "ஐயமே இல்லை இவையும் பல்லவ சிற்பங்கள் தான்" என்று உறுதியாகச் சொன்னேன். முதுகில் தட்டிக்கொடுத்த வண்ணம் திருச்சுற்றின் ஒரு கோடிக்கு என்னை அழைத்துச் சென்றார். கருவறையின் பீடம் முதல் கிரீவம் வரை சுட்டிக்காட்டி " இதைப் பார்க்கும் போது என்ன தோன்றுகிறது?" என்று கேட்டார். சற்று நேரம் உற்று நோக்கிய நான் " மகாபலிபுரத்துக் கடற்கரைக் கோயிலின் சிலசாயல்கள் உள்ளனவே" என்றேன். எனது பதில்கள் அவருக்குத் திருப்தி அளித்தன. திரு S.R. பாலசுப்பிரமணியம், திரு P.R. ஸ்ரீனிவாசன் போன்றவர்கள் இக்கோயிலை ஆதித்தன் (சோழன்) படைப்பாகவே எழுதியுள்ளார்கள் என்று அவர்களது கட்டுரைகள் பற்றி விரிவாகக் கூறிய வண்ணம் கருவறைக்கு என்னை அழைத்துச் சென்றார்.

கண்டியூர் வீரட்டத்து ஈசனைக் கண் குளிரத் தரிசித்தோம். அங்கிருந்த சிவாச்சாரியார் எங்களைக் கருவறையின் வலதுபுறம் உள்ள வாசல் பகுதிக்கு அழைத்துச்



வாகீஸ்வரர் - கண்டியூர்
(பிரமன் என அழைப்பர்)

சென்று அங்குக் கம்பீரமாகக் காட்சி நல்கும் ஒரு சிற்பத்தைக்காட்டி " இது பிரமன், அருகே இருப்பது சரஸ்வதி, இந்தவூரில் தான் பிரமனின் ஒரு தலையைச் சிவன் கிள்ளி எறிந்து விட்டார்" என்று தலபுராணத்தை விரிவாகச் சொன்னார். முழுவதையும் கேட்டுத் தரிசனம் முடித்துத் திரும்பும் போது உடன் வந்த சிவாச்சாரியாரிடம் மெலிந்த குரலில் "இந்த சுவாமிக்கு என்ன தியான சுலோகம்?" என்றார். அவரும் உடன் பிரம்மனின் தியான சுலோகத்தைக் கடகடவென ஒப்புவித்தார். பின்னர் இருவரும் மண்டபத்தில் ஒருபுறம் அமர்ந்தவாறு பேசத்தொடங்கினர். பேச்சின் இடையே, " நீங்கள் சிவாச்சாரியார் ஆயிற்றே ஹோமங்கள் செய்யும் போது அக்னியை அழைக்கும் முன்பு எந்த மூர்த்தத்தினை ஆவாஹனம் செய்வீர்கள்"–என்று கேட்டார். உடன் குருக்களும் கடகடவென வாகீஸ்வரன் வாகீஸ்வரி தியான சுலோகங்களைக் கூறி " அவாள் இல்லாமல் எப்படி அக்னி பிறப்பான்?" என்றார்.

இவ்வாறு குருக்கள் கூறிய வாகீஸ்வரன் தியான சுலோகத்தை மெதுவாக மீண்டும் சொல்லச் சொல்லித் தமிழிலும் விளக்கம் கேட்டார். அப்படியே அப்பெரியவரும் வரிவரியாகத் தமிழில் கூறி முடித்தார். " நீங்கள் முன்சொன்ன தியான சுலோகத்தையும் தற்போது சொன்ன சுலோகத்தையும் மீண்டும் சொல்லி இதில் எது இந்த உருவத்துக்குப் பொருந் துகிறது என்று பாருங்கள்" என்றார்.

சற்றுநேரம் அமைதியாக யோசித்த குருக்கள் "ஆகா...! அற்புதம் இவர் வாகீசமூர்த்தி தான்!... நாங்கள் ஏதோ பரம்பரையா பிரம்மன்னு தலபுராணத்தை அனுசரிச்சுச் சொல்றோம். நீங்க சொல்றது தான் சரி" என்று அங்கீகரித்தார்.

இவ்வளவு உரையாடலையும் கேட்டுக் கொண்டிருந்த நான் மீண்டும் அந்தச் சிற்பத்தின் முன் அமர்ந்து அங்குலம் அங்குலமாக உற்று நோக்கினேன். நான்கு முகங்கள் உள்ள அம்மூர்த்தத்தின் முன்முகம் மட்டும் மூக்கு உடைந்து பிற்காலத்தில் கல்தச்சர்களால் பொளியப்பட்டுப் புதுமுகம் உருவாக்கப்பட்டுள்ளது தெளிவாகப்பட்டது. மற்ற மூன்று முகங்களும் பல்லவர்களின் இறுதிக்காலச் சாயல் இருக்கும்

**கண்டியூர்க் கல்வெட்டின் ஒரு பகுதி**

*ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நிருபதொங்க விக்கிரம பருமற்கு யாண்டு உயக ஆவது அவ்வாண்டு ஆர்காட்டுக் கூற்றத்து பிரமதேயந் திருக்கண்டியூர் சபையோம் இவ்வூர்ச் சேரி விசைய நல்லூழான் மாறங்காளியிடை கொண்ட தீபமொன்றுக்குச் செம்பொன் சம்பிராணிப் பழங்காசினோடு யொப்பது ஊராடு கல்லால் னூற்றொருபதின் கழஞ்சு இவ்வூர்க் காளாபடாரியார்க்கு ஒழுகவிப்புறமாகப் பத்துசெய்யும் ஒழுக்குப்புறமாக ஒருமாச் செய்யும் ஆக பதினொரு மாச் செய்யும் எங்கள் பிரம்ஹ ..........றுக்கொடுத்த நிலத்துக் கெல்லை தானை......... ரஞ் சேந்தநும் இவன் தம்பி திவாகர நக்கனு........கள் நிலத்துக்கு கிழக்கும் பழையதளித் தேவதானமான நிலத்துக்குத் தெற்கும் இத்தேவ தான நிலத்துக்கும் வழிவஞ்சி வாய்க்கும் மேற்கும்......*

"இவ்வூர் காளாபடாரியார்க்கு" என்ற வரியும் "பழையதளி" என்ற சொல்லும் சில புதிய செய்திகளை நம் முன் கொணர்ந்தன. நிருபதுங்கனின் இருபத்தொன்றாம் ஆட்சி யாண்டில் கண்டியூரில் ஒரு காளாபிடாரி கோயில் இருந்தது என்பது உறுதியாயிற்று. அடுத்து இக்கல்வெட்டு உள்ள திருக்கோயிலோ அட்ட வீரட்டங்களுள் ஒன்று. திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றதும் ஆகும். எனவே கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலும் திகழ்ந்த திருக்கோயிலாகும். ஆனால் இங்கு மற்றொரு கோயிலைப் "பழையதளி" எனக்குறிப்பிடுவதால் இதனினும் தொன்மையான கோயில் அது எனவும் அறியமுடிந்தது.

இவ்விரு குறிப்புகளுமே அவை பற்றி மேலும் ஆராயத் தூண்டுகோலாய் அமைந்தன. காளாபிடாரி சிற்பமும், பழையதளியும் இவ்வூரில் எங்கேனும் இருக்க வேண்டும், அல்லது அழிந்துபட்டால் கூட எச்சங்களாக ஏதேனும் தடயங்களாவது கிடைக்க வேண்டும்; கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கண்டியூர் கிராமம் முழுதும் அலசத் துவங்கினோம்.

முதலில் தஞ்சை திருவையாறு நெடுஞ்சாலைக்கு மேற்காக உள்ள கண்டியூர் கிராமம் முழுவதும் தேடினோம்.

இங்குள்ள அய்யனார், அம்மன் கோயில்கள் எல்லாம் மிகவும் பிற்காலத்தியவை. பின்பு நெடுஞ்சாலைக்குக் கிழக்காக உள்ள கண்டியூர், அதனுடன் இணைந்த இரட்டைக்கோயில் ஆவிக்கரை ஆகியபகுதிகளில் ஆராய்ந்தோம்.

இப்பணியில் ஈடுபட்டிருந்த போது ஒரு நாள் கண்டியூர் வீரட்டானத்து சிவாச்சாரியார்

" வெட்ட வெட்ட எட்டிப்போகும்
முட்டு கட்ட இரட்டைக் கோயில்"

என்று இங்கு ஒரு பழமொழி சொல்லுவா, நீங்க தேடற கோயில் அங்கே இருக்கா போய்ப் பாருங்கோ என்றார். அன்றே இரட்டைக் கோயில் என அழைக்கப்படும் கண்டியூரின் பிடாகை (Hamlet) யான இரட்டைக் கோயில் எனும் இடத்துக்குப் போய்இங்கு ஏதேனும் இடிஞ்ச கோயில்களோ சிற்பங்களோ ஏதேனும் உள்ளதா என்று அங்குள்ள நண்பர்களிடம் விசாரித்தோம். அப்பொழுது ஒருவர் "நம்ம முத்துசாமி நாடார் வீட்டுக்குப் பின்புறம் ஒரு அம்மன் சிலை புதைஞ்சு கிடைச்சுது, அத அவரு கும்பிடுறாரு. போய் அவர் வீட்டுக் கொல்லையில் பாருங்கள்" என்று இடத்தையும் காண்பித்தார்.

இரட்டைக்கோயில் கிருஸ்துவ வெள்ளாளத் தெருவில் உள்ள திரு. முத்துசாமி நாடார் இல்லத்திற்குச் சென்றோம். வீட்டின் அருகே 1200 ஆண்டுகாலப் பெருமையோடு காளாபிடாரி அமர்ந்து கொண்டு காட்சி கொடுப்பதைக் கண்டோம். நிருபதுங்கனின் கல்வெட்டில் காணும் காளா பிடாரி இவளே தான் என்று என் உள் மனம் உணர்த்திற்று. அருமையான சிற்ப அமைப்பு. ஒரு காலை மடித்து அமர்ந்துள் ளாள். இடது கீழ்க் கரத்தில் கபாலம். வலது முன்கரம் அபயம் காட்டுகிறது. வலது மேற்கரத்தில் கத்தி. இடது மேற் கரத்தில் பாசம். எழிலுறுதேவி. முகத்தின் பொலிவு நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும். நிருபதுங்க பல்லவனின் காலத்திற்கே வந்து விட்டோமோ என்ற உணர்வு ஏற்படும். பாங்குறு பிற்காலப் பல்லவர் கலைநயம் மிளிர்வதால் இது கல்வெட்டு கூறும் காளாபிடாரி தான் என்று உறுதி செய்தோம்.

காளாபிடாரி கிடைத்து விட்டாள்; ஆனால் பழையதளி எங்கே? என மேலும் தேட முற்பட்டோம். அதே தெருவின் கோடியில் ஒரு பிற்கால அம்மன் கோயில் ஒன்று இருந்தது. அதன் வெளிப்புறத்தில் மிகப் பழமையான பல்லவர் காலத்துச் சிற்பம் ஒன்று இருப்பது கண்டோம். அது சப்தமாதர் சிற்பத்தொகுதியின் ஒரு பகுதி. வைஷ்ணவி, கௌமாரி ஆகிய இருதேவிகளின் உருவங்கள் மட்டும் எஞ்சியுள்ளன. இது கலை அமைப்பால் முற்காலப் பல்லவர்களின் சிற்பம் என்பதை உறுதி செய்தது. இது நிச்சயம் கல்வெட்டு கூறும் பழையதளியில் இடம் பெற்றிருந்த சிற்பம் என்பதை உணர்த்திற்று. மேலும் ஏதேனும் பழையதளியின் தடயங்கள் கிடைக்குமா எனத் தேட முற்பட்டோம்.

## இரண்டு சிவலிங்கங்கள்

காளாபிடாரி கிடைத்த தோட்டத்திற்கு அருகாமையில் இரண்டு பிரமாண்டமான சிவலிங்கங்கள் மற்றும் சிவாலயத்தின் இடிபாடுகள் சிதறிக்கிடந்தன. இரண்டு சிவலிங்கங்கள் இடம் பெற்றிருந்த கோயில்கள் இப்பகுதியில் இருந்ததால் தான் இப்பகுதிக்கு "இரட்டைக் கோயில்" எனக் காரணப் பெயர் ஏற்பட்டது என உணர்ந்தோம். இவற்றைக் கண்டபோது இவை சோழர்காலக் கோயில்களின் சான்றுகள் என்பதை மட்டும் தான் உணர்ந்தோம். இதன் பெருமையைப் பற்றி நெடுநாள்கள் கழித்துத்தான் அறிய இயன்றது. இப் பகுதியில் கிடந்த சிற்பங்கள் பலவற்றை கலைக் கூடங்களுக்கு சிலர் எடுத்துச் சென்றதாகவும் தகவலறிந்தோம்.

இக்கட்டுரையின் முற்பகுதியில் பராந்தக தேவீச்சுரம், வானவன் மாதேவீச்சுரம் என்ற இரண்டு கோயில்கள் முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுவது பற்றியும் இவை சுந்தர சோழனுக்காகவும் அவனது தேவியான வானவன் மாதேவிக்காகவும் எடுக்கப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்களாக இருக்கவேண்டும் என்றும் விவரித்துள்ளோம். அந்நினைவாலயங்களின் சான்றுகளே இங்கு நாம் காணும் இரட்டைக் கோயில்கள். இவ்விரண்டு சிவலிங்கங்களும் பராந்தகதேவீச்சுரத்து மகாதேவரும், வானவன் மாதேவீச் சுரத்து மகாதேவரும் எனக் கொள்ளல் எல்லாவகையிலும் பொருத்தமுடையதாகவும் வலுவான சான்றுகளை அடிப்படை


நந்திபுரம் - தற்போதைய ஊர்கள்
காவிரியாறு
குடமுருட்டியாறு
புள்ளமங்கை சாலை
வீரசிங்கம் பேட்டை
கண்டியூர்
வெட்டாறு
வெண்ணாறு





காளாபிடாரி
இரட்டைக் கோயில்

வாகீஸ்வரி
நாலுசாமிமேடு





வைஷ்ணவி
கௌமாரி

துர்க்கை
வீரசிங்கம்பேட்டை

யாகக் கொண்டதாகவும் உள்ளது. "நந்திபுர மன்னர் சுந்தரசோழர்" எனப் பழம்பாடல்கள் குறிப்பிடும் இப்பராந்தக தேவர் பெயராலும் அவர் தேவி வானவன் மாதேவி பெயராலும் இங்குக் கோயில்கள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவை தான் லகுளீஸ்வர பண்டிதராலும், பிரம்ஹசோம பண்டிதராலும் பேணிக்காக்கப்பெற்ற ஆலயங்கள் என்பதும் நம்மை வியப்பில்ஆழ்த்தும் செய்திகளாகும்.

## ஆவிக்கரை

இரட்டைக் கோயிலோடு ஒட்டிய வடபுறப்பகுதிக்கு ஆவிக்கரை என்றுபெயர். இவ்வழியாகத்தான் கண்டியூர் திருச்சோற்றுத்துறை புள்ளமங்கை சாலை செல்கிறது. இங்குக் குளக்கரையில் சிறிய அய்யனார் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் உள்ள அய்யனார் சிற்பம் மிகப் பழமையான பல்லவர்கள் காலப் பாங்குறு படைப்பு என்பதும் நோக்குதற்குரியதாம்.

சுமார் நான்கு அடி உயரமுடன் ஒருகால் மடிந்து யோகபட்டத்துடன் எழிலுடன் அமர்ந்துள்ள அய்யனின் கோலம் நம்மைப் பல்லவர் காலத்திற்கே கொண்டு செல்வதாகும்.

ஆவிக்கரைக் குளக்கரையை ஒட்டிப் பழமையான பெரிய செங்கற்கள் உள்ள பெரும் சுவர்களின் எச்சங்கள் இன்றும் உள்ளன. குளக்கரையில் உள்ள சிறிய பாலத்தின் பக்கசுவரில் ஒரு பல்லவ சிற்பத்தின் தலைமட்டும் புதைக்கப்பெற்றுள்ளது. இது சிவபெருமான் சிற்பம் என்பது கோலத்தால் தெளிவாகின்றது. இதுவும் "பழைய தளியின்" எச்சம் தான்!

## செங்கமேடு

இரட்டைக் கோயிலுக்கு நேர் கிழக்காக உள்ள ஊர் செங்கமேடு என்பதாகும். நெருக்கமான தென்னந்தோப்புகள், குளிர்ச்சியான காவிரிக்கரை, பசுமையான சோலைகள், வளமையான கழனிகள் சூழத்திகழும் இவ்வூருக்குக் காரணப் பெயர் உண்டு. தென்னந்தோப்புகளிலும், கழனிகளிலும், பல இடங்களில் செங்கற்சுவர்கள், இடிபாடுகள், செங்கல் மேடுகள்,

திகழ்ந்ததால் செங்கமேடாயிற்று. இவ்வாறு இருந்த செங் கற்களை இவ்வூர் மக்கள் காலங்காலமாகப் பல்வேறு பணிகளுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இன்றும் வயல்களில் குறிப்பிட்ட ஆழத்திற்குக் கீழாகச் செங்கற்சுவர்த் தடயங்கள் உள்ளதாக ஊர்மக்கள் கூறுகின்றனர்.

இவ்வூர்ப் பெரியவர் திரு திரிசங்கு வன்னியரைச் சந்தித்தோம். இவ்வூரின் பல வரலாற்றுத் தடயங்கள் பற்றியும் வயல்வெளிகளில் கிடைக்கும் செங்கற்கள் பற்றியும் விவரித் தார். வீரசிங்கம் பேட்டை செல்லும் வழியில் தனக்கு "நாலு சாமி மேடு" என்ற ஒரு பெரிய வாழைத்தோட்டம் இருப் பதையும் அங்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான்கு தலை யுடன் கூடிய சிலை ஒன்றும் ஒருதலையுடன் கூடிய சிலை ஒன்றும் புதைந்திருந்தது கிடைத்ததையும் கூறி அவற்றைத் தஞ்சை கலெக்டரிடம் தான் கொடுத்ததையும் அச்சிலைகளே தற்போது தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உள்ள தோட்டத்தில் இடம் பெற்றிருப்பவை என்பதனையும் விவரித்தார்.

## நாலுசாமி மேடு

திரு திரிசங்கு வன்னியரின் தகவல்களின் அடிப்படை யில் நாலுசாமிமேடு சென்றோம். வாகீசசிவமூர்த்தம் என்ன என்பதைக் கண்டியூர் கோயில் சிற்பத்தின் வாயிலாக அறிந்திருந்ததாலும், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உள்ள நான்கு முக சிற்பம் மற்றும் ஜடாபாரத்துடன் உள்ள சிவமூர்த்தம் பற்றி நன்கு அறிந்திருந்ததாலும் நாலுசாமி மேடு பற்றி விரிவாக ஆராய முற்பட்டோம்.

இங்கு வன்னியருக்குக் கிடைத்த நான்கு முக சிற்பம் தோற்றத்தில் கண்டியூர்ச் சிற்பத்தையே முற்றும் ஒத்திருந்தது. ஜடாமகுடம், பிறைச்சந்திரன் நான்குமுகங்களிலும் நெற்றிக் கண், ஒருகாதில் ஓலைச்சுருள் மறுகாதில் மகரக்குழை, நான்கு கரங்கள், பத்ம ஆசனம் கரங்களில் மலர், அக்கமாலை ஆகியவற்றோடு திகழும் இம்மூர்த்தி வாகீசசிவம் என்பதோடு, ஜடாபாரத்துடன் ஞானம் உரைக்கும் மற்றொரு மூர்த்தம் தெட்சிணாமூர்த்தியின் வடிவமே என்பதையும் உணர்ந்தோம். நாலுசாமிமேடு என்பதே காரணப்பெயராக அமைந்ததாகும்.




1. பல்லவர் கால அய்யனார்
2. காளாபிடாரி சிற்பம்
3. நாலுசாமிமேடு
4. பழையதளி—சப்தமாதர் சிற்பம்
5. செங்கமேடு (அரண்மனை)
6. ஆயிரத்தளி (கோயில்)
7. இலிங்கக் குவியல் (விநாயகர் கோயில்)
8. இலிங்கக் குவியல் (சிவாலயம்)
9. வாகீசர் சிற்பங்கள்

வன்னியரின் தோட்டம் முழுவதும் ஆராய்ந்தோம். பீடம் மட்டும் தெரியும் வண்ணம் ஒரு சிற்பம் புதைந்திருந்தது கண்டு, தோண்டி எடுத்தோம்.

அருமையான சிற்பம், இடுப்பிற்குக் கீழே பத்ம ஆசனத்துடன் எழிலுடன் திகழ்ந்தது. இது வாகீஸ்வரியின் சிற்பம் என்பது அமைப்பால் விளங்கிற்று. ஆதலால் நாலுசாமி மேடு, வாகீஸ்வரர் திருக்கோயில் இடம் பெற்றிருந்த வரலாற்றுச் சிறப்புடைய இடம் என்பது உறுதி பெறுகின்றது.

வீரசிங்கம் பேட்டை

நாலுசாமி மேடு பற்றியும், செங்கமேடு பற்றியும் ஆராய்ந்து கொண்டிருந்தபோது, ஒருநாள் தமிழக வார இதழ் (ஜூனியர் விகடன்) ஒன்றில் புதையல் பற்றி ஒரு செய்தி வெளியாயிற்று. வீரசிங்கம்பேட்டையில் தோட்டம் ஒன்றில் சிறுமியர் விளையாடும் போது பூமியில் பெட்டகம் ஒன்று புதைந்திருந்தது கண்டு தோண்டியதாகவும் அதில் பலவகையான முத்து, வைர அணிகள் இருந்ததாகவும், புதையல் இருந்தால் பூதம் இருக்குமென மற்றச் சிறுமிகள் கூறவே பயந்து மீண்டும் புதையலைப் புதைத்ததாகவும், பின்பு சில நாள்கள் சென்று பெரியவர்கள் பார்த்த போது புதையல் இல்லை என்றும் பலவிதமான செய்திகள் வெளிவந்தன. இதுபற்றிய செய்திகள் சேகரிக்கப் பத்திரிகைத் துறை நண்பர்கள் அடிக்கடி அவ்வூர் சென்று தகவல்கள் பெற முனைந்தனர்.

இந்து நிருபர் திரு. கணபதி, வானொலி நிருபர் திரு. இராஜன், பத்திரிகை புகைப்பட நிபுணர் திரு தஞ்சை ஜெயபாலன் போன்றவர்கள் வாயிலாக வீரசிங்கம் பேட்டை யில் நூற்றுக்கணக்கான சிவலிங்கங்கள் சிதறிக் கிடப்பதாகத் தகவல்அறிந்தோம். கண்டியூரோடு இணைந்துள்ள வீரசிங்கம் பேட்டையிலும் ஆய்வு மேற்கொள்ள முனைந்தோம்.

வீரசிங்கம் பேட்டை என்பது ஆவிக்கரை, செங்கமேடு, நாலுசாமிமேடு ஆகியவற்றோடு இணைந்துள்ள ஒரு பேரூர். நாலுசாமி மேட்டிலிருந்து களஆய்வுத்தளமாக வீரசிங்கம் பேட்டைக்குள் நுழைந்தோம். எங்கு நோக்கினும் குவியல் குவியல்களாகச் சிவலிங்கபாணங்கள். ஊர் முகப்பில் ஒரு

பாலம். இடிபாடுற்ற ஒரு கற்றளி இங்குப் பாலமாக உருவெடுத்துள்ளதைக் கண்டோம்.

ஊரினுள் ஒரு பிற்காலச் சிவாலயம். உள்ளே நுழைந்தால் 200 க்கும் மேற்பட்ட சிவலிங்க பாணங்கள் தெருவில் தோட்டத்தில் கிடைத்த சிவலிங்கங்களை இங்குச் சேர்த்து வைத்துள்ளதாகக் கூறினர். வினாயகர், துர்க்கை,-மகேசன், சந்திரசேகரர் போன்ற பல எழில்மிகு பல்லவ சிற்பங்களும் இங்கு இடம் பெற்றிருப்பது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. மேலும் இங்கு சிவபெருமான் நின்ற கோலத்தில் ஜடாமகுடதாரியாய் மகரக்குழைகள் அணிந்து, மழுவும் அக்கமாலையும் ஏந்தி, வரத கடிஹஸ்தங்களோடு நான்கு கரத்தினராய் அருள்பாலிக்கும் சிற்பக் காட்சி பல்லவர் சிற்பத்திறனின் நேர்த்திமிகு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

தெருக்கோடியில் உள்ள வினாயகர் கோயிலினுள் நுழைந்தோம். உள்ளே பிரகாரத்தில் சிவலிங்கக் குவியல். தரையில் பல சிவலிங்க பாணங்கள் புதைக்கப்பட்டு நிற்கின்றன. தெருவில் பலர் இல்லங்களின் படிகளாக பல்லவர் காலக் கோயில் அங்கங்கள் கிடப்பதையும் கண்டோம். புதையல் கிடைத்த இடம் எனப் பேசப்பட்ட வயிரங்காச்சித் தோப்பு என்ற தோட்டத்திற்குச் சென்றோம். அழகான தென்னந்தோப்பு (திரு. முருகேசன் என்பவருக்கு உரிமையானது). தோட்டத்தின் நடுவே அழகான வாகீஸ்வரியின் அமர்ந்த கோலச் சிற்பம். பல்லவர்களின் பாங்குறு படைப்பு. உடைந்த பல பல்லவ சிற்பங்கள். தோட்டம் முழுவதும் சிவலிங்கங்கள். அதே தோட்டத்தில் மேலும் இரு வாகீஸ்வரி சிற்பங்கள் தலை இழந்த நிலையில் இருந்தன. அங்கிருந்த தோட்டங்கள் வயல்கள் எல்லாவற்றிற்கும் எல்லைக் கற்களாக நடப்பட்டிருப்பவை சிவலிங்க பாணங்களே. ஊர் முழுவதும் உள்ள சிவலிங்க பாணங்களை எண்ணினேன் எண்ணிக்கை 400–க்கும் மேற்பட்டன.

மீண்டும் டாக்டர் இரா. நாகசாமி, பிரஞ்சு இந்திய கலைக்கழகத்தினைச் சார்ந்த லெர்னோ ஆகியோருடன் கண்டியூர், இரட்டைக் கோயில் நாலுசாமி மேடு, வீரசிங்கம் பேட்டை ஆகிய பகுதிகளுக்குச் சென்றோம். மிக அருமையான பல்லவர் கால நந்தி சிற்பத்தின் தலைப் பகுதியை ஓரிடத்தில்

(வீரசிங்கம்பேட்டை) கண்டோம். ஊரின் கிழக்காக ஒரு தெரு. அருகே ஒரு குளம். குளக்கரையில் மிகப் பெரிய அளவிலான சிவலிங்கத் திருவுருவங்கள், குளத்திலும் கரையிலும் இரண்டு வாகீஸ்வர் சிற்பங்களும், ஒரு வாகீஸ்வரி சிற்பமும் உடைந்த நிலையில் இருந்தன. அனைத்துமே பல்லவர் காலத்துப் படைப்புக்கள்.

லெர்னோ அவர்கள் சிவலிங்க பாணங்களின் உயரம் சுற்றளவு ஆகியவற்றை அளந்து குறித்துக் கொண்டார்கள். பின்னர் இதே தொகுதியைச் சேர்ந்த பல சிவலிங்கங்கள் கண்டியூர் கோயிலிலும், தஞ்சை பெரிய கோயில் திருச்சுற்றிலும் இருப்பதைக் கண்டு தகவல் தந்தார்கள். தஞ்சை அரண்மனையில் உள்ள மோடி ஆவணங்கள், இரண்டாம் சரபோசி காலத்தில் இவை தஞ்சைக் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டு 108 சிவலிங்கங்களாக பிரதிட்டை செய்யப்பட்ட வரலாற்றை விளக்குகின்றன. வீரசிங்கம் பேட்டையிலிருந்து 1கி.மீ. தொலைவில் உள்ள திருவேதிகுடி சிவாலயத்தில் இங்கிருந்து இடம் பெயர்ந்த 117 சிவலிங்கங்கள் இருப்பதையும் கண்டோம். இவை அனைத்தையும் சேர்த்துத் தொகுத்தால் வீரசிங்கம் பேட்டையில் இதுவரை கிடைத்துள்ள சிவலிங்கங்களின் மொத்த எண்ணிக்கை 650–க்கும் மேற்படுகின்றன.

## கள ஆய்வின் முடிவுகள்:

நித்த விநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து நந்தி புரமான ஆயிரத்தளி எனும் ஊர் தற்போதைய கண்டியூரின் ஒருபகுதி, இரட்டைக்கோயில், ஆவிக்கரை, நாலுசாமி மேடு, வீரசிங்கம் பேட்டை, ஆகிய சிற்றூர்கள் இணைந்த ஒரு பெரிய நகரமே ஆகும். இதன் வடக்காகக் குடமுருட்டியாறும், தெற்காக வெட்டாறும் பாய்ந்து வளமூட்டியதோடு அரணா கவும் திகழ்ந்தன. ஆயிரத்தளியில், மன்னனது கோயில் எனும் அரண்மனை திகழ்ந்த இடம் செங்கமேடு மற்றும் வீரசிங்கம்பேட்டை பகுதியே ஆகும் என்பது இட அமைப் பாலும், பழமையின் எச்சங்களாலும் உறுதி பெறுகின்றது.



நந்தியின் தலை (பல்லவர் சிற்பம்)



இலிங்கங்கள்

# ஆயிரத்தளி - சகஸ்ரலிங்கேஸ்வரம்

''செந்தலை'' எனும் சிறுநூலில் திரு S.R. பாலசுப்பிரமணியம் அவர்கள் நியமத்தில் ஒரு தோப்பில் பலநூற்றுக் கணக்கான லிங்கங்கள் கிடப்பதாகவும், இது நியமத்து ஆயிரத்தளி எனும் கோயில் இருந்த இடமாக இருக்கலாம் என்றும், நடுவே ஒரு பெரிய லிங்கத்தை வைத்துச் சுற்றிலும் ஆயிரம் லிங்கம் வைத்துக் கோயில் எடுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்றும், அதன் தடயங்கள் உள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். தற்போது நியமத்தில் சில சிவலிங்கங்கள் மட்டுமே சாலை ஓரங்களிலும், வயல்வெளிகளிலும் கிடக்கின்றன. மேலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் காவிரி உடைப்பெடுத்துப் பெருவெள்ளம் பெருகிய போது ஏற்பட்ட உடைப்பை அடைப்பதற்குக் கிராமமக்கள் மணல் மூட்டைகளோடு பரவிக்கிடந்த நூற்றுக்கணக்கான சிவலிங்கங்களையும் காவிரிக்கரையில் போட்டுக் கரையைப் பலப்படுத்தியதாக அறிகிறோம். இதனால்தான் நியமத்தில் ஆயிரம் சிவலிங்கங்களையும் காணமுடியவில்லை. ஆனாலும் ஒருசிலவற்றைக் கொண்டு ஆயிரத்தளியாம் சகஸ்ரலிங்கேஸ்வரம் இருந்த இடத்தை ஊகிக்க இயலும்.

இதனை ஒத்தே வீரசிங்கம்பேட்டை வயிரங்காச்சித் தோப்பில் (திரு. சுப்பிரமணியம் என்பவருக்குரிய இடத்தில்) மிகப்பெரிய சிவலிங்கம் புதைந்துள்ளதாக ஊரார் கூறுகின்றனர். இத்தோப்பில்தான் முன்னர் கூறப்பெற்ற நூற்றுக் கணக்கான சிவலிங்கங்களும் கிடைத்துள்ளன. எனவே ஆயிரம் லிங்கங்கள் இடம்பெற்றிருந்த ஆயிரத்தளியாம் திருக்கோயில் இருந்த இடம் வயிரங்காச்சித் தோப்பு என்பது தெளிவு. இத்தோப்பில் தொல்லியல் துறையார் அகழ்வாய்வு மேற்கொண்டால் மேலும் பயனுள்ள தகவல்களைப் பெறமுடியும்.

திருவொற்றியூர் - சதுரானனபண்டிதர் பற்றி கூறும் கல்வெட்டை ஆய்வு செய்து எபிகிராபிகா இண்டிகா எனும் நூலில் (Vol. xxvii) எழுதிய டாக்டர் இராகவன் அவர்கள் தம் கட்டுரையில் திருவான்மியூர் புராணத்தைக் குறிப்பிட்டு அதன் 12 ஆவது சர்கத்தில் பல்லவமன்னன் ஒருவன்

திருவொற்றியூரில் 500 சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டதோடு கங்கைக் கரையிலிருந்து பல அந்தணர்களைக் குடியேற்றி வழிபாடு மேற்கொண்டதாகக் குறிப்பு உள்ளது என்று கூறுகின்றார். பின்பு சதுரானன பண்டிதர்பற்றியும் காளாமுக பாசுபதம் பற்றியும், அவை சிறப்பாகப் போற்றப் பெற்ற ஒரு இடம் திருவொற்றியூர் என்றும் குறிப்பிடுகின்றார்.

பல்லவர்கள் காலத்தில் பலநூற்றுக்கணக்கான சிவலிங் கங்களை ஒன்றாக வைத்து வழிபடும் ஒரு நெறிபற்றியும் பல்லவர்கள் காலத்திலிருந்து சோழர்கள் காலம்வரை லகுளீச – சோமசித்தாந்தங்கள் தமிழகத்தில் சிறப்பிடம் வகித்தது பற்றியும் அறிகிறோம்.

ஆயிரம் இலிங்கங்கள் வழிபடப் பெற்ற நியமமும், நந்திபுரமும் பல்லவர்கள் போற்றிய கடிநகரங்களே. இரண்டாம் நந்திவர்மன் காலத்திலோ அல்லது தந்திவர்மன் மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கன் ஆகியவர்களில் யாரோ ஒருவர் காலத்திலோ தான் இங்கு ஆயிரத்தளி எனும் திருக்கோயில் எடுக்கப் பெற்றிருக்க வேண்டும். இது லகுளீச – சோமசித்தாந்தங்களின் வழியில் வந்த மடாதிபதிகளால் போற்றப் பெற்றிருக்க வேண்டும் என்பதே இவ்வாய்வின் தெளிந்த முடிபாகும்.

## வாகீஸ்வரர் வழிபாடு

நந்திபுரத்துக் கள ஆய்வில் கிடைத்த பல்வேறு சிற்பங்களில் வாகீஸ்வரன் வாகீஸ்வரி திருமேனிகள்தான் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழகக் கலை வரலாற்றில் இத்தகையதொரு தனிவடிவம் நந்திபுரமாம் ஆயிரத்தளியை மையமாகக் கொண்ட இப்பகுதியில் மட்டுமே போற்றப்பெற்றிருந்திருக்கிறது. கண்டியூர்க் கோயிலில் ஒரு மூர்த்தியும், செந்தலைக் கோயிலில் ஒரு மூர்த்தியும், நாலுசாமி மேட்டில் ஒரு மூர்த்தியும் (தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்) கரந்தையில் தனிக்கோயிலில் இடம்பெற்றிருந்த ஒரு மூர்த்தியும் (தஞ்சைக் கலைக்கூடம்) வீரசிங்கம் பேட்டையில் மூன்று மூர்த்திகளும், தேவியர் சிற்பங்களும் உள்ளன. இவை மட்டுமன்றி இங்கிருந்து எடுத்துச்



வாகீஸ்வரர் - கரந்தை
(கலைக்கூடம் - தஞ்சாவூர்)

செல்லப்பெற்ற மூன்று வாகீஸ்வரர் திருமேனிகள், ஆல்பிரட் நாக்ஸ் கலைக்கூடம், பப்பலோ–அமெரிக்கா, மியூசியம் ஆப் பைன் ஆர்ட்ஸ் – பாஸ்டன் – அமெரிக்கா, மற்றும் பம்பாயில் உள்ள தனியார் கலைக்கூடம் ஒன்றிலும் உள்ளன.

தனித்தன்மை வாய்ந்த இந்த வகைக் கற்சிற்பங்களைத் தமிழகத்தின் பிறபகுதிகளிலோ மற்றபிற மாநிலங்களிலோ காண இயலாது. சுமார் 5 1/2 அடி உயரமுடன் திகழும் இவ்வகைச் சிற்பங்களில் சிவபெருமான் தாமரை மலராகிய பீடத்தில் சுகாசன கோலத்தில் அமர்ந்துள்ளார். வலதுகால் தொங்கவிடப்பட்டு இடதுகால் பத்மபீடத்தில் மடிந்த நிலையில் உள்ளது. முழங்கால் வரை இடுப்பாடை எழில் செய்கிறது. சடாமகுட தாரியாய் நான்கு திக்கும் நோக்கும் நான்கு முகங்கள், நான்கு கரங்களுடன் கம்பீரமான உடற் கட்டோடு அமர்ந்துள்ளார். சடைமுடியில் பிறைச்சந்திரன் அழகுடன் திகழ்கிறது. நான்கு முகங்களிலும் நெற்றிக்கண் உண்டு. ஒவ்வொரு முகத்திலும் ஒருசெவியில் பத்ர குண்டலமும், மற்றதில் மகரக் குழையும் உள்ளது. எழில்மிகு கழுத் தணிகளோடு மூன்று மணிச்சரங்கள் உடைய பட்டையான புரிநூல் (யக்ஞோபவிதம்) மார்பை அலங்கரிக்க உதரபந்தமும் உள்ளது. புஜங்களில் கேயூரமும், கைகளில் காப்புகளும், காலில் கழல்களும் உள்ளன. வலது மேற்கரம், திரிசூலம் தாங்கும் வடிவிலும் (சிலசிற்பங்களில் திரிசூலம் காட்டப் பெற்றுள்ளது. (உ–ம்) பம்பாய் கலைக்கூடம், திருநெய்த் தானத்து சிற்பங்கள்) இடது மேற்கரம் அக்கமாலை ஏந்தியும், வலது கீழ்க்கரம் தாமரை மலர் பிடித்தும் இடது கீழ்க்கரம் தொடைமேல் சுவடி ஏந்தும் கோலத்திலும் (சிலசிற்பங்களில் சுவடி காட்டப்பெற்றுள்ளது) உள்ளன.

சிவபெருமானை மகாசதாசிவனாக வழிபடுவது ஒருவகை நெறியாகும். பல்லவர்களும் சோழர்களும் மகா சதாசிவ மூர்த்தத்தினைப் பல்வகை வடிவுகளில் வடித்துப் போற்றினர். நந்திபுர நகரத்தினைத் தோற்றுவித்த இரண்டாம்

*நந்திவர்மனின் வரலாறு கூறும் உதயேந்திரம் செப்பேடுகளின் முதல் சுலோகம் சதாசிவ வணக்கம் கூறித்தான் துவங்குகிறது.*

முதல் ஏட்டின் முதல் சுலோகம்

ஸ்ரீ ஸ்வஸ்தி:



**இதன் தமிழாக்கம்**

*"மங்களம் உண்டாகட்டும்*

*மூவுலகத்தின் மேன்மைக்காகச் சுமேரு மலையின் உச்சியிலே சிறந்த யோகபந்த நிலையில் அமர்ந்திருப்பவரும் சூரியசந்திரர்களை இரு கண்களாக உடையவரும் உமையுடன் கூடியவரும், ஆதரவுடன் மேன்மையளிக்கக் கூடிய உதயசந்திரனுக்குத் திருவை அளிக்கக் கூடியவரும் சடைமுடி தரித்தவருமான சதாசிவனை நான் வணங்குகிறேன் என்பதே இத்தமிழாக்கமாகும்.*

*சதாசிவ வடிவம் பற்றிக் கூறும் சிற்ப ஆகமநூல்கள், அவர் வடிவைப் பஞ்ச பிரமன் என்றே கூறுகின்றன.*

*" பஞ்சப்ருஹ்மதநுஸ் சாக்ஷாத்*
*ஸ சிவேபூத் ஸதாசிவ:"*

*எனவேதான் அவர் வடிவை ஐந்துமுகமுடைய வடிவாகவோ ஐந்து உடல்கள் இணைந்த வடிவாகவோ சிற்பங்களில் வடித்தனர். சதாசிவன் ஐந்து முகமுடையவராக 4 வேதங்களையும் 6 அங்கங்களையும் அளித்தார் .. . " எனக் கூறப் பெறுகின்றது. "ஐந்து முகமுடைய இவ்வள்ளல் ஞானம் உரைக்கவில்லை என்றால் இவ்வுலகம் அறியாமை இருளில்தான் மூழ்கி இருந்திருக்கும்" – என்பது ஆகமங்களின் கூற்று.*



வாகீஸ்வரர் - ஆல்பிரைட் நாக்ஸ் கலைக்கூடம
பஃபலோ - அமெரிக்கா (உயரம் 162-6 c. m.)

" பஞ்ச வக்த்ரஹரோ பூத்வா
பஞ்ச பூதைர் முகைரபி
வேதாதி க்ரந்த ஜாலம் யத்
தத் ஸர்வம் அவதத் ப்ரபு:"

சதாசிவமூர்த்தியின் தியான சுலோகம்

பஞ்ச வக்த்ரே தஸபுஜ: ஹ்யக்ஷபஞ்ச தஸைர்யுத: I
ஸுத்தஸ்படிக சங்காஸ: ஸர்வாபரண பூஷித: II
சர்வஞ: ஸர்வக: ஸாந்த: ஸர்வோபரி ஸுஸம்ஸ்தித: I
பத்மாஸனஸ்த: ஸோமேஸ: பாபம் ஆஸு வ்யபோஹது II

ஆகமங்கள் சதாசிவமூர்த்தியின் முகங்களைக் கிழக்கு நோக்கியது தத்புருஷம் என்றும் தெற்கு நோக்கியது அகோரம் என்றும் மேற்கு நோக்கியது சத்யோஜாதம் என்றும் வடக்கு நோக்கியது வாமதேவம் என்றும் முகத்தின் உச்சியில் உள்ளது ஈசானம் என்றும் பெயரிட்டு அழைக்கின்றன. ஈசான முகத்தினை வடிவின்றி லிங்கத்தின் சிரசாக கொள்ளல் வேண்டும் என்றும் உரைக்கின்றன.

எனவே சதாசிவ வடிவம் லிங்க மூர்த்தமாயினும் வேறு வடிவாயினும் பெரும்பாலும் நான்கு முகங்களோடு தான் வடிக்கப் பெறுவதாகும்.

தென் ஆர்க்காடு மாவட்டம் திருவதிகைக் கோயில் பல்லவர் காலத்தியதாகும். இங்கு மூன்றாம் நந்திவர்மன் மற்றும் நிருபதுங்க பல்லவன் காலத்தில் பல திருப்பணிகள் நிகழ்ந்தன. அவர்கள் காலத்தில் வடிக்கப் பெற்ற அரிய சதுர்முக இலிங்கம் ஒன்று அத்திருக்கோயில் திருச்சுற்றில் இன்றும் உள்ளது. பீடத்தின் மேல் காணப்படும் பாணத்தில் நான்கு திக்குகளிலும் முறையே தத்புருஷம், அகோரம், சத்யோஜாதம்,வாமதேவம் ஆகிய முகங்கள் உள்ளன. பாணத்தின் உச்சியாகத்திகழும் வளைந்த சிரசு இங்கு ஈசான முகமாக வடிவின்றி உள்ளது. இது போன்று வடிக்கப்பெற்ற பஞ்சமுகலிங்கங்கள் திருவானைக்கா, திருக்காளத்தி போன்ற திருக்கோயில்களில் வழிபாட்டில் உள்ளன.

இலிங்க வடிவின்றிச் சதாசிவனை நான்கு முகங்கள் கொண்டு முழு உடல் மூர்த்தியாக வடித்தும் போற்றினர்.



சதுர்முகலிங்கம்



தஞ்சைப் பெரிய கோயிலின் முதற் கோபுரத்தில் (கேரளாந் தகன் திருவாயில்) 4 முகங்களும் (ஐந்தாம் முகம் மறைந்த நிலையில்) பத்துக் கரங்களும் கொண்டு பத்மபீடத்தில் அமர்ந்த கோலத்தில் வடிக்கப் பெற்ற சுதைச் சிற்பங்கள் இரண்டு உள்ளதை இன்றும் காணலாம்.

இதே திருக்கோயிலில் காணப்படும் இராஜராஜனின் கல்வெட்டொன்று "பஞ்ச தேகமூர்த்தி" என்ற செப்புத் திருமேனி பற்றி விவரிக்கின்றது.

கல்வெட்டு

***ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ராஜராஜதேவர் உடையார் ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் உடையார் கோயில் யாண்டு இருபத் தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனி: உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின.***

***பஞ்ச தேஹமூர்த்திகளில் பதாதி கேசாந்தம் இருபத்திருவிரலே நான்கு தோரை உசரத்து பத்து ஸ்ரீஹஸ்தம் உடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த திருமேனி ஒருவர்;***

***இவரோடுங் கூட நாலுமுகத்திலும் பாதாதி கேசாந்தம் பதினால் விரல் உசரத்து நந்நாலு ஸ்ரீ ஹஸ்தங்கள் உடையர்களாகக் கனமாக எழுந்தருளுவித்த திருமேனி நாலு;***

***இவர் எழுந்தருளி நின்ற மூவிரலேய் நான்கு தோரை உசரத்துப் பதின் ஐய் விரலேய் நான்கு தோரைச் சமசதுரத்து பத்மபீடம் ஒன்று***

என்று விவரிக்கின்றது.

தமிழகத்தில் எந்த ஒரு கோயிலிலும் இவ்வாறு ஒரு மூர்த்தி செப்புத் திருமேனி வடிவிலோ, கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெற்றோ காண முடியாது. அரிதாய்த் தஞ்சையில் இராஜராஜனால் வடிக்கப் பெற்ற இத்திருமேனி பின்னாளில் மறைந்து விட்டது. கல்வெட்டுக் கூறும் இவ்வடிவினை வரைபடமாகத் தந்துள்ளோம். இது ஐந்து உடல்கள் இணைந்த ஒரு அரிய திருவுருவமாகும்.

இராஜராஜன் எடுத்த திருக்கோபுரத்துச் சுதை உருவமும் வடித்த செப்புத் திருமேனியும் மகாசதாசிவ உருவம்



பஞ்சதேகமூர்த்தி

கொண்டு திகழ்வதோடு புதுமையான வடிவங்களாகவும் இருப்பதற்கான காரணம் இவன் போற்றிய வழிபாட்டு நெறியாகத் தான் இருக்க முடியும். இவனது இராஜகுருவாகத் திகழ்ந்தவர் ஈசான சிவபண்டிதர். இவர் லகுளீச பாசுபதம் உரைக்கும் மரபினர். இராஜராஜன் காலத்திலும் பின்வந்த சோழமன்னர்கள் காலத்திலும் லகுளீச பாசுபதநெறி மிகவும் போற்றப் பெற்றது. எனவேதான் இவர்கள் போற்றிய சதாசிவ வடிவமே அவர்கள் எடுத்த திருக்கோயில்களிலும் இடம் பெறலாயிற்று.

திருவதிகைத் திருக்கோயிலில் உள்ள சதுர்முகலிங்க உருவம் நந்திவர்மன் அல்லது நிருபதுங்கன் காலத்தியது என்பதை முன்னரே கண்டோம். நந்திவர்மன் காலத்திலிருந்து இராஜராஜன் காலம் கடந்தும் சிவபெருமானைச் சதுர்முகனாக, சதாசிவனாக வணங்கும் நெறி தமிழகத்தில் சிறந்து திகழ்ந்தது என்பதை அறிகிறோம். இவ்வாறு சதாசிவ வழிபாடு சிறப்புற போற்றப் பெறும் நாளில் நந்திபுரமாம் ஆயிரத்தளி நகரில் சதுரானனாகத் திகழும் வாகீச மூர்த்தி வழிபாடு தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தது என்பதை அப்பகுதியில் இது காறும் கிடைத்துள்ள பல சிற்பத் திருவுருவங்களால் அறிய முடிகின்றது.

நான்முகனாம் பிரமனைப் போன்றே நான்கு முகங்கள் பெற்று அக்கமாலை, சுவடி, தாமரை ஏந்திய கோலத்தில், பதுமநன்மலரில் அமர்ந்த நிலையில் வாகீச மூர்த்தி திகழ்வதாலும், வீரட்ட தலங்களுள் கண்டியூர் பிரமன் கதையோடு தொடர்புடையதாகத் திகழ்வதாலும், இதுகாறும் கண்டியூர்ப் பகுதியில் கிடைத்த இத்திருமேனிகளைச் (கற்சிற்பங்கள்) சிற்ப இயல் வல்லுநர்கள் பலரும் பிரமன் சிலை என்றே குறித்தனர். இவர்கள் இத்திருமேனிகளின் சடையில் பிறைச்சந்திரன் இருப்பதையும், நான்கு முகங்களிலும் நெற்றிக்கண் உள்ளதையும், சில சிற்பங்களில் மூவிலைச் சூலம் இருப்பதையும் நோக்காமையால்தான் இவ்வாறு தவறான முடிவு கொண்டனர்.

''புவம்வளி கனல்புனல் புவிகலை யுரை மறை
திரிகுணம் அமர் நெறி திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும்
உயிரவை யவைதம, பவமலி தொழிலது நினைவொடு

*பதுமநன்மலரது மருவிய சிவனது சிவபுரம் நினைபவர்
செழுநிலனினில் நிலை பெறுவரே"*

– எனத் திருஞானசம்பந்தர் திருச்சிவபுரத்துப் பதிகத்தில் பாடும்போது "பதுமநன்மலரது மருவிய சிவனாராக' வாகீச மூர்த்தியைக் குறிப்பிடுகின்றார்

*" நங்கையைப் பாகம் வைத்தார்
ஞானத்தை நவில வைத்தார்
அங்கையில் அனலும் வைத்தார்
ஆனையின் உரிவை வைத்தார்
தங்கையின் யாழும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையுள் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே*

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் கொண்ட உமையொரு பாகன், தெட்சிணாமூர்த்தி, ஆடல்வல்லான், கஜசம்ஹாரமூர்த்தி, வீணாதாரர், வாகீஸ்வரர், கங்காதரர் என்ற பல்வேறு வடிவுகளைக் காட்டித் திருக்கழிப்பாலை ஈசனைப் பாடுகின்றார்.

"குண்டரொடு பிரித்தெனையாட்கொண்டார் போலும் குடமூக்கிலிடமாகக் கொண்டார் போலும், புண்டரீக புதுமலரா தனத்தார் போலும், புள்ளரசை கொன்றுயிர் பின்கொடுத்தார் போலும், வெண்டலையிற் பலிகொண்ட விகிர்தர் போலும் வியன் வீழிமிழலை நகருடையார் போலும்.........." எனத் திருவீழிமிழலைப் பதிகத்திலும்

*" தளம் கிளரும் தாமரை ஆதனத்தான் கண்டாய்
தசரதன் தன் மகன் அசைவு தவிர்த்தான் கண்டாய்"*

என்று திருவலஞ்சுழி–திருக்கொட்டையூர் கோட்டீச்சரத்துப் பதிகத்திலும் (VI–73–9) அப்பர் சுவாமிகள் வாகீச சிவனாரைக் குறிப்பிடுகின்றார்.

*பாழ்ச் செய் விளாவிப் பயன்
இலி ஆய்க் கிடப்பேற்குக்
கீழ்ச் செய் தவத்தால்
கிழியீடு நேர்பட்டுத்*





வாகீஸ்வரி - வயிரங்காச்சித்தோப்பு

தாள் செய்ய தாமரைச்
சைவனுக்கு என் புன் தலையால்
ஆள் செய் குலாத் தில்லை
ஆண்டானைக் கொண்டு அன்றே

(திருவாசகம்–குலாப்பத்து–9)

என்று மணிவாசகப்பெருமானார் சதுராननனாகிய வாகீச சிவனாரை "தாமரைச்சைவனாகக்" காட்டுகின்றார்.

பிரபஞ்ச சாரசார சங்கிரஹம் எனும் சுவடி நூல் ஹோமம் செய்யும் முறைகளையும் விதிகளையும் பற்றி விரிவாகக் கூறுகின்றது. இதில் பரமேஸ்வரனையும், பரமேஸ்வரியையும் வாகீஸ்வரராகவும், வாகீஸ்வரியாகவும் ஆவாகித்து வாகீஸ்வரன் வாகீஸ்வரி திருவருளால் அத்தேவியின் கர்ப்பத்திலிருந்து அக்னி பிறந்து, அந்த அக்னி புத்திரனுக்கு நாமகரணம் சூட்டிப் பின்பே வேள்விக் குண்டத்தில் தீ மூட்டப்படவேண்டும் என்றும், அத்தீயின் நாக்குகள் ஏழாகப் பெருகும் போது பூரணாகுதி செய்யப் படவேண்டும் என்றும் விவரிக்கின்றது.

அஜிதாகமம் எனும் நூல் வாகீஸ்வரன் வாகீஸ்வரி ஆகியோரை ஆவாஹனம் செய்யும் முறையையும் தியான சுலோகங்களையும் கூறுகின்றது.

### வாகீஸ்வரி வாகீஸ்வரயோ: ஆவாஹனம்

63. தத்ரைவ ஸம்ஸ்க்ருதே குண்டே வாகீஸீமக்னி மாதரம்
வாகீஸ்வரம் சபிதர மாவாஹ்ய ஸ்தாப்ய சார்ச்சயேத்

64. ஹ்ருன் மந்த்ரேனைவ கந்தாத்யை: தயோ ரூபமிதம் ஸ்ருணு
வாகீஸீ ஸா பவேத் கௌரீ வாகீஸ: ஸ்யான் மஹேஸ்வர:

65. த்ரிநேத்ரம் சதுர்புஜம் தேவம் பத்மராக ஸமத்யுதம்
வரதாபயதம் சைவ சூலபாஸதரம் கரை:

66. வாகீஸீம் புண்டரீகாபாம் சதுர்ஹஸ்தாம் கனஸ்தநீம்
வ்யாக்யாந புஸ்தகாப்யாம் து கமண்டல் வக்ஷதாரிணீம்
ஏவம் த்யாயீத தௌ தேவௌ:

காரணாகமும் வாகீஸ்வன் வாகீஸ்வரி பற்றிய சுலோகங்களையும் கூறுகின்றது.

காரணாகமம் முதற்பகுதி 20, 374–375

த்ரிநேத்ரம் பஞ்சவக்த்ரம்ச சதுர்ஹஸ்தம் ததைவச
ஜடாமுகுடம் ஸம்யுக்தம் ஸர்ப்பபூஷேந்து பூஷிதம்
ஜுவல கபால சம்யுக்தம் அபயம் வரதம் ததா
வாகீஸம் பூஜயேத்

காரணாகமம் முதற்பகுதி 20, 371б–372

ஸ்யாமாபாம் ஸுக்ல வஸ்த்ராங்கீம்
ஜடாமகுட மண்டிதாம்
யௌவனாம் ச ருதுஸ்நாதாம்
ஸர்வாபரண பூஷிதாம்
அபயவரதோபேதாம் வாகீஸீம்சைவ பூஜயேத்

தேவாரம் திருவாசகம் போன்ற நூல்களாலும் அஜிதாகமம், காரணாகமம் போன்ற ஆகமங்களாலும் பரக்கப் பேசப்படுகின்ற வாகீசசிவனார் மற்றும் வாகீஸ்வரி கற்சிற்பங்கள் பல இன்று கண்டியூர், நாலுசாமிமேடு, வீரசிங்கம் பேட்டை, ஆகிய சிற்றூர்களில் சிதைவுற்று ஆங்காங்கே கிடப்பதோடு திருவையாறு தென்கயிலாயகோஷ்டத்திலும், திருநெய்த்தானத்துத் திருச்சுற்றிலும் அபூர்வ கோலங்களில் உள்ளன.

கண்டியூர் கோயிலில் கருவறையின் அதிஷ்டானத் திலுள்ள சிற்றுருவச் சிற்பங்கள் வரிசையில் தாமரை மலரில் அமர்ந்த நிலையில் வாகீஸ்வர சிவனார் திகழ ஒருபுறம் மாலவனும் மறுபுறம் நான்முகனும் போற்றி வணங்கி நிற்கின்றனர். மேலே இணை சாமரங்கள் உள்ளன. இரண்டு சனகாதி முனிவர்கள் (ஒருவர் தாடியுடனும், மற்றவர் தாடியின்றியும்) (ஞானம் உரைக்கும் பரமனின் உபதேசங்களை வாய்பொத்திக் கேட்டு அமர்ந்துள்ளனர்

இவ்வாறு நந்திபுரமாம் ஆயிரத்தளியும் சுற்றுப்புற ஊர்களும் வாகீஸ்வரன் வாகீஸ்வரி சிற்பங்களைப் பெற்று வரலாற்றில் நீங்கா இடம் பெற்று நிற்கின்றன.

# லகுளீச பாசுபதம் – தமிழக மையம்

காளாமுகம், பாசுபதம், மாவிரதம், கபாலிகம் போன்றவை பல்லவர் காலத்தும் பின்பும் தமிழகத்தில் திகழ்ந்த சிவவழிபாட்டு உட்சமயங்களாகும். கபாலிகம், காளாமுகம் போன்ற நெறிகள் கடுமையான பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தன. இதில் பாசுபதம் சற்று மாறுபட்ட நெறியுடையது. சிவபெருமானை பரம் பொருளாகக் கொண்டு பசுபதி (உயிர்களுக்கெல்லாம் தலைவன்) என்ற பெயரில் அவனை வழிபட்டனர். இந்நெறியில் லகுளீசர் என்றவரின் சித்தாந்தங்களோடு தோன்றியதே நகுலீச பாசுபதம் அல்லது லகுலீசபாசுபதமாகும்.

இவர்கள் மகேச்சுரர் எனவும் அழைக்கப்பட்டனர். பசுபதியையும் இலிங்கங்களையும் வழிபட்டனர். சிவனையும் கணங்களையும் இணைத்து வழிபட்டனர். உயர்ந்த பாசுபத விரதம் ஞானம் என்பதாகும். சிவன் யோகாசிரியனாக வந்து குரு, ததிச. அகத்தியர் உபமன்னியு முதலியவர்களுக்கு உபதேசம் செய்வதாகப் பொற்றுவர்.

சோழநாட்டில் திருநாவுக்கரசர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்) சிவபெருமானைப் போற்றும் பல்வேறு பிரிவினர்களும் வாழ்ந்தனர் என்பதை தம் திருவாரூர் பதிகத்தில் குறிப்பிடுகின்றார். உருத்திர பல்கணத்தார், மாவிரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், காபாலிகர் போன்ற உட்பிரிவுகளின் செல்வாக்கு சோழநாட்டில் கமழ்ந்ததை ;

" அருமணித்தடம் பூண்முலை அரம்பையரொ டருளிப் பாடியார்
உரிமையிற் தொழுவார் உருத்திர பல்கணத்தார்
வரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் காபாலிகள்
தெருவினிற் பொலியுந் திருவாரூ ரம்மானே

(4 ஆம் திருமுறை)

என்று பாடுகின்றார்.

குடந்தைக் காரோணம், நாகைக்காரோணம் எனும் திருக்கோயில்கள் "காயா ரோஹணம்" எனும் பாசுபத

சித்தாந்தத்தின் அடிப்படையில் எழுந்தவையே. மாமன்னன் இராஜராஜனின் இராஜகுருவாகத் திகழ்ந்தவர் ஈசானசிவ பண்டிதர். இதனைத் தஞ்சைக் கல்வெட்டு "உடையார் ராஜராஜதேவர் குருக்கள் ஈசானசிவ பண்டிதர்"என்று கூறுகின்றது. இவரே தம் இறுதிக் காலம் வரை இராஜேந்திர சோழனுக்கும் குருவாகத் திகழ்ந்தவர். இவருக்குப் பின் இராஜ குருவாகத் திகந்தவர் சர்வசிவபண்டிதர்.இவர்கள் அனைவரும் பாசுபத பிரிவைச்சார்ந்தவர்களாவர். இவர்களுக்கு பின்னாளில் உருவச் சிலைகள் எடுக்கப் பெற்றதைத் தஞ்சைக் கல்வெட்டுக்களும், எசாலம் செப்புப்படிமமும் உறுதிசெய் கின்றன. பாசுபதமூர்த்தியின் செப்புத்திருமேனிகளும் எடுக்கப்பெற்றன.

சோழ மன்னர் இராஜாதித்தனின் தளபதியான ஸ்ரீவல்லபன் பின்னாளில் சதுரானனன் எனும் பெயரில் லகுளீசபாசுபத பண்டிதராகத் திகழ்ந்தமையை திருவொற்றியூர் கல்வெட்டுக்கள் (எபிகிராபிகா இண்டிகா தொகுதி 27 பக். 297,300) கூறுகின்றன. சோழ மன்னர்கள் லகுளீச பாசுபத நெறிக்கு மிகவும் ஆக்கம் தந்தனர். என்பது அவர்கள்தம் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், திருக்கோயிற் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், வாயிலாக உறுதிப் பெறுகின்றது.

இவர்களது செல்வாக்கு பல்லவர்கள் காலத்திலேயே நந்திபுரத்தில் தோன்றி இருக்க வேண்டும். எனவேதான் ஆயிரத்தளியும் வாகீச வழிபாட்டு நெறியும் இப்பகுதியிலே மட்டுமே காணப் பெறுகின்றது. சோழர்கள் காலத்திலும் இங்கு மேலும் தழைக்கலாயிற்று. அதனால்தான் லகுளீச பண்டிதர் ஸர்வசோம பண்டிதர் போன்றவர்களுக்கு ஆசார்ய போகமாக நிலம் ஆயிரத்தளியில் இராஜேந்திர சோழனால் வழங்கப் பெற்றிருந்தன. எனவே இதுகாறும் கண்ட சான்றுகள் அடிப்படையில் நோக்கும்போது மிகச்சிறந்த லகுளீச பாசுபதம் வளர்ந்த தென்னக மையமாக நந்திபுரத்து ஆயிரத்தளி திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை.

# வீரசிங்கம் பேட்டை - பெயர் மாற்றம்

பண்டைய நந்திபுரத்து ஆயிரத்தளி பின்னாளில் வீரசிங்கம் பேட்டை எனப் பெயர் மாற்றம் பெற்றுத் திகழ்வதைக் கண்டோம். இம்மாற்றம் எப்போது ஏற்பட்டது என்பதனைக் கண்டியூருக்கு அருகில் உள்ள திருப்பூந்துருத்தி கல்வெட்டொன்றின் வாயிலாக அறிய முடிகிறது.

திருப்பூந்துருத்திச் சிவாலயத்து மகாமண்டபத்துச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு கி.பி 1415 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை எழுதப் பெற்ற சாசனமாகும். இதில் விஜயநகரப் பேரரசர் வீரபூபதி உடையார் ஆளுகையின் கீழ் இப்பகுதிக்குக் குறுநிலத் தலைவனாய்த் திகழ்ந்த **அழகிய திருச்சிற்றம்பலமுடையான் வீரசிங் கராயன்** என்பவன் திருப்பூந்துருத்தி ஈசனுக்குத் திருநாமத்துக் காணியாக அளித்த அறக்கொடை விவரிக்கப் பெற்றுள்ளது.

இவனது ஊர் பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டு கூற்றத்து சிற்றரசூர் என்றும் இக்கல்வெட்டுக் குறிக்கின்றது. இவ்வூர் கண்டியூரினை அடுத்த ஊராகும். எனவே 15 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இத்தலைவன் தன்பெயரால் நந்திபுரத்தினை வீரசிங்கம்பேட்டை எனப் பெயர் மாற்றம் செய்திருக்க வேண்டும் எனக் கருத இயலுகின்றது.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் உள்ள திருப்பாலைத்துறைத் திருக்கோயிலின் முதல் திருச்சுற்றில் வடபுறம் தரையில் பாவப்பட்டுள்ள கற்பலகையில் கல்வெட்டுச் சாசனம் ஒன்று பொறிக்கப் பெற்றுள்ளது. தமிழ் விக்கிரம ஆண்டுக் குறிப்புள்ள இச்சாசனத்தில் வீரநரசிங்கராய நாயக்கனின் பிரதிநிதி ஒருவன் அளித்த நிலக்கொடை குறிக்கப் பெற்றுள்ளது. கல்வெட்டு எழுத்தமைதி கொண்டு நோக்கும்போது திருப்பூந்துருத்திச் சாசனம் கூறும் தலைவன் இவனே எனக் கருத முடிகின்றது.

இச்சாசனச்சான்றுகளால் நந்திபுரம் எனும் ஆயிரத்தளி நகரம் கி.பி. 1400 க்குப் பின்பே வீரசிங்கம்பேட்டை எனும் ஊராகவும், செங்கமேடு எனும் சிற்றூராகவும் பிரிந்தது என்பதை அறியமுடிகின்றது. பாண்டியர்களின் ஆட்சிக்குப் பின்பும், மாலிக்காபூரின் தாக்குதலை அடுத்தும் ஆயிரத்தளி அழிந்து விஜயநகர அரசின்போதே வீரசிங்கம்பேட்டையாக மாறியது என்பதை அறிகிறோம்.

எட்டாம் நூற்றாண்டில் சோழநாட்டில் தோன்றிய பல்லவர் தம் கடிநகரமாம் நந்திபுரம் பின்னாளில் சோழப் பெருமன்னர்கள்ால் நானூறு ஆண்டுகளுக்கு மேலாகப் போற்றப்பெற்றது., பாண்டியர்களாலும் பாதுகாக்கப்பெற்ற பெருமை பெற்றது. நந்திபுரத்து அரண்மனையின் அரியாசனம் இரண்டாம் நந்திவர்மனில் தொடங்கி, பல்லவ, சோழ, பாண்டிய பேரரசர்கள் தொடர்ந்து அமர்ந்த பெரும் சிறப்புடையது. மாட மாளிகைகளும், வலுவுடைய அரண்களும், ஆயிரத்தளியாம் பெருங்கோயிலும், நவமணிக் குவியலும், பெருநிதியமும் பெற்று 600 ஆண்டுகள் தலை நிமிர்ந்து நின்ற இப் பெருநகரம் மண்ணோடு மண்ணாக அழிந்தது. இம் மண்ணின் பெயர்கூட மறைந்தது தான் வேதனை...! இத்தனையும் எதனால் நிகழ்ந்தது? தாயத்தார் பூசலே...! மணிமுடி பெறப்பாண்டியர்களுக்குள் ஏற்பட்ட பகைமை .மாலிக்காபூரைத் தில்லியிலிருந்து இங்கு அழைத்து வந்தது. விளைவோ யாருக்கும் மணிமுடி கிட்டவில்லை...! நந்திபுரம் தான் அழிந்தது. இதுவே வரலாறு நமக்குப் புகட்டும் பாடம்.

# துணை நூற்பட்டியல்

01. South Indian Inscriptions.
Vols. II, III, IV, V, VI, VIII, XII, XIII, XVII, and XIX

02. Annual Report of Epigraphy For the years 1890, 92, 95, 99, 1901, 4, 6, 8, 11, 14, 24, 26, 27, 28, 29, 30, 31, 37, 38, 60, and 1961

03. Epigraphica Indica Vol. XI and XXII

04. Chronological list of inscriptions of Pudukkottai State part II

05. Indian Antiquary Vol. VIII

06. Memoirs of Archaeological Survey of India No. 63.

07. தென்னிந்திய கோயிற் சாசனங்கள்
டி.என். சுப்பிரமணியம், தொகுதி இரண்டு

08. நன்னிலம் கல்வெட்டு மூன்றாம் தொகுதி
தமிழ்நாடு அரசு தொல் பொருள் துறை 1978.

09. கல்வெட்டு கலைச் சொல் அகரமுதலி
சி. கோவிந்தராசனார், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1987

10. Political Geography of Cholamandalam
Y. Subarayalu, Tamil Nadu Archaeological, Department.

11. History of Pallavas of South India
R. Gopalan, Madras University.

12. History of South India
K.A. Nilakanta Sastri. Madras University.

13. The colas
- K.A. Nilakanta Sastri, Madras University, part I and II.

14. பல்லவர் வரலாறு
மா. இராசமாணிக்கனார், கழகப் பதிப்பு

15. பிற்கால சோழர் வரலாறு
தி.வை. சதாசிவ பண்டாரத்தார்
அண்ணாமலை பல்கலைக் கழகம்

16. Siva - Bhakati
R. Nagasamy, Navrang New Delhi 1989.

17. Innovative Emperor and his personal chapel
R. Nagasamy Marg. Publication.

18. Discourses of Siva
Ed. Michael W. Meister
University of Penusylramia - Philadelphia

19. The Kapalikas and Kalamukhas,
David N. Lorenzen, University of California Press,
Berkeley, Las Angels.

20. A guide to Pattadakal Temple
B.A. Saletore, Kannada Research Institute, Dharwer 1961.
21. Early Chola Temples
S.R. Balasubramaniyam.
22. Middle Chola Temples
S.R. Balasubramaniyam.
23. சோழர் கலைப் பாணி,
எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பாரி நிலையம், சென்னை
24. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர்
வே. மகாதேவன், அன்னபூர்ணா பதிப்பகம், சிதம்பரம் 1980.
25. திருவாரூர் திருக்கோயில்
குடவாயில் பாலசுப்பிரமணியம்
ஸ்ரீதியாகராஜர் திருக்கோயில், திருவாரூர்.
26. அருளுடைச் சோழ மண்டலம்
என். சேதுராமன், ராமன் & ராமன் கும்பகோணம்
27. வரலாற்று வடிவங்கள்
பாகூர் குப்புசாமி, சேகர் பதிப்பகம், சென்னை
28. பல்லவர் செப்பேடு முப்பது.
29. செந்தமிழ் – தொகுதி 22.
30. திருக்கோயில் (ஜூலை 1991 இதழ்)
இந்து அறநிலையத்துறை சென்னை
31. திருவெள்ளறை
V வேதாசலம் தமிழ்நாடு தொல்பொருள் துறை
32. திருவையாறு
S. இராஜகோபால், தமிழ்நாடு தொல்பொருள் துறை
33. Imperial Pondiyas
N. Sethuraman,Raman & Raman Kumbakonam.
34. Master pieces of Early South Indian
Bronzes - R. Nagasamy
National Museum, New Delhi
35. Bulletin De l'Ecole Francaise
D'Extreme - orient, Tome L X X VI Paris - 1987.
36. திருஞானசம்பந்தர் தேவாரம்
37. திருநாவுக்கரசர் தேவாரம்
38. மணிவாசகர் – திருவாசகம்
39. நாலாயிரதிவ்ய பிரபந்தம் – பெரிய திருமொழி
40. திருக்கோவலூர் கல்வெட்டுப் பாடல்
இரா. நாகசாமி., தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை.

இந்தியக்கலை பண்பாடுகளைப் பராமரிக்கவும் அதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கவும் நிறுவப்பட்ட ஒரு தேசீய நிறுவனம் INTACH. இது இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பன்முகத்தாலும் நம் பாரம்பர்யத்தைக் காக்க, சுற்றுப்புறச் சூழல்களைப் பேணிக்காக்க ஆவன செய்து வருகிறது. .... ...

இந்த ஆய்வு நூலில், ஆயிரத்தளி என்ற பெயர்பெற்ற பண்டைய நந்திபுரமானது, (அரண்மனை இருந்த நந்திபுரம்) இப்பொழுது கண்டியூருக்கு அருகில் உள்ள, வீரசிங்கம்பேட்டை என்றும் செங்கமேடு என்றும் அழைக்கப்படும் பகுதிகள்தாம் என நிறுவியுள்ளார் இந்நூலாசிரியர். இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஆய்வு.....

**இரா. நாகசாமி,**
இன்டாக் தென்னிந்திய ஆலோசகர்.

நடுவு நிலைமையோடு எப்பக்கமும் சாயாது, இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, களஆய்வு, சிற்ப ஆய்வு என்றுள்ள இவற்றையே சார்ந்து நல்லதொரு முடிவுகண்டுள்ளார் இந்நூலாசிரியர்.

சேக்கிழார் அடிப்பொடி
**தி. ந. இராமச்சந்திரன்**